# கிறிஸ்துநெறிப் பாவலர்கள்

வேதநாயகம் சாஸ்திரியார் — கிருஷ்ணபிள்ளை





தி. தயானந்தன் பிரான்சிஸ்

# கிறிஸ்துநெறிப் பாவலர்கள்

வேதநாயகம் சாஸ்திரியார் — கிருஷ்ணபிள்ளை

அருள்திரு. டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ்
M.A., Ph.D., D.Litt., D.D.,

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
சென்னை 600 003

*Published by*
THE CHRISTIAN LITERATURE SOCIETY
POST BOX 501, PARK TOWN, CHENNAI-600 003

**CHRISTU NERIP PĀVALARGAḶ**
**Vedanayagam Sastriyar and Krishnapillai**
in Tamil
By T. DAYANANDAN FRANCIS

© The Author

*First printed by*
The Dr. S. Radhakrishnan, Institute
For ADVANCED STUDY IN PHILOSOPHY,
University of Madras 1978

*Second Edition by C.L.S. in 1998*

*140th YEAR OF PUBLICATION*

Printed at the C.L.S. Press, Chennai-7. L6845

## அர்ப்பணம்

இருபெரும் கிறிஸ்தவக் கவிஞர்கள்

**அருள்திரு. வே. சந்தியாகு**

**அருள்திரு. வே. மாசிலாமணி**

ஆகியோருக்கு

— **தயா**

# முதற்பதிப்பின் முன்னுரை

இச்சிறு நூலில் அடங்கும் உரைகள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பொன் விழாவினை ஒட்டி அமைந்த சொற்பொழிவு வரிசையில் இடம் பெற்றவை. இவ்வுரைகளில் இரு பெரும் கிறிஸ்தவத் தமிழ்க் கவிஞர்களான வேதநாயக சாஸ்திரியார், கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் எழுத்துக்களைப் புரிந்து கொள்ள முயல்வோருக்குத் துணையாக அமையக்கூடிய சில குறிப்புக் களையே தந்துள்ளேன். அவை எந்த வகையிலும் நிறைவுடை யவை அல்ல. தமிழ்க் கிறிஸ்தவத்தை அறிந்து கொள்வதற்கு அவை ஒரு சிறு நுழைவாயிலாக மட்டுமே அமையமுடியும்.

இவ்வுரைகளை ஆற்றும் பெரும் வாய்ப்பினை எனக்கு வழங் கிய மதிப்புக்குரிய பேராசிரியர் டாக்டர் வ.ஆ. தேவசேனாபதி அவர்கட்கும், பல்வகையிலும் ஊக்கமளித்த தமிழ்நாடு இறை யியல் கல்லூரி முதல்வர் டாக்டர் சாமுவேல் அமிர்தம் அவர் கட்கும், சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கட்கும் பெரிதும் கடமைப்பட் டுள்ளேன்.

உரைகளின் எழுத்துப்படியைச் சீராக்கி நூல் வடிவில் கொணர் வதில் பெரிதும் உதவிய டாக்டர் வை. இரத்தினசபாபதி அவர் கட்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு இறையியல் கல்லூரி
மதுரை
11-11-1977

**தி. தயானந்தன் பிரான்சிஸ்**

# அணிந்துரை

**பா**ல் பொருளால் ஒன்று; செயல் முறையால் இரண்டு; பால் உணவாகவும் ஆகும்; மருந்தாகவும் ஆகும். அவ்வாறே தமிழகத்தில் வாழ்ந்த இரு பெருங் கிறிஸ்தவத் தமிழ்க் கவிஞர்களின் தொண்டு அமைந்தது. தமிழகத்தில் விளங்கிய சைவம், வைணவம் முதலிய சமயங்களைப் பிறப்பிடத்தால், பிறப்பால் சார்ந்தவர்களாயிருந்த இக் கவிஞர்கள் கிறிஸ்தவம் சார்ந்தனர். அவர்கள் தமிழகத்து இலக்கிய சமய மரபுகளைப் பிறப்புரிமையால் அறிந்தவர்கள் ஆதலின் அம் மரபுகளை ஏற்ற பெற்றி எடுத்துக் கிறிஸ்தவ இலக்கியச் சமய மரபுகளோடு இணைத்துக் காட்டித் தொண்டாற்றினார்கள். தொண்டு ஒன்றாயினும் பயன் இரண்டு. தமிழகத்தில் வாழும் கிறிஸ்தவர்கள் தமிழ் இலக்கிய சமய மரபுகளை உணர்ந்துகொள்ள ஒரு வாய்ப்பு. அவ்வாறே தமிழகத்தில் வாழும் கிறிஸ்தவரல்லாதவர்கள் கிறிஸ்தவ சமய மரபுகளை உணருவதற்கு ஒரு வாய்ப்பு. இருவகைப் பயன் தரும் ஒரு பெருந்தொண்டினை விளக்கி டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ் அவர்கள் எங்கள் நிறுவனத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு களை அடிப்படையாகக்கொண்ட நூல் இந்நிறுவனத்தின் பொன்விழா வெளியீட்டு வரிசையில் இடம் பெறுகிறது. இந்நிறுவனத்தின் கருத்தைத் தூண்டும் வகையில் சொற்பொழிவுகளை நிகழ்த்தி அவற்றை நூல் வடிவில் அமைத்துத் தந்த டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ் அவர்களுக்கு எங்கள் நன்றி.

**டாக்டர் வ.ஆ. தேவசேனாபதி**
தலைவர், மெய்யுணர்வு ஆராய்ச்சித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
தபால் பெட்டி எண் 501, சென்னை 600 003

தொலைபேசி :
அலுவலகம் : 5354296,
5354297
Fax : 91 44 5354297
இல்லம் : 6266581
தந்தி : 'VEDIC'

அருள்திரு. டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ்,
M.A.,Ph.D.,D.Litt.,D.D
பொதுச் செயலாளர்

# இரண்டாம் பதிப்பிற்கான முன்னுரை

சென்னைப் பல்கலைக்கழகத்தின் மெய்யுணர்வு ஆராய்ச்சித் துறையாக விளங்கும் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் ஆய்வுமன்றத்தினரின் அழைப்பை ஏற்று 1977-ஆம் ஆண்டில் ஆற்றப்பெற்ற மூன்று உரைகளின் தொகுப்பான இந்நூலை கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தின் வாயிலாக மறு பதிப்பு செய்துகொள்வதற்கு அனுமதி வழங்கிய பேராசிரியர் டாக்டர் ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு என் நன்றி உரியதாகும். கடந்த இருபதாண்டுக் காலத்தில் கிறிஸ்தவ இலக்கிய ஆய்வாளர்களுக்கும், ஆர்வலர்களுக்கும் இந்நூல் பயன்பட்டு வந்துள்ளதை அறிந்தே இம்மறுபதிப்பு வெளிவருகின்றது.

இவ் உரைகளின் ஆங்கில மொழியாக்கத்தையும் வழங்குமாறு என்னைப் பணித்து அதனை Christian Poets and Tamil Culture என்னும் தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழகம் அதே ஆண்டில் வெளியிட்டது. அந்நூலின் மறுபதிப்பும் இவ்வாண்டில் கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தின் வாயிலாக வெளி வருகின்றது. கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் தன்னுடைய நூற்று

நாற்பதாவது பணிஆண்டில் மீட்புக்கவிஞர் கிருஷ்ணபிள்ளை அவர்களின் பெரும் படைப்பாகிய இரட்சணிய யாத்திரிகத்தின் மூன்று தொகுதிகளை 12-12-1998 அன்று வெளியிடும் வேளையில் இவ் இரு நூல்களும் அவற்றோடு சேர்த்து வெளியிடப்படுவது பொருத்தமே ஆகும். வேதநாயகம் சாஸ்திரியார், கிருஷ்ணபிள்ளை ஆகிய இருபெரும் கிறிஸ்தவப் பாவலர்களும் கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தோடு தொடர்புடையவர்கள். அவர்களின் நூல்களை மட்டுமல்லாது இசைப்பாடல்களையும் இச்சங்கம் **கிறிஸ்தவக் கீர்த்தனைகள்** என்னும் நூலின் மூலமாக வெளியிட்டு வந்துள்ளது. இச்சிறு நூல் மீட்புக்கவிஞரின் பண்பார்ந்த கிறிஸ்தவ உள்ளத்தினையும் வளம் கொழிக்கும் கவி ஆற்றலையும் விளங்கிக் கொள்வதற்கு சிறிதேனும் துணை செய்ய வேண்டும் என்பது என் இதய விழைவு.

இம்மறுபதிப்பை அச்சகத்திற்கு ஆயத்தப்படுத்தி மெய்ப்புகளை ஒப்புநோக்கி உதவிய கிறிஸ்தவ இலக்கியச் சங்க தமிழ் பதிப்பாசிரியர் திருமதி ஸ்வீட்லின் பிரபாகரன் அவர்களுக்கும் நன்முறையில் இதனை அச்சிட்டுதவிய எங்களின் சி.எல்.எஸ். அச்சகக் கண்காணிப்பாளர் திரு. தாமஸ் ஸ்டீபன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவிக்கிறேன்.

அன்பன்

**தி. தயானந்தன் பிரான்சிஸ்**

பொதுச் செயலாளர்

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை

சென்னை

25-11-1998

# உள்ளுறை

**தஞ்சை வேதநாயக சாஸ்திரியார்**

தமிழ் இலக்கிய நெறியில் ... 1

தமிழ்ச் சமய நெறியில் ... 28

குறிப்பெண் விளக்கம் ... 47

**இரட்சணியக் கவிஞர் கிருஷ்ணபிள்ளை**

பொது அறிமுகம் ... 57

தமிழ் இலக்கிய நெறியில் ... 68

தமிழ்ச் சமய நெறியில் ... 80

குறிப்பெண் விளக்கம் ... 100

# 1

# வேதநாயகம் சாஸ்திரியார்

## தமிழ் இலக்கிய நெறியில்
## தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார்

**வ**ளம்பெற்றுத் திகழும் தமிழ் இலக்கியத்தில் சமயச்சார் புடைய நூல்கள் பல உள்ளன. அவற்றுள் கிறிஸ்தவக் கவிஞர் கள் சிலரின் படைப்புக்களும் அடங்கும். பதினெட்டாம் நூற் றாண்டில் வீரமா முனிவர் இயற்றிய தேம்பாவணி அரியதொரு காப்பியமாகப் போற்றப்படுகிறது. அவரைத் தொடர்ந்து கடந்த நூற்றாண்டில் இலக்கியச் செல்வங்களை வழங்கியுள்ள கவி ஞர்களுள் வேதநாயக சாஸ்திரியார், ஹெச். ஏ. கிருஷ்ண பிள்ளை, மாயூரம் வேதநாயகர் ஆகியோர் குறிப்பிடத் தகுந்த வர்கள் ஆவார்கள். இப்பெருங்கவிஞர்கள் தமிழுலகிற்கு நன்கு அறிமுகமானவர்கள். தமிழ்க் கிறிஸ்தவத் திருச்சபை கள் அளவிலேயே பெரிதும் அறிமுகம் பெற்ற கவிஞர்கள் பலர் உள்ளனர். அவர்களுள் 'திருவாக்குப் புராணம்' எழுதிய கனக சபைப் புலவர், 'சுவிசேட புராணம்' இயற்றிய சுகாத்தியர்

(ஸ்காட் என்னும் ஆங்கிலேயர்), '**கிறிஸ்தாயணம்**' யாத்த ஜான் பால்மர், '**வேதப்பொருள் அம்மானை**' பாடிய வேத மாணிக்கம், '**திரு அவதார மாலை**' தந்த பேதுரு அடால்பஸ், '**தாவீதரசன் அம்மானை**'யின் ஆசிரியர் வின்பிரட் போதகர், '**நசரைக் கலம்பகம்**' எழுதிய சாமிநாதப்பிள்ளை, '**பச்சாத்தாபம்**' போன்ற சிறு நூல்கள் பலவற்றைச் செய்த அந்தோணிக் குட்டி அண்ணாவியார், '**அமலகுரு சதகம்**' '**நித்தியானந்தக் காதல்**' முதலிய நூல்களை வழங்கிய ஜி.சே. வேதநாயகம் ஐயர், '**இயேசுநாதர்**' எழுதிய D.A. ஞானாபரணம், '**சுடர்மணி**' இயற்றிய எஸ். ஆரோக்கியசாமி, '**அருட்குறள்**' '**அருட்புகழ்**' ஆசிரியர் வீ.ப.கா. சுந்தரம் ஆகியோர் பெயர்களை இங்கே குறிப்பிடலாம். இவர்களுள் இறுதியில் உள்ள நால்வரும் இந் நூற்றாண்டினர் ஆவர்.

இக்கவிஞர்களுள் பலர் மதம் மாறிக் கிறிஸ்தவம் தழுவி யோர் ஆவார்கள். புதிதாக ஏற்றுக்கொண்ட சமயத்தில் அவர் களுக்கிருந்த ஆர்வத்தையும் பற்றினையும் அவர்கள் எழுத்துக் களில் காண முடிகின்றது. சில கவிஞர்களிடம் அவை வரம்பு மீறிச்சென்று பிற சமயங்களைப் பழிக்கும் முறையிலும் வெளிப்படுகின்றன. ஆயின், அத்தகையோரும் கூடத் தாங் கள் முன்பு தழுவிய சமயத்தின் இலக்கியச் செல்வங்களையும் அவற்றில் காணக்கிடக்கும் இறையியல் சொற்கள், தொடர் கள், சிந்தனை வடிவங்கள், வழங்கு முறைகள் போன்றவற் றையும் யாண்டும் ஒதுக்க முயலவில்லை. மாறாக, அவற்றைப் பெருமளவுக்குக் கையாண்டு தங்கள் நூல்களுக்குச் சிறப்புக் கூட்ட முயன்றுள்ளார்கள்.

தமிழையும், தமிழ் இலக்கிய மரபுகளையும், சமய இலக்கியநெறி முறைகளையும் விட்டு விட்டால்தான் கிறிஸ்த

வர்களாக முடியும் என்று ஒரு விதி இருந்திருந்தால் இந்தக் கவிஞர்கள் கிறிஸ்தவம் தழுவியிருக்க மாட்டார்கள் என்று கூடத் துணிந்து கூறலாம்.

இந்து சமய இலக்கியங்களுக்கு ஈடாகத் தங்கள் படைப்புக் களை உருவாக்கவேண்டும் என்ற ஆர்வமும், அச்சமய இலக் கியங்களில் காணப்படும் சொல்லறங்களையும், கருத்துச் சரங் களையும் கிறிஸ்துவுக்குச் சூட்டி மகிழவேண்டும் என்ற வேட் கையும் இக்கவிஞர்களுக்குப் பெருமளவில் இருந்துள்ளன. இவைகளை அவர்கள் பாடல்கள் பலவற்றில் காண முடிகின் றது, எடுத்துக்காட்டுக்குச் சிலவற்றைப் பார்ப்போம்.

ஜி.எஸ். வேதநாயகம் தம்முடைய 'அமலகுரு சதகம்' என் னும் நூலில் இயேசுவோடு ஒன்றத்துடிக்கும் தம் வேட்கை யைப் பலபட எடுத்துக்காட்டுகிறார். ஒரு பாடலில் இயேசு வின் அடியில் அவர் தலை பதிந்து, தான் காணாதொழிய வேண்டும் என்ற கருத்தை வெளிப்படுத்துகிறார். சைவத்தில் சிறப்பிக்கப்படும் தாள்-தலைக்கருத்தைக் கிறிஸ்தவத்தில் நுழைக்க விரும்பும் கவிஞர் இவ்வாறு பாடுகிறார்.

*கனல்மூண்ட இரும்புபோல் உன்சாய லிலங்கவிக்*
*கசடன் காணாதொழியவும்*
*காலாணி என்சிரசில் ஊடுருவிக் குருசிலுன்*
*காலடியில் நான் பதியவும்....'*

சிலுவையில் அறையுண்டு கிடக்கும் நிலையில் தம் அமல குருவை இக்கவிஞர் காண்கிறார். அவர் காலடியில் தம் தலை பதிந்திடவேண்டும் என்று விரும்புகிறார். அந்தப் பதிவு நிலை மிக்க உறுதியும் உயிர்த்தொடர்பு உடையதாகவும் இருக்க வேண்டும் என்பது அவர் நாட்டம். எனவே ஊடுருவிச்செல்ல

வேண்டும் என்று வேண்டுகிறார். இயேசுவின் கால்களைத் துளைத்துக்கொண்டிருக்கும் ஆணி தம் தலையில் ஊடுருவிச் செல்ல வேண்டும் என்று வேண்டுகிறார். இத்தகைய 'ஒன்றும் நிலை' ஏற்படும்போது உலையிலிடப்பட்ட இரும்புபோல் தம் சாயல் மறைந்து இறைசாயலே ஓங்கும் என்பதனையும் தெரிவிக்கின்றார்.

இறைவன் தாளில் அடியார் தலை பதியும் கருத்தை அகில உலகக் கிறிஸ்தவ இலக்கியத்திற்குத் தமிழகத்துப் பக்தி நெறி வழியே எடுத்து வழங்குகிறார் இக்கவிஞர். அதே நேரத்தில், தமிழ்க் கிறிஸ்தவர்களின் பக்தி நெறி என்பது மேனாட்டி லிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒன்று அன்று; அது தமிழ் மண்ணில் உரம் பெற்றெழுந்திடும் பக்தி நெறியைச் சார்ந்ததே ஆகும் என்ற உண்மையைக் கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட தமிழ் மக்களுக்குத் தெளிவுப்படுத்துகிறார்.

இன்னொரு பாடல். இது மாயூரம் வேதநாயகரின் 'திரு வருள் மாலை'யில் இடம் பெறுகின்றது. யூதச் சேவகர் இயேசு வைச் சாட்டையால் அடித்து அவர் அங்கங்களைச் சிதைவுறச் செய்த காட்சியைக் கவிஞர் நினைந்து பார்க்கிறார். அத்தகு கொடுமை செய்யப்பட்ட வேளையிலும் இயேசு வாளா விருந்தது கூட அவருக்கு விந்தையாகத் தோன்றவில்லை. வேறொன்றே அவரை விந்தையில் ஆழ்த்தியது. அதனை இவ்வாறு கூறுகிறார்:

*விண்தங்கும் அமராரசே நரருமுய்ய மேதினியில்*
*பண்டு அங்கமாய் வந்தபோதுனை யூதர்கள் பற்றித்தசை*
*கண்டங்களாய் அவிழத் தாக்கிய போதுன் கழலிலொட்டும்*
*அண்டங்களில் அடி வீழா திருந்த ததிசயமே!*[2]

'உன் உடல் சிதைந்திடுமாறு உன்மேல் விழுந்த அடிகள் உன் காலடியில் கிடக்கும் உலகங்களில் படாதது விந்தையே!' என்கிறார் கவிஞர். சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்த படலக்காட்சி கவிஞரின் கண் முன்னே தோன்றுகிறது. சிவ பெருமான் மீது விழுந்த அடிகள் மன்னன் மீதும் மக்கள் மீதும் விழுந்தன என்று கூறும் திருவிளையாடற் புராணக் கருத்து கவிஞரின் நோக்கிற்குப் பின்னணியாகிறது. எனவே, நீதிப்படி நிகழவேண்டியது கூட நிகழவில்லையே என்று வியப் படைகிறார்.

மற்றுமொரு பாடல். இருபத்துமூன்றாம் சங்கீதத்தின் திரண்ட கருத்தைச் சந்தப்பாடல் ஒன்றின் மூலம் கூற வரும் வீ.ப.கா. சுந்தரர் மேய்ப்பனின் திருக்கோலத்தை இங்ஙனம் சித்திரிக்கிறார்.

*அருளே உடுக்கும் குழலே இசைக்கும்*
*அழகே படைக்கும்—இறை மேய்ப்பன்*
*அனைபோல் அணைத்துத் தனையே கொடுத்து*
*நினைவே நிறுத்தி—எமை மேய்ப்பன்*[3]

இறைவனை மேய்ப்பன் கோலத்தில் கண்டிடும்போது அவனை இக்கவிஞர் குழல் ஊதுகிறவனாகவும் பார்க்கத் தவற வில்லை. இருபத்துமூன்றாம் சங்கீதத்தை எழுதிய தாவீது தம் இளமைக் காலத்தில் ஆடுகளை மேய்த்து வந்தவர். ஆனால் அவர் கின்னரம் வாசிப்பதில் தான் வல்லவராய் இருந்தார். அவர் குழல் ஊதியதாகக் குறிப்பே இல்லை. இந்தக் கவிஞர் மாடுகள் மேய்க்கும் நம் நாட்டு ஆயர்கள் கோலத்தில் சிறப்பா கக் கண்ணன் கோலத்தில் தம் மேய்ப்பனைக் காண்கிறார்.

சொற்கள், தொடர்கள், கருத்துக்கள் என்ற அளவில் மட்டு மல்லாமல் வழிபாட்டு முறையிலும் தமிழ்ப் பண்பாட்டுச் சமய மரபுகளைச் சில தமிழ்க்கவிஞர்கள் கிறிஸ்தவத்துக்கு அறி முகப்படுத்த முயன்றுள்ளார்கள். தமிழ்க் கிறிஸ்தவர்கள் ஆலய வழிபாட்டில் பெரிதும் பயன்படுத்தும் ஓர் இறைவணக் கப் பாடலின் அடி ஒன்றைக் கவிஞர் சத்தியநாதன் இவ்வாறு அமைத்துள்ளார்.

*சன்னிதி முன்தொண்டன் நின்றே—என்றும்*
*தாயான கருணை உனக்கு உண்டென்றே*
*சென்னிமேல் கரம்கூப்பி நின்றே—உன்னை*
*சேவிக்கும் அடியேனைக் கோபிக்காய் என்றே*

*சரணம் நம்பினேன் ஏசுநாதா — இது*
*தருணம் தருணம் உன்றன் கருணைகூர் வேதா*[4]

இப்பாடலை ஆலயத்தில் பாடும்போது அடியார்கள் தமிழ் மரபுப்படித் தங்கள் தலையின் மீது இரு கரங்களைக்கூப்பிப் பாடவேண்டும் என்பது இக்கவிஞரின் விருப்பம். ஆயின், கிறிஸ்தவர்கள் ஆலயத்தொழுகையின்போது இப்பாடலை உட்கார்ந்த வண்ணம் கையில் பாட்டுப் புத்தகத்தை வைத்துக் கொண்டு பாடுவார்கள். இப்பாடலை முறைப்படி சென்னி மேல் கரம் கூப்பி நின்று பாடவேண்டும் என்பதை டாக்டர் சவரிராயன் ஏசுதாசன் தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கு வலியுறுத் திக் கூறி அம்முறையைத் தம் கிறிஸ்துகுல ஆசிரமத்தில் அறி முகப்படுத்தினார்.

இனி, தமிழ்ப் பண்பாட்டில் தோய்ந்தவர்களாய்த் தமிழ ரின் சமய மரபுகளைப் போற்றிக்காக்கும் வகையில் இலக்கியப் பணியாற்றிய கவிஞர்கள் இருவரை நாம் இந்த உரைகளில் ஆய்ந்திடப் போகிறோம். அவர்களின் வாழ்க்கைப் பின்னணி,

அவர்கள் படைத்தளித்துள்ள சமய நூல்களின் இலக்கியச் சிறப்பு ஆகியவற்றையும் அவர்களின் சமயக்கருத்துக்கள், பண்பாடு தழுவிய இறையியல் சிந்தனைகள் ஆகியவற்றை யும் இவ்வுரைகளில் காண்போம்.

வேதநாயக சாஸ்திரியாரும், ஹெச். ஏ. கிருஷ்ணபிள்ளை யும் கடந்த நூற்றாண்டில் தங்கள் இலக்கியங்களைப் படைத்த வர்கள் ஆவார்கள். இவர்களுள் ஒருவர் மூத்த கவிஞரான வேதநாயக சாஸ்திரியார் (1774-1864). பிறிதொருவர் ஹெச். ஏ. கிருஷ்ணபிள்ளை (1827-1900). இருவரும் சீர்திருத்த திருச்சபையைச் (Protestant) சேர்ந்தவர்கள். இருவ ரும் திருநெல்வேலி மாவட்டத்தில் பிறந்தவர்கள். சாஸ்திரி யார் மரணமடைந்தபோது கிருஷ்ணபிள்ளை முப்பத்தேழு வயதினராக இருந்தார். அவர் சாஸ்திரியாரைப் பற்றிக் கேள் விப்பட்டிருக்கலாம். அவர் நூல்களையும் பாடல்களையும் படித்திருக்கலாம். ஆயின், இருவரும் சந்தித்ததாகக் குறிப்பு ஏதும் இல்லை.

வேதநாயகம் கிறிஸ்தவப் பெற்றோர்க்குப் பிறந்தார். பன் னிரண்டு வயதினராக இருந்தபோது அவரை அருள்திரு. C.F. சுவார்ட்ஸ் (1726-1798) அவர்கள் தம்முடன் தஞ்சைக்கு அழைத்துச் சென்று தம் சொந்த மகனைப்போல வளர்த்தார். ஒரு நாள் சிறுவர் வேதநாயகம் சுவார்ட்ஸ் ஐயரிடம் சென்று தான் வாசிப்பதற்கு ஏதாவதொரு நூல் தரும்படிக் கேட்டுக் கொண்டபோது ஐயர் அவருக்குத் 'தாவீதின் சங்கீதங்கள்' (Psalms of David) என்னும் பழைய ஏற்பாட்டு இறையிசைப் பாமலரைக் கொடுத்தார். அந்நூலிலுள்ள பாடல்களை வேத நாயகம் விரும்பிப் படித்தார். அப்பாடல்கள் இளமையில் வேத நாயகரின் நெஞ்சைத் தொட்டதன் காரணமாகவே அவர் ஒரு அருட்கவிஞரானார் என்று அவருடைய மகன் நோ. ஞானா

திக்க சாஸ்திரியார் கூறுகின்றார்.[5] சாஸ்திரியாரின் பாடல்களில் சங்கீத நூலின் சாயலைக் காணமுடிகின்றது. அந்நூலிலுள்ள பல பாடல்களை இயற்றிய தாவீது அவரைக் கவர்ந்த கவிஞரானார். வேதநாயகர் தம் பாடல்கள் பலவற்றில் அவர் பெயரைக் குறிக்கின்றார். மேலும் தம் 'ஜெபமாலை' என்னும் நூலின் கடவுள் வாழ்த்துப் பகுதியில் 'தாவீதருளும் சங்கீதத்தைச் சரியொத்திதையும் கொள்வாய் சரணம்' என்று பாடுகிறார். இயேசுவைத் 'தாவீதரசன் மைந்தா' என்றும், 'இறைதாவீது பாடிய கீதா' என்றும் தம் பாடல்களில் விளிக்கின்றார்.[6] ஒரு பாடலில் இயேசுவைச் 'சத்திய வாசனே யூதர்குல தவிதுராசனே' என்றும் அவர் விளித்து விடுகிறார்.[7]

வேதநாயகர் டாக்டர் ஜான் என்பாரிடம் தரங்கம்பாடியில் 1780 முதல் இரண்டாண்டுகள் இறையியல் கல்வி பயின்றார். லூத்தரன் (Lutheran) பள்ளியில் படித்ததால் அவருடைய எழுத்துக்களில் அவ்வுட்சமயக் கருத்துக்கள் பலவற்றைக் காணமுடிகின்றது. அக்காலத்தில் வழக்கிலிருந்த பெப்ரீசியஸ் ஐயரின் விவிலிய மொழி பெயர்ப்பு (1777-இல் முதற் பதிப்பு வெளிவந்தது) அவரைப் பெருமளவில் கவர்ந்திருந்தது. புதிய ஏற்பாட்டின் கிரேக்க மூலத்தில் இறைவனைச் சுட்டும் தெயாஸ் (Theos) என்னும் சொல் அப்பதிப்பில் 'பராபரன்' என்று மொழி பெயர்க்கப்பட்டது. வேதநாயகர் இத்தொடரைப் பல இடங்களில் ஆண்டுள்ளார். 'வானம் பூமியோ? பராபரன் மானிடன் ஆனாரோ!' என்பது அவருடைய பாடலொன்றின் எடுப்புவரி ஆகும்.[8] இளமைக்காலத்தில் வேதநாயகர் இயற்றிய நூலொன்றுக்குப் 'பராபரன் மாலை' என்று பெயர் சூட்டியுள்ளார். தாயுமானார் ஆண்ட 'பராபரம்' என்னும் தொடருக்கு ஈடாகப் 'பராபர வஸ்து' என்னும் தொடரால் இறைவனை வேதநாயகர் குறிப்பிடுகின்றார்.[9]

வேதநாயகர் பள்ளியாசிரியராகச் சில காலம் பணியாற்றிய போது தமிழ் இலக்கிய இலக்கண நூல்களைப் பயின்றிருக்க வேண்டும். யாப்பு முறைகளைக் கற்றிருக்கவேண்டும். சிறப்பாக, இசைப்பாடல்களில் அவர் தனிக்கவனம் செலுத்தியதாகத் தெரிய வருகின்றது. அக்காலந்தொடங்கி அவர் இயற்றிய நூல்கள் யாவும் மக்கள் இலக்கியப் படைப்புக்களாகவே அமைந்துவிட்டன. மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்த ஏற்றப்பாட்டு, கும்மிப்பாட்டு, தாலாட்டு, ஒப்பாரி முதலிய பாவகைகளைச் சார்ந்தே 'ஞான ஏற்றப்பாட்டு' 'ஞானக்கும்மி' 'ஞானத்தாலாட்டு' 'பிரலாப ஒப்பாரி' 'பேரின்பக் காதல்' போன்ற நூல்களை அவர் இயற்றினார். எவரும் எளிதில் கற்றுப்பாடும் வகையில் அவர் பாடல்கள் அமைந்தன.

'ஞானத்தாலாட்'டில் வரும் சில அடிகள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமையும்.

*காவில் விலகுங்*
*கனியி னாலே விளைந்த*
*பாவவினை தீர்க்கவந்த*
*பாலகனே கண்வளராய்*[10]

*வானவ ரெங்கே மோட்ச*
*வாசிகளெங்கே யுனைகொண்*
*டானவரெங்கே நீதான்*
*ஆருமிலாப் பாலகனோ!*[11]

**பரதேசிலுள்ள பல*
*பாக்கியத்தை விட்டுப்*
*பரதேசிபோல் வரப்*
*பட்சமுமக் குண்டாச்சோ!*[12]

---

* Paradise *(மோட்சம்)*

அங்ஙனமே 'பிரலாப ஒப்பாரி'ப் பாடல்களும் எளிய முறையில் அமைந்துள்ளன.

*சீவன் மடிந்து*
*சிலுவையினிற் றொங்குறதைப்*
*பாவிகாளா ரேனு முண்டோ*
*பார்க்கவர மாட்டீரோ!*[13]

*அன்பிற் குரிய*
*அருமைக் கிறிஸ்தோரே*
*என்பிறகே கூடி*
*இரங்கி யழமாட்டீரோ!*[14]

வேதநாயகரைச் சித்தர் பாடல்களும் பெரிதும் கவர்ந்தன. சிவ வாக்கியர், பாம்பாட்டிச் சித்தர் போன்றவர்களைச் சார்ந்து அவர் பாடல்களைப் பாடியுள்ளார். ஒரு பாடலில்,

*ஓங்குவிருட்சம் விலங்கு பறவைகள்*
*ஒருருவோர் குலம் இல்லாத வாறுபோல்*
*நான்குலிதக் குலம் மாந்தர்குல மென்க*
*ஞாயமிருக்குதோ? நேயமிருக்குதோ?*

என்ற கேள்வியை எழுப்புகிறார்.[15]

பாம்பாட்டிச் சித்தர் பாடலைத் தழுவி,

*ஆடுபாம்பே எழுந்தாடு பாம்பே—கிறிஸ்*
*தண்ணலைக் கொண்டாடிக் கொண்டாடு பாம்பே!*
*ஒளிந்து ஒளிந்து மறைந்தோடாமற்—சத்திய*
*உண்மை உறுதிநெறி சாயாமல்*

*தெளிந்து தெளிந்து நின்றாடு பாம்பே—பரன்*
*சீர் பாதங்கண்டு மகிழந்தாடு பாம்பே*
*சித்தனாரே பரிசுத்தனாரே*
*தெரிசித்தார் கரிசித்தாரென்றாடு பாம்பே...*

என்று பாடிச் செல்கிறார்.[16]

வேதநாயகருக்குப் பெரும்புகழைத் தேடித் தந்தது அவர் எழுதிய 'பெத்தலேங் குறவஞ்சி' என்ற நூலாகும். அவர் காலத்தில் மக்களிடையே பெரிதும் செல்வாக்குப் பெற்றிருந்த '*திருக்குற்றாலக் குறவஞ்சி*' '**சரபேந்திர பூபாலக் குறவஞ்சி**' '**கும்பேசர் குறவஞ்சி**' முதலிய குறவஞ்சி நாடக நூல்களை அவர் படித்திருக்கவேண்டும். நாடக நிகழ்ச்சிகளையும் கண்டிருத்தல் வேண்டும். அதன் விளைவாகவே 1800-இல் '**பெத்தலேங் குறவஞ்சி**'யை அவர் படைத்தார். குறவஞ்சி நாடகப் போக்கையும், பாத்திரப்படைப்பு மரபுகளையும் முழுக்க முழுக்கத் தம் நூலில் புகுத்தியுள்ளார். உலா வருபவர் இயேசு. அவரைக் கண்டு மையல் கொள்பவள் 'சீயோன் குமாரத்தி.' விவிலியத்தில் இத்தொடர் இஸ்ரவேல் மக்கள் கூட்டத்தைத் தொகுத்துச் சுட்டுகின்றது. கிறிஸ்தவ மரபில் இத்தொடர் திருச்சபையைக் குறிக்க ஆளப்பட்டுள்ளது. இச்சீயோன் மகளுக்குத் 'தேவமோகினி' என்ற பெயரையும் சூட்டுகிறார் கவிஞர். அவர் படைத்துள்ள சிங்கி 'விசுவாசம்' என்பவள் ஆவாள். குறவஞ்சி நாடக இலக்கணப்படி, அவள் கூடையும் மாத்திரைக் கோலும் ஏந்தியவளாய்ச் சீயோன் மகளை அணுகி, விவிலிய மலைகள் சிறப்பையும், கானான் நாட்டு வளத்தையும் கூறுகிறாள். சீயோன் மகளின் மனவுணர்ச்சிகளைப் புரிந்து கொண்டு, உலா வந்தவருக்கு அவள் மனைவியாகப் போகிறாள் என்ற நல்ல செய்தியை எடுத்துரைக்கிறாள்.

விசுவாசச் சிங்கியின் கணவன் ஞானசிங்கன், நூவன் என்பானோடு வலைகளும் கண்ணிகளும் வைத்துப் பறவைகளைப் பிடிக்கிறான். அவனையும் உருவகப் பாத்திரமாகவே அமைத்திருக்கிறார் கவிஞர். மாந்தராம் பறவைகளை இயேசுவிடம் சேர்ப்போனாக அவன் விளங்குகிறான்.

குறி சொல்லச் சென்ற சிங்கி நெடுநேரமாகத் திரும்பி வராததால் சிங்கன் துயரத்தில் மூழ்குகிறான்; புலம்புகிறான்; அவள் இருக்கும் இடத்தைச் சொல்வோருக்குப் பரிசில் தரவும் முன் வருகிறான். இந்தக் கட்டத்தில் சிங்கி வீடு திரும்புகிறாள். அவளை வரவேற்கும் சிங்கன் அவளிடம் அடுக்கடுக்காகக் கேள்விகளைக் கேட்க, அவளும் நறுக்குத் தெறித்தாற் போலப் பதில் தருகிறாள். யாருக்குக் குறிசொல்லிப் பரிசில் பல பெற்றுக்கொண்டு வந்துள்ளாள் என்பதை அவன் தெரிந்துகொண்டு மகிழ்கிறான். நாடகம் இறுதி வாழ்த்து ஒன்றோடு முடிவடைகின்றது.

திரிகூடராசப்பக் கவிராயரின் *'திருக்குற்றாலக் குறவஞ்சி'*யை வேதநாயகர் பெருமளவுக்குத் தழுவித் தம் நூலை இயற்றியுள்ளார் என்பது குறிப்பிடத் தகுந்ததாகும். கவிராயரின் குறவஞ்சி பெரிதும் நடிக்கப்பட்டு வந்த நெல்லை மாவட்டத்தில் பரப்பப்படுவதற்கென்றே தம் நூலை இயற்றியதாகவும் முன்னுரையில் குறிப்பிடுகிறார். அத்துடன் தம் இசைக் குழுவினரோடு அவரே 'சதுர் பிரசங்க' முறையில் தம் குறவஞ்சியைத் தஞ்சை, சென்னை முதலிய இடங்களில் அரங்கேற்றினார்.

*'திருக்குற்றாலக் குறவஞ்சி'*யின் வடிவத்தை மட்டுமல்லாமல், பாடற் பண்கள், பல்லவித் தொடர்கள், சொல்லடுக்குகள், கருத்து வடிவங்கள் ஆகியவற்றையும் கூட வேதநாயகர் கிறிஸ்தவத்துக்கேற்ப எடுத்தாண்டுள்ளார். அங்ஙனம் எடுத்

தாளப்பட்டுள்ள பகுதிகளுள் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

குற்றால நாதரிடம் காதல் கொண்ட வசந்த வல்லி அவர் நினைவாகவே இருக்கும்போது நிலவொளியும் அவளைச் சுடுகிறது. அவள் நிலாவைப் பழிக்கின்றாள். அவள் பாடும் பாடலின் அடி ஒன்று இவ்வாறு அமைந்துள்ளது:

*ஆகடியஞ் செய்தல்லவோ வெண்ணிலாவே — நீதான்*
*ஆட்கடியன் போற்குறைந்தாய் வெண்ணிலாவே...*[17]

இந்த வரிகளைத் தழுவித் தம் 'தேவமோகினி'யையும் பாட வைக்கிறார் வேதநாயகர்:

*சிந்தை கருவங் கொண்டதால் வெண்ணிலாவே — நீ*
*தேய்ந்து குறைந்து போனாய் வெண்ணிலாவே.*[18]

இவ்வரிகளைப் படிக்கும்போது, சந்திரன் தேய்வதற்கான காரணத்தைக் கூறும் புராணக்கருத்தைச் சாஸ்திரியார் ஏற்பது போன்றே தெரிகின்றது. ஆயின், புதுயுகத்தின் புதிய ஆதாமாகிய கிறிஸ்துவை அவள் காதலிப்பதால் பழைய யுகத்தையும், அதைச் சேர்ந்தவைகளையும், பழைய ஆதாமின் பாவ இயல்பையும் அவள் பழிக்கிறாள் என்பதை அடுத்து வரும் பகுதிகளில் கவிஞர் தெரியப்படுத்துகிறார்.

*மெத்தக் கருவங்கொண்டாயல்லவோ பழையாதாமே —*
*உனின்*
*மேன்மையழிந்து விழுந்தனையே பழையாதாமே.*[19]

சிங்கியின் வரவைக் கூறும் குற்றாலக் குறவஞ்சிப் பாடல் அவளுடைய அணி அலங்காரத்தை அழகுற எடுத்துச் சொல்கிறது:

*சிலைநுதலிற் கத்தூரித் திலகமிட்டு*
*நறுங்குழலிற் செச்சை சூடிக்*
*கொலைமதர்க்கண் மையெழுதி மாத்திரைக்கோல்*
*வாங்கிமணிக் கூடை தாங்கி....*
*..................... வஞ்சியப*
*ரஞ்சி கொஞ்சி வருகின்றாளே*[20]

இப்பாடலைத் தழுவி, பெத்தலேங் குறவஞ்சியின் ஆடை அணிகலன்களைப் பற்றிக் கூறவரும் சாஸ்திரியார்,

*நீதியினாடையதணிந்து, ஞானாபரண*
*வேதசெப மாலைபுனைந்து, மெய்ஞ்ஞானமுடன்*
*ஆதியம லனைப்பணிந்து....*[21]

என்று பாடிச் செல்கிறார்.

குற்றாலக் குறவஞ்சி தன் மலைவளத்தைக் கூறும்போது அங்கு வாழும் முனிவர்கள், சித்தர்கள் பற்றிச் சில சொல் கிறாள். பெத்தலேங் குறவஞ்சியும் கூடச் சித்தர்கள் தன் மலை யில் வாழ்வதாகக் கூறுகிறாள்.

*கானவர்கள் விழிஎறிந்து வானவரை அழைப்பார்*
*ககனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்*

இது குற்றாலச் சிங்கியின் கூற்று.[22]

*வானவர்கள் கூடிவந்து தோத்திரங்கள் படிப்பார்*
*வண்மையுள்ள சித்தரெல்லாம் அருந்தவங்கள் பிடிப்பார்.*

இது பெத்தலேம் சிங்கியின் குரல்.[23]

சிங்கியைக் காணாது ஏங்கும் சிங்கன் மனத்துணர்ச்சி களையும் ஐயப்பாடுகளையும் திரிகூடராசப்பர் அழகாக எடுத் துரைக்கின்றார். அவரைத் தழுவியே வேதநாயகரும் சிங்க னின் மனப்போராட்டத்தைக் கிறிஸ்தவப் பின்னணியோடு தர முயல்கிறார்.

குற்றாலச் சிங்கன் புலம்புகிறான்:

*குத்தியி லரக்குங்கள்ளும் குடுவையில் தென்னங்கள்ளும்*
*அத்தனையும் குடித்துப்போட்டார் பிறகே தொடர்ந்தாளோ!*[24]

பெத்தலேம் சிங்கனும் தன்னுடைய சிங்கி அங்ஙனம் அருந்திய மயக்கத்தில் தன்னை மறந்து கிடக்கிறாளோ என்று ஏங்குகிறான்.

*பாத்திரத்தி லப்பம் பின்னோர் பாத்திரத்தில் ரசம்வாங்கி,*
*ஆத்திரமாய் நின்றுகுடித் தானந்தமாய் நிற்கிறாளோ!*[25]

*(இங்குக் குறிக்கப்படும் உணவும் பானமும் நற்கருணைப் பதார்த்தங்கள் ஆகும்).

குற்றாலச்சிங்கன் தன் மனைவியைக் கண்டதும் களிப்பு மிகுதியோடு அவளுடைய புதிய அணி அலங்காரத்தைப் பற்றி வினவுகின்றான். அவை யார் கொடுத்தவை என்று கேட்கி றான். அவளும் அவற்றை யாரிடம் பெற்றுவந்தாள் என்று கூறுகின்றாள். இந்த உரையாடல் பல கண்ணிகளாகப் படர்ந்து செல்கின்றது. அவற்றுள் ஒரு கண்ணி இப்படி அமைந்துள்ளது:

---

* Elements of the sacrament of Eucharist. (Bread and wine signifying the body and blood of Jesus Christ.)

*காலுக்கு மேலே பெரிய விரியன்*
*கடித்துக் கிடப்பானேன் சிங்கி!*
*சேலத்து நாட்டில் குறிசொல்லிப் பெற்ற*
*சிலம்பு கிடக்குதடா சிங்கா!*[26]

பெத்தலேம் மலைச் சிங்கனும் திரும்பி வந்த தன் சிங்கியைப் பார்த்து இதே முறையில் பல கேள்விகளைக் கேட்கிறான். அவற்றுள் ஒரு கேள்வியையும் சிங்கி அதற்குத் தரும் மறுமொழியையும் இவ்வாறு இரு கண்ணிகளாக அமைக்கிறார் வேதநாயகர்:

*முற்றுங் கறுத்து முழங்கால் தடித்தது*
*மோசம தென்னடி சிங்கி! — நான்*
*சற்றும் விடாமல் செபித்துக் கிறிஸ்துவைச்*
*சாற்றின தாலடா சிங்கா!*[27]

இந்நூலைச் 'சதுர் பிரசங்க'ங்களின் மூலம் கிறிஸ்தவத் திருச்சபைகளில் பரப்பியதால் வேதநாயகர் 'சுவிசேட கவிராயர்' 'வேதாகம சிரோமணி' 'மகாஞானக் கவிச்சக்கரவர்த்தி' ஆகிய பட்டங்களைப் பெற்றார்.

சாஸ்திரியார் அகத்திணை வழியே கிறிஸ்துவுக்கும் திருச்சபைப் பெண்ணாம் சீயோன் குமாரத்திக்கும் இடையே உள்ள தொடர்பை ஆரணாதிந்தம், ஞானவுலா என்னும் இரு நூல்களிலும் கூடப் பலவாறாக எடுத்துக்காட்டுகிறார்.

'ஆரணாதிந்த'த்தில் இயேசு தம் மனையாளைத் தேடி விண்ணிலிருந்து மண்ணுலகிற்கு வருகின்றார்; மானிடக் கோலத்தில் அவளை நாடிச் செல்கின்றார்; தம் மனத்து விருப்பத்தை வெளிப்படுத்திக் காட்டுகிறார். ஆயின், சீயோன் மகள் அவரை ஏற்க மறுக்கிறாள். அவர் அவளை விடாது தொடர்வதால் இறுதியில் அவர் கபாடம் தட்டியழைக்கும்போது

அவரை ஏற்றுக்கொள்ள மனமுவந்து கதவம் திறக்கிறாள். ஆயின் அவரைக் காணாது துடிக்கிறாள். ஊரெங்கும் தேடிய லைகிறாள்; அவர் வரவுக்காகக் காத்துக்கிடக்கிறாள். இறுதி யில் அவரைக் கண்டடைகிறாள்.

புராணப் பாடல் வகைகளைச் சார்ந்து இந்நூலை எழுதி யுள்ளார் சாஸ்திரியார். நூலின் தொடக்கக் காட்சி விண்ணகத் தில் தந்தையாம் இறைவனுக்கும் மைந்தராம் கிறிஸ்துவுக்கும் இடையே எழும் உரையாடலை அழகுற எடுத்துக்காட்டுகிறது. கிறிஸ்து இறைவனின் மைந்தர்; இறைவனால் உலகிற்கு வழங்கப்பட்டவர்; அனுப்பப்பட்டவர்; அவர் வலது பக்கத்தில் வீற்றிருப்பவர் என்பன போன்ற விவிலியக் கருத்துக்களுக்குக் காட்சி வடிவம் தர முயன்றிருக்கிறார் கவிஞர்.

கிறிஸ்து சீயோன் மகளைச் சந்திக்கும் காட்சிகளை எழு தும்போது கவிஞர் மனத்திலே முருகன், வேடனாகவும் விருத் தனாகவும் வந்து தினைப்புனம் காத்திடும் வள்ளியைச் சந்திக் கும் காட்சிகள் தோன்றியிருக்கவேண்டும். எனவே தான் 'மணவாளன் மனைவியைச் சந்தித்தல்' என்னும் பகுதியின் தொடக்கத்தில்,

*தாவீதாட் சித் தோட்டத்தில்*
*சித்திரச் சீயோன் செல்வி*
*காவல்காத் திருக்கும் போது*
*காரணத் தம்பிரானார்*
*மேவியோர் மனுடனாக*
*வேடமே கொண்டுசென்று*
*பாவையைச் சந்தித்தங்கே*
*பரிந்துசம் பாஷித்தானே*

என்னும் அறிமுக விருத்தத்தை அமைக்கிறார்.[28]

நாட்டுப்பாடல், நாடக நடைகளைத் தழுவிக் கிறிஸ்துவுக்கும் சீயோன் மகளுக்கும் இடையே எழும் உரையாடலை எடுத்துரைக்கிறார் கவிஞர். 'கோத்திரிகை காவனத்தில் காவல் காத்திருக்கும் பைங்கிளியே!' (19.2) என்று தன்னை விளித்து வம்புக்கிழுக்கும் கிறிஸ்துவைப்பார்த்து அவள் கேட்கிறாள்.

*எந்தவூர்நீர் தம்பிரானே எங்கணிருந் தெங்குவந்தீர்*
*என்றனைநீர் கைப்பிடிக்க ஏதுமக்குச் சொந்தமுண்டோ?*
*தனிவழி நான்வரத்தான் சம்மதிக்குமோ வினங்கள்*
*அநியாய யூதரும்மை யருங்கொலை செய்திடாரோ?*[29]

கிறிஸ்து அவளுக்குப் பதிலிறுக்கின்றார்:

*பரமண்டலத்தை விட்டேன் பத்திராசனத்தை விட்டேன்*
*தரைமண்டலத்தில் வந்தேன் தலைசாய்க்க இடமற்றேன்*
*மாயும்படி வந்தாலும் மறப்பேனோ சீயோனுன்னை*
*ஓயும்படி வந்தாலும் உனக்காய் உயிர்கொடுப்பேன்*[30]

'ஞான அந்தாதி' நூறு கலித்துறைப் பாடல்களாலாகியதொரு நூலாகும். பழைய ஏற்பாட்டிலுள்ள சாலமோனின் உன்னதப்பாட்டு (Song of Songs) என்னும் நூலுக்கு உரை ஒன்று அமைத்தாற்போல இந்நூலைப் படைத்ததாகக் கவிஞர் தம் காப்புப் பாடலில் கூறுகிறார். இத்தகு நூலொன்றைக் கிருஷ்ண பிள்ளையும் இயற்றியுள்ளார். அது 'ஆன்மப்பிரலாபம்' என்னும் நூலாகும். இவ்விரு நூல்களின் சில பகுதிகளைப் பேராசிரியர் சத்தியசாட்சி ஆராய்கின்றார். வேதநாயகரின் 'ஞான அந்தாதி'யைப் பற்றிக் கூறும்போது, 'மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையிலுள்ள அன்புத்தொடர்பினை, கண்களால் அன்றிக் கருத்தாலும் மனத்தாலும் உணரப்படுகின்ற உள்ளத்

தொடர்பினைத் தஞ்சை வேதநாயகர் இப்படியோர் எழுத் தோவியமாக்கி வழங்கியிருக்கிறார்' என்கிறார் சத்தியசாட்சி.[31]

சிற்றிலக்கிய வகைகளைத் தழுவி நூல்கள் எழுதியிருக் கும் வேதநாயகர் தேவாரப் பண்களிலும், திருப்புகழ்ச்சந்த நடைகளிலும் பல பாடல்களை இயற்றியிருக்கிறார். தாயுமா னாரின் பாடல்களிலும் ஈடுபட்டு அவர் யாப்பு வகைகளில் சில பாடல்களைத் தந்துள்ளார். இத்தகு பாடல்கள் அவருடைய 'ஜெபமாலை' என்னும் நூலில் இடம் பெற்றுள்ளன. மேனாட் டவர் நம் நாட்டுக் கிறிஸ்தவத் திருச்சபைகளுக்கு அறிமுகப் படுத்தியுள்ள வழிபாட்டு முறைமைகளுக்கு ஒப்பாக இந் நூலைச் செய்ததாக சாஸ்திரியார் நூலின் முன்னுரையில் குறிப் பிடுகிறார். தமிழக வழிபாட்டு முறைமைகளையும், வழிபாட் டுப் பாடற் பண்புகளையும் சார்ந்து நாற்பத்திரண்டு பகுதி களைக் கொண்ட இந்நூலை அவர் இயற்றியுள்ளார். 1810 முதல் 1855 வரை நாற்பத்தைந்து ஆண்டுக் காலமாக இந் நூலை அவர் எழுதி வந்ததாகவும் கூறுகிறார். இந்நூலிலுள்ள வழிபாட்டு முறைமைகள் தமிழ்க் கிறிஸ்தவர்களிடையே பரவ வேண்டும் என்பது அவருடைய பேரவா. ஆயின், இவ்வழி பாட்டு முறைமைகளிலுள்ள ஒரு சில பாடல்களை மட்டுமே தமிழ்த் திருச்சபைகள் பயன்படுத்தி வருகின்றன.

நிந்தாஸ்துதியில் வேதநாயகர் வழங்கும் ஜெபமாலைப் பாடலொன்று இவ்வாறு அமைந்துள்ளது:

*கள்ளமற்றுனையே செபத்தினாற் பிடித்துக்*
*கரத்தினால் சிலுவையில் அறைந்து*
*கால்கரத்தாணி கடாவிவைத்திருந்தால்*

*கடந்துபோம் வழியுனக்கில்லை!*
*வள்ளலே இதையுன் வல்லபத்தாலே*
*மாற்றுவாய் என்றுதான் வைப்போம்;*
*மறுபடியுனையென் மனத்தகத்தடைத்து*
*வைத்திருந் தாலெனைவிட்டுத்*
*தள்ளிநீ போகும் இடமுனக்கேது?*
......................
*எள்ளளவேனுமுன் றனைவிடுத்திருக்கேன்*
*இதுதிடம் என்னையாளையா*
*எழில்பெறு சீயோன் மகள்மணவாளா*
*இறைவனே இயேசுநாயகனே![32]*

இப்பாடலின் வரிகள் மாணிக்கவாசகர் 'சிக்கெனப்பிடித் தேன் எங்கெழுந்தருளுவதினியே'; 'பண்பே பயில்தொறும் இன்றே பயில்தொறும் ஒளிக்குஞ்சோரனைக் கண்டனம்; ஆர் மின், ஆர்மின் நாண்மலர்ப் பிணையலிற்றாடளை இடுமின்! சுற்றுமின்! சூழ்மின்! தொடர்மின்! விடேன்மின்!' என்று பேசிய வரிகளை நினைவுறுத்துகின்றன.

வேதநாயகர் தம் நெஞ்சின் வேட்கையை வெளிப் படுத்திப்பாடும் பக்திப் பாடற்கோவையான 'அகப்பற்று' என் னும் ஜெபமாலைப் பகுதியின் முதற்பாடலை இவ்வாறு அமைத்துள்ளார்:

*அறிவே மெய்ஞ்ஞான ஒளியே விண்ணாடர்*
*அரசே அனாதி முதலே*
*குறியாறு நாலும் நெறியாறுநாலும்*
*குணதேவ தேவசொரூபி*

*வெறியாடு பேயின் முறிகாரனான*
*வினையேனை யாளமனுவாய்*
*மறியேறிமேவு குருவேசுநாதர்*
*வரவேணும் என்றன் அகமே*[33]

இதுபோன்ற சந்தப்பாடல்கள் பலவற்றை அவர் ஜெபமாலையில் வழங்குகிறார். அருணகிரிநாதரின் மிடுக்கான சந்த நடையையும் கருத்தோட்டத்தையும் நினைவுபடுத்தும் பாடல் அடி ஒன்றினை இங்குக்குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்:

*பகாந்திகழ் மடமங்கையர்*
*பருவந்தனை நினைவுண்டவர்*
*மகாந்தனை நிசமென்றியான்*
*மருளாமலுன் அருள்கூரையா*
*சிகரந்தனில் எழநின்றுசெங்*
*கதிரின்திரு வுருகொண்டவா*
*தகரஞ்செறி சரணங்கொடு*
*சருவேசுரா! சருவேசுரா*[34]

அங்ஙனமே தாயுமானாரின் தனித்தமிழ் யாப்பு முறையைத் தழுவி அவருடைய 'சின்மயானந்த குரு' 'சச்சிதானந்த சிவம்' முதலிய பாசுரங்களைச் சார்ந்து 'கருணையானந்த வடிவம்' படைத்துள்ளார் கவிஞர் வேதநாயகர். 'திருச்செயல்' எனத் தலைப்பிட்டு வழங்கும் இப்பகுதியில் பதினொரு பாடல்கள் உள்ளன. அவற்றுள் ஒரு பாடலில்,

*வித்திலாமையினின்று விளைவுசெய்வாய்மேக*
*மின்றிமழை பெயவிதிப்பாய்*
*வெய்யவனிலாம லொளிவீசுவாய் ஆகாய*
*விரிவின்மே லேநடப்பாய்*

*செத்துலர்ந்தழிவான என்புகளையுந்தீர்க்க*
*தெரிசனஞ் சொலவுயிர்ப்பாய்*
*திரும்பஇஸ்ரேலைமுடி சூட்டியேகானானு*
*தேசத்தில் வாழவைப்பாய்*

......................

*கத்தபம்போலான புத்தியிலென்உனது*
*காட்சியைக்காண அருள்கூர்*
*கருத்தாபத்தாள் திரித்துவ ஏகத்துவமே*
*கருணையானந்த வடிவே*[35]

என்று உருகிப்பாடுகிறார். இப்பாடலின் முதல் வரியில் வரும் 'வித்திலாமையினின்று விளைவுசெய்வாய்' என்னும் கருத்து மாணிக்கவாசகரின் 'விச்சதின்றியே விளைவுசெய்கு வாய்' என்னும் பாடலைப் பிரதிபலிப்பது குறிப்பிடத்தகுந்த தாகும். இறைவன் உலகைப் படைத்துக் காத்திடும் திருச் செயலை மாணிக்கவாசகர் போன்றே வேதநாயகரும் வியந்து போற்றுகின்றார். எலும்புகட்கு உயிரூட்டுவதும், நாடு இழந்த இஸ்ரவேல் மக்களுக்கு மீண்டும் தாயக உரிமையை வழங்குவ தும் பழைய ஏற்பாட்டில் இறையாற்றலின் விந்தைத் திறத்தை எடுத்துக்காட்டுவன ஆகும். மாணிக்கவாசகர் தம் பாடலில் தம்மைத் தமக்கே உரிய பணிவுடன் நச்சு மாமரத்தோடு ஒப்பிடு கிறார். அவர் நெறியைச் சார்ந்து வேதநாயகர் இப்பாடலில் தம்மைக் கழுதையோடு ஒப்பிட்டுக்கொள்கிறார். இறுதி இரண்டு வரிகளிலே தாயுமானாரின் சொல்லாட்சியை நினைவுபடுத்துகிறார்.

வேதநாயகரின் பாவ அறிக்கைப் பாடல்கள் தமிழ் நாட்டுப் பக்தர்களின் அறிக்கை முறையைச் சார்ந்தே அமைந்துள்ளன. தம்மை ஒரு பெரும் பாவியாக அவர் கூறிப் புலம்புகிறார். அவர் குறிப்பிடும் அத்தனைப் பாவங்களையும் அவர் புரிந்திருக்க மாட்டார் என்றாலும் பிறருடைய பாவங்களைத் தம் பாவங்

களாகவே ஏற்று அனைத்துப் பாவியர் சார்பிலும் தம் முறையீடு களை வெளிப்படுத்துகிறார். சீரடியார்கள் பற்றிப் பேசும்போது பேராசிரியர் தேவசேனாபதி அவர்கள் 'பெருமனம் படைத்த அடியார்கள் பிறர் குற்றங்களுக்காகத் தங்களையே நொந்து கொள்கிறார்கள். மாந்தர்க்குத் தன்னை நோக்கிய ஆய்வின் தேவையை அவர்கள் குறிப்பாக உணர்த்திக் காட்டுகிறார்கள்' என்று குறிப்பிடுவது இங்குக் கருதத்தக்கதாகும்.[36]

வேதநாயகர் ஜெபமாலையில் வழங்கும் 'பாவசங் கீர்த்தன'ப் பகுதியில் வரும் ஒரு பாடலை இங்கு எடுத்துக் காட்டாகக் காண்போம்.

*அங்கம் முங்கிமங்கியே அலைக்கழிந்த பாவியான்*
*ஆசைஇச்சை லச்சையின் அகந்தை மிஞ்சுசுன்மியான்*
*பெண்கள் சங்க வாஞ்சையில் திரிந்தெனின் பெருமையால்*
*பெத்தரிக்கம் பேசியே பெரியவர் தமக்குமுன்*
*சங்கை செய்து கீழ்ப்படிந் தடக்கமாயிராதநான்*
*சாண்குழி பிழைக்கவெகு தப்பறைகள் சொல்லியே*
*எங்கனும் வினைபுரிந்த கேடனுக்கிரங்கவென்று*
*ஏகனுக் குரைக்கவேணும் இயேசுநாத சுவாமியே.*[37]

இப்பாடலில் இயேசுவின் மூலம் தமது மன்றாட்டை இறை வனுக்குத் தெரியப்படுத்துகிறார் வேதநாயகர்.

வேதநாயகர் தம்முடைய இசைப்பாடல்கள் மூலமாகவே தமிழ்க் கிறிஸ்தவர்களிடையே இன்று பெரிதும் அறியப்பட்டு வருகிறார். அவர் ஏறத்தாழ ஐந்நூறு பாடல்கள் 'ஞானப்பத கீர்த்தனைக'ளாக இயற்றியுள்ளார்.[38] பலப்பல பண்களில் அவர் பாடல்கள் அமைந்துள்ளன. மிடுக்கான நடையில் தெரிப்பாகக் கருத்துக்களை வழங்கும் பெற்றியை அவற்றில் கண்டு மகிழலாம்.

*ஆதம் வினை தீரப்புது*
*ஆதம் என வந்துதித்த*
*ஆதவா திவ்ய மாதவா*[39]

*கோதே புரிஆதாமுடைய கோத்ர திருவேஷன்*[40]
*தந்தையர் தர வந்தவா, — பசு*
*மந்தை யூடு பிறந்தவா, — கதி*
*தந்தவா, சொல் உவந்தவா — மெய்*
*சிறந்தவா, விண்ணெழுந்தவா, திவ்ய*

*தேவ தேவனே, எகோவா*
*வாவென் ஜீவனே*[41]

போன்ற அடிகள் சாஸ்திரியாரின் பாடல்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும். சாஸ்திரியார் இசைமாமேதை தியாகையரின் (1767-1847) சமகாலத்தவர். சில கல் இடை வெளிக்குள்ளாகவே இருவரும் வாழ்ந்துள்ளனர். இருவரும் தஞ்சை சரபோஜி மன்னனின் பெருமதிப்பைப் பெற்றிருக் கிறார்கள். தியாகப் பிரம்மத்தின் பாடல்களைக் கேட்கும் வாய்ப்பு நிச்சயமாக சாஸ்திரியாருக்குக் கிடைத்திருக்கவேண் டும். சாஸ்திரியார் நாட்டுப்பாடல் நடையைத் தழுவியே பல பாடல்களை எழுதியுள்ளாரெனினும் சில பாடல்களை இசை மேதைகளின் நுண்ணிய ராக தாள லயங்களைச் சார்ந்தும் எழுதியுள்ளார். சிறப்பாக அவர் தியாகையரின் ஒரு பாடலைத் தழுவி எழுதியுள்ளதைக் காட்ட தா.வி. தேவநேசன் தம் நூலில் இருவர் பாடல்களையும் உள்ளவாறே பதிப்பித்துள் ளார்.[42] அதிலிருந்து ஒப்புமை காட்டுதற்காகப் பாடல்களின் பல்லவி, அனுபல்லவிகளைக் கீழே தருகிறேன்.

இராகம்:நாட்டக் குறிஞ்சி தாளம்-ரூபகம்

பல்லவி

*ஸுஜன ஜீவனா—ஸுகுண பூஷணா ராமா ஸுஜன*

அனுபல்லவி

*புஜக பூஷணா ஸரிதபுத ஜனாவனா*
*அஜவந்த்த துருதசம்தன தசதுரங்கமா ராமா*

தியாகையர் (தெலுங்கு)

பல்லவி

*பரம ஜீவனா—பவவிமோசனா சீமா பரம*

அனுபல்லவி

*கிருபையாசனா கிறிஸ்தருள் செய்யோசனா*
*தருமிங்கித நிறைசுந்தா திரவிய சம்பன்னா*

சாஸ்திரியார் (தமிழ்)

தியாகையரைப் போன்றே சாஸ்திரியாரும் தம் பாடல்கள் ஒவ்வொன்றின் இறுதியடியிலும் தம் பெயரைப் பதிப்பித்துள் ளார். இது அக்காலத்தில் தஞ்சையில் பணியாற்ற வந்த மேனாட்டு அருள் தொண்டர்களுக்குப் பிடிக்கவில்லை. எனவே வேதநாயகரின் பெயருடைய இறுதி அடிகள் ஆலய வழிபாட்டில் பாடப்படுதல் கூடாது என்று ஓர் உத்தரவு பிறப் பித்தார்கள். பக்திக் கவிஞர் துகாராம், இசைமாமேதை தியாகை யர் ஆகியோரைப் பின்பற்றியே சாஸ்திரியார் 'வேதநாயகன்' என்று தம் பெயரைப் பாடல்களின் இறுதி அடியில் சேர்த்து வந்தார். இறைவன் திருமுன்றில் அடியார்கள் பாடும்போது எந்த மனிதனின் பெயரும் குறிப்பிடப்பட வேண்டிய அவசிய

மில்லை என்பது மேனாட்டுத் தொண்டர்களின் வாதம். சாஸ்திரியார் சில பாடல்களின் இறுதி அடியில் வரும இறை விளிப்புத் தொடர்களை 'வேதநாயகன் பாட்டா'[43] என்று அமைத்துள்ளார். இத்தகு தொடர்கள் எளிதாக இரு பொருட் படுத்தப்படக்கூடும் என்பதைச் சிலர் உணர்ந்திருக்கலாம். இயேசுவைப் பல பாடல்களில் சாஸ்திரியார் 'வேத நாயகா!' என்று விளித்திருப்பதும் அவர்களுக்கு ஏற்புடையதாகத் தெரியவில்லை. சாஸ்திரியாரைப் பற்றிய ஆய்வுகள் நடத்தி நூலெழுதியிருக்கும் தேவநேசனும், ''கிறிஸ்துவையே 'வேத நாயகா'வென அழைத்துப் பாடினதற்கு நியாயம் கூறுவதரிது'' என்று கூறுகிறார்.[44] இப்போது 'கிறிஸ்தவக் கீர்த்தனை'கள் நூலில் இடம் பெற்றிருக்கும் பாடல்களில் இறுதி அடிகள் நீக்கப்பட்டுள்ளன. 'தேவ தோத்திரப் பாடல்'களில் சாஸ்திரி யாரின் பெயரைத் தாங்கிய இறுதியடிகள் சேர்த்துப் பதிப் பிக்கப்பட்டுள்ளன. சில பாடல்களில் இறுதியடியில் மிகப் பணிவுடன் தம்மைத் தாழ்த்தும் வகையில் சாஸ்திரியார் தம் பெயரைப் பதிப்பித்துள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். ஒரு பாடலின் இறுதி வரியை,

*தூதர்களின் பாட்டுனக்குச் சோபனப் பாட்டு*
*வேதநாயகன் பாட்ட தென்ன பாட்டு*

என்று அமைத்துள்ளார் கவிஞர். இத்தகு அடிகளைக் கவிஞரே பாடும்போது அவை நிறைபொருள் தர முடியும்; கேட்போரை யும் பிணிக்க முடியும். ஆயின், கூட்டு வழிபாட்டில் இது போன்ற அடிகள் பாடப்பட்டால் அவை தனி மனிதன் புகழ்ச்சியாகவோ இகழ்ச்சியாகவோ அமைந்துவிடும் என்று கருதியே தமிழ்த் திருச்சபைத் தலைவர்கள் அவற்றை நீக்கி யுள்ளார்கள் என்று தெளிய வேண்டியுள்ளது.

தமிழ் இலக்கிய மரபுகளை நன்கறிந்து அவற்றைக் கொண்டு கிறிஸ்தவ இலக்கியத்தின் வடிவழகையும் ஓரள வுக்கு உட்கூறுகளையும் சிறப்பிக்க முயன்றுள்ளவர் சாஸ்திரி யார். அவருக்கு மேனாட்டுப் பாதிரியார்களும் தமிழ்த் தொண் டர்களுமான டாக்டர். ஜி.யு. போப் (1820-1903) பேராயர் இராபர்ட் கால்டுவெல் (1814-1891) ஆகிய இருவரும் சூட்டி யுள்ள புகழாரங்களை எடுத்துக்கூறி இப்பகுதியை முடிப்போம்.

கிறிஸ்தவத் தமிழ் இலக்கியம் பற்றிப் பேசும்போது ஜி.யு. போப் அவர்கள் பெப்ரீசியஸ், டிநொபிலி போன்றோரின் பெயர் களைக் குறிப்பிடுகிறார். தொடர்ந்து ''சிறந்த தமிழ்க் கவிஞர் என்று போற்றத்தகுந்த வகையில் ஒரு கிறிஸ்தவரையாவது காண முடிகிறது. அவர்தான் தஞ்சை வேதநாயக சாஸ்திரியார். அவருடைய நூல்களைத் திரட்டிப் பதிப்பித்திட வேண்டும்'' என்று கூறுகிறார்.[45]

பேராயர் கால்டுவெல் தம் நினைவுகளைப் பற்றி எழுதி யுள்ள நூலில், ''1841-ஆம் ஆண்டில் தஞ்சை மாநகரில் புகழ் பெற்ற 'தஞ்சைக் கவிஞ'ரைச் சந்தித்தேன். அவர் பெருந் திறன் படைத்தவர்; கவிபுனையும் ஆற்றல் மிகுந்தவர். பெருத்த அளவில் அவர் பாடல்களை இயற்றியுள்ளார். அவற் றுள் பெரும்பான்மையானவை தமிழ்க் கிறிஸ்தவர்களின் தனித் தியானத்திற்கும் கூட்டு வழிபாட்டிற்கும் பயன்படக் கூடியவை. அவருடைய இலக்கியத் தொண்டு என்றும் நின்று நிலைப்பதாகும்.''[46] என்று எழுதியுள்ளார்.

# தமிழ்ச் சமய நெறியில் தஞ்சை வேதநாயக சாஸ்திரியார்

தமிழிலுள்ள சிற்றிலக்கியங்களோடு தேவாரம், திருவாசகம், திருப்புகழ் போன்ற பாசுரங்களிலும் பிற இசைப்பாடல் வகைகளிலும் வேதநாயக சாஸ்திரியாருக்குப் பெருத்த ஈடுபாடு இருந்துள்ளதைப் போன்றே அவ்விலக்கியங்களில் உள்ளடங்கும் சீரிய சமயக் கருத்துக்களிலும் அவர்க்கு ஈடுபாடு இருந்துள்ளது.

விவிலியக் கருத்துக்களுக்கு விளக்கம் தருவதற்கு நம் நாட்டுச் சமயக் கருத்துக்களை அவர் துணைக்கழைக்கத் தவற வில்லை. அவர் காலச் சூழலை வைத்து இதனைக் காணும் போது அவருடைய முயற்சி துணிவுடையதொன்றாகவே தோன்றுகின்றது. வேதநாயகர் யாண்டும் கிறிஸ்தவ அடிப் படைக் கொள்கைகள் சிதையுமாறு இந்து சமயக் கருத்துக் களை எடுத்தாளவில்லை. கிறிஸ்தவத்தின் அடிப்படைக் கருத் துக்களுக்கு அணிசெய்யும் வகையிலேயே அவைகளை அவர் ஆண்டுள்ளார். கிறிஸ்தவக் கருத்துக்களுக்கு மிக நெருங்கிய வைகளாகத் தோன்றிய இந்து சமயக் கருத்துக்களையும் தொடர்களையும் அவர் விரும்பி ஏற்றுத் தம் பாடல்கள் வழியே தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கு அறிமுகப்படுத்துகின்றார். எதை யும் ஊன்றிக்காணும் பண்பும் பரந்த நன்னோக்கும் உடை யோர்க்கு மட்டுமே அவருடைய உள்ளப் பாங்கு விளங்க முடியும்.

'*கிறிஸ்தவக் கீர்த்தனைகள்*' என்னும் பாடல் தொகுப்பு நூலில் சாஸ்திரியாரின் பாடல்களே அதிகமாக உள்ளன. இன் னும் பல பாடல்கள் அதில் சேர்க்கப்படாததற்குக் காரணம் அவற்றில் காணக்கிடக்கும் இந்து சமயக் கருத்துக்களும் சொற்

களும் கிறிஸ்தவர்களுக்குக் குழப்பம் விளைவிக்கலாம் என்று பதிப்பாசிரியர்கள் கருதியதே ஆகும். ஆயின், 'பரப்பிரம்ம எகோவா'[1] 'சச்சிதானந்தா'[2] 'சமயம் ஈராறோர் ஆறு சாத்திரங்கள் வேத நான்கும் அமையும் தத்துவம் தொண்ணூற்றாறும் ஆறும் கடந்தோன்'[3] போன்ற தொடர்கள் உள்ள பாடல்களை அவர்கள் அப்பாமாலையில், சேர்த்திருப்பது பாராட்டிற்குரியதேயாகும்.

சாஸ்திரியார் 'ஓம்' என்ற சொல்லைத் தம் பாடல்களில் பெரிதும் ஆண்டுள்ளார். அவருடைய '**ஜெபமாலை**'யின் மூன்றாம் பகுதி 'ஓம் பிரணவம் இருக்கிறோம்', என்ற தலைப்பைக் கொண்டுள்ளது. இப்பகுதியில் வரும் பத்துப்பாடல்களின் ஈற்றடிகள் 'ஓம் நமா' என்றே முடிகின்றன. 'பொன்னுலகுச்சிதப் புகழ்ச்சி ஓம் நமா' என்று முதற்பாடல் ஆரம்பமாகின்றது.[4] இடையில் 'இஸ்ரவேல் அதிபதி இயேசு ஓம் நமா'[5] 'மேசியா கிறிஸ்து விண்வேந்தன் ஓம் நமா'[6] என்னும் வரிகள் வருகின்றன. '**கிறிஸ்தவக் கீர்த்தனைக**'ளின் திருத்திய பதிப்பில் 'ஓம்' என்னும் சொல் நீக்கப்பட்டுள்ளது. 'நமா ஓம்' என வரும் தொடர் 'நமாவே' என்று திருத்தப்பட்டுள்ளது. இத்தொடருக்குப் பொருள் என்னவென்றே விளங்கவில்லை. சாஸ்திரியார் 'ஓம்' என்னும் சொல்லை ஆளும்போது யோவான் அடிகள் கிறிஸ்துவை 'வார்த்தை' என்ற பொருள் தரும் 'லாகாஸ்' என்னும் சொல்லால் குறிப்பது[7] அவர் மனத்தில் இருந்துள்ளது. 'ஓசையா உயிரையா.... வந்தார்'[8] போன்ற தொடர்களாலும் அவர் இக்கருத்தை நுட்பமாக உணர்த்திக் காட்டுகிறார்.

ஓரிறைக் கோட்பாட்டு நெறியை விவிலிய வழியே ஏற்கும் சாஸ்திரியார், 'இயேசுவின் தந்தை' 'எகோவா' 'சிவன்' 'அல்லா' ஆகிய பெயர்கள் யாவும் 'ஊருமிலான் பேருமிலான்

ஒன்றுமிலான் பந்துஜனம் ஆருமிலான்'[9] என்று அவர் குறிக்கும் முழு முதற்பொருளாம் இறைவனையே சுட்டுவன எனக் கொள்கிறார். 'ஒரு நாமம் ஓருருவம் இல்லாற்கு ஆயிரம் திரு நாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ'[10] என்னும் திருவாசகப் பெருநோக்கோடு சாஸ்திரியார் இறைபுகழ் பாடுகின்றார். 'இறைவனின் எல்லாப் பெயர்களிலும் தூய்மை விளங்குகிறது' (All God's names are hallowed) என்று மார்ட்டின் பூபர் (Martin Buber) கூறுவது இங்கு எண்ணத்தகுவதாகும். வேறு எந்தத் தமிழ்க் கிறிஸ்தவக் கவிஞரும் எடுத்துரைக்கத் துணியாத முறையில் மேற்கண்ட இறைப்பெயர்களைச் சாஸ்திரியார் எடுத்தாண்டுள்ளார். எடுத்துக்காட்டுக்குச் சிலவற்றைக் காண்போம்:

*'ஓம் அல்லா அல்பா ஒமேகாவே*
*மாவல்லா! மகத்துவ தெய்வீகா!'*[11]

*'அல்லா அல்லாவே யே யோவாவே*
*அரிய அரிய வாழ்வே'*[12]

*'எவாள் சுதாவே குதாவே'*[13]

*'சிவ தவ சிப நவ தெய்வ அதி*
*சய சொரூபியே....'*[14]

*'ஆண்ட சதாசிவ கருணா...'*[15]

*'மூவா பரப்பிரம்ம எகோவா திரித்துவத்தின்*
*மூன்றாள் ஒன்றாக வந்த தாவீதின் மைந்தனான ஏசுதேவா'*[16]

இப்பாடல் வரிகளில் 'அல்லா' 'குதா' 'சிவன்' 'சதாசிவம்' 'பரப்பிரம்மம்' 'எகோவா' 'திரித்துவம்' ஆகிய யாவும் உயர் தனிச் செம்பொருளான இறைவனையே சுட்டுவனவாக அவர்

ஏற்கின்றார். அத்துடன், 'தாவீதின் மைந்த'னாகவும், திரித்துவத்தின் இரண்டாவது ஆளாகவும் (Second Person of the Trinity) போற்றப்படுகின்ற இயேசு கிறிஸ்துவுக்கு அப்பெயர்கள் பொருந்துவன என்றும் அவர் கொள்கின்றார்.

சாஸ்திரியாரின் பாடல்களில் 'இறை நிலை', 'இறைத்தன்மை', 'இறைப்பண்புகள்', 'இறைத்தொழில்' ஆகியவற்றை விளக்கும் சொற்களும் தொடர்களும் நூற்றுக்கணக்கில் காணப்படுகின்றன. அவற்றுள் அவர் அடிக்கடி ஆளுகின்றவைகளை ஆய்ந்திடும்போது அவை நம் நாட்டு மரபுகளையும் வழக்குகளையும் தழுவி அமைந்துள்ளன என்பதைக் காண முடிகின்றது. இறைவனின் உண்மை உளதாம் நிலையையும், பேரறிவுப் பேரின்ப நிலைகளையும் தொகுத்துச் சுட்டும் சச்சிதானந்தா என்னும் தொடர் அவரைப் பெரிதும் கவர்ந்துள்ளது. குறிப்பாக, இறைவனின் 'பேரறிவுநிலை' அவருடைய அதிகடப்புத்தன்மையையும், மானிட அறிவின் வரம்பினையும் எடுத்துரைப்பதைக் கண்டு வியக்கின்றார். இறைவனைச் 'சொல்லரும் மெய்ஞ்ஞானர்'[17] 'அறிவின் உருவாகிய மூலர்'[18] 'அனந்த ஞானசொரூபன்'[19] என்று குறிப்பிடுகின்றார். இறைவன் சித்துப்பொருளாகவும் நுண்பொருளாகவும் இருத்தலை 'அம்பர தேவ சிதம்பரநாதா'[20] என்னும் தொடரின் மூலம் எடுத்துக்காட்டுகிறார். இறைவன் ஆவியாய் இருக்கின்றார்[21] என்னும் விவிலியக் கருத்தைக் 'காணப்படாத அரூபன்'[22] 'சடமிலான்'[23] 'பரிசுத்தரூபி'[24] போன்ற தொடர்களால் விளக்க முயன்றுள்ளார் சாஸ்திரியார்.

இறைவனுடைய வியாபகத்தன்மையைக் கூற வரும்போது 'தோணப்படாத வியாபன்'[25] 'ஓரிடத்தில்லாதான்'[26] என்று இறையியல் நோக்குடன் தொடர்களை

அமைக்கின்றார். அதனையே பக்தர்கள் மொழியிலும் கூறிக் காட்டுகின்றார்:

*எண்ணுமாகினை இறையுமாகினை*
*ஏகமாகினை ஆகமாகினை*
*கண்ணுமாகினை வழியுமாகினை*
*கதியுமாகினை பதியுமாகினை*
*பண்ணுமாகினை பாவுமாகினை*
*பரமுமாகினை வரமுமாகினை*
*விண்ணுமாகினை வெளியுமாகினை*
*வேதநாயகா! வேதநாயகா!*[27]

என்ற பாடல் ஒன்றே இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமையும்.

இங்ஙனம் இறைவனை எங்கும் நிறைந்தவனாகவும், யாவுமாய் விளங்குவோனாகவும், நலன்களை வழங்குவோனாகவும் காணும் கவிஞர் அவனுடைய உறைவிடமாக விண்ணகத்தையும் சிறப்பித்துக்காட்டத் தவறவில்லை! 'மாகமண்டல விலாசன்'[28] 'விண்தலத்துக் கப்பால் வெளிச்சத்துலவு பரமண்டலத்துக் கேரூபின் வாரணத்தான்'[29] 'எட்டாத சோதியின் வாசன்'[30] என்பன போன்ற விளக்கத் தொடர்களால் இறைவன் விண்ணகத்தான் என்ற கருத்தை வெளிப்படுத்திக் காட்டுகிறார். அவனுடைய விண்ணகத் திருக்கோலத்தைப் பலபட விளக்குகின்றார். இறைவன் திரித்துவ நிலையில் அங்கே கொலு வீற்றிருப்பதாகச் சொல்கிறார். 'மைந்தன் ஆவியும் ஒன்றாக அனாதியான் பரம பத்திராசனத்தில் வீற்றிருந்தார் அன்றே!' என்னும் வரிகளால் இதனை அறிகின்றோம்.[31] அங்ஙனம் வீற்றிருக்கும் பரம தந்தையாம் இறைவனை அண்டர்

குழாத்தினர் அனைவரும் தொழுது வாழ்த்துகிறார்கள். அவர் களுடன் மைந்தராகிய கிறிஸ்துவும் அவரைத் தொழுகின்றா ராம்! 'மரிய மதலை தொழு பாதா!'[32] என்று பாடும் போது சாஸ்திரியார் இக்கருத்தைப் புலப்படுத்துகிறார். இங்ஙனம் திரித்துவத்தின் மூவருள் முதல்வரான தந்தையாம் இறைவன் சில இடங்களில் தனித்துச் சிறப்பிக்கப்படுகின்றார்.

கேருபின், சோரபீன் என இரு விண்ணகப் பிறவிகள் விவிலியத்தில் குறிக்கப்படுகின்றனர். அவர்களுள் கேருபின் கள் ஏதேன் தோட்டத்திலும் விண்ணகத்திலும் நிறுத்தப்பட் டுள்ள காவலர்கள்.[33] இறைவனின் அரியணையையும் அவர் கள் தாங்கி நிற்பர்.[34] இறைவனுக்கு ஏவலாளராகவும் அவர்கள் பணியாற்றுவர்.[35] இக்கருத்துக்களை ஒட்டி, 'கேருபின் வார ணத்தான்' என்ற தொடரை அமைக்கின்றார் சாஸ்திரியார். 'இறைவன் கேருபின் மேல் ஏறிப்பறந்தார்' என்று பழைய ஏற்பாட்டுச் சங்கீத நூலில் வரும் வரியைக்கொண்டு[36] சாஸ்தி ரியார் 'நவகேருபின் மேல் உவகையாகவே பவனி வந்தனரே'[37] என்று இறைவனைப் புகழுகின்றார்.

இறைவன் வீற்றிருக்கும் விண்தூயவைப்பில் பன்னிரு அப்போஸ்தலர்கள் 'வேதபாராயணம்' செய்து கொண்டிருப்ப தாகவும் சாஸ்திரியார் கூறுவார்.

*'பன்னிருவர் வேதபா*
*ராயணங்கள் பண்ண முன்னாட்*
*பன்னிரு பிதாக்கள்*
*பணிந்து தொழும் வாசலினான்'*

என்பது அவர் பாடல்.[38]

இது நடைபெறும் இடத்தில் இறைவனின் கொடியும் நாட்டப்பட்டுள்ளதாம். அது 'சிலுவைக்கொடி' என்று கூறுகிறார் சாஸ்திரியார். 'பரதேவ'னாகிய இறைவனைச் 'சிலுவைக் கொடியான்'[39] என்றும் 'சிலுவைத் துவச விருதன்'[40] என்றும் குறிப்பிடுகின்றார்.

விண்ணகத்தில் இறைபுகழ் ஓதுவாரும் இறையேவல் செய்வாரும் எண்ணிலடங்காதோராக உள்ளனர் என்பதைக் குறிக்கவரும் கவிஞர் 'நூறுலட்சங் கோடி சங்கத் தலைவர்'[41] என்று தொடர் அமைத்து அதனை இயேசுவுக்கு ஏற்றிச் சொல்கிறார்.

இறை நிலையை எடுத்தோத சாஸ்திரியார் இறையியல் அணுகுமுறை, இறையுறவு (பக்தி) அணுகுமுறை, படிமக் காட்சி (புராண) அணுகுமுறை ஆகிய மூன்றனையும் கையாளுதலை அவர் நூல்களில் பரக்கக்காண முடிகின்றது. இம் மூன்று அணுகுமுறைகளும் நம் நாட்டுச் சமய இலக்கியங்களில் விரவி ஓடுவதை நன்கு உணர்ந்தும் சுவைத்தும் அவர் அவற்றை ஏற்கின்றார் என்பது தெளிவு.

இறைப்பெருமை பற்றிப் பேசும்போது இறைவன் பழமைகள் யாவற்றுக்கும் பழையோன், புதுமைக்கும் உரியவன் என்ற கருத்து அவருக்குச் சிறப்புடையதாகத் தோன்றுகின்றது. மாணிக்கவாசகர்,

*'முன்னைப் பழம்பொருட்கு முன்னைப்*
*பழம் பொருளே*
*பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப்*
*பெற்றியனே'*[42]

எனக் கூறுவதையும், விவிலியம் 'ஆதியிலே இறைவன்'[43] எனத்தொடங்கி 'இதோ, நான் யாவற்றையும் புதிதாக்குகிறேன்'[44] என்ற இறைவாக்குறுதியை இறுதி நூலின் இறுதிப் பகுதியில் தருவதனையும் ஒட்டிச் சாஸ்திரியார்,

*'முந்திய பிந்திய எந்தாய்'*[45]

என்றும் 'நூதனப் புவிதன நூலாசான்' என்றும் பாடுகிறார்.[46]

இறைவனின் பெருமைகளைக் கூறவரும்போது சாஸ்திரியார் பெரிதும் ஆளும் தொடர்கள் 'நிறை பூரணன்'[47] 'எல்லார்க்கும் பெரியான்'[48] 'ஏகப்பதி'[49] 'சருவேசன்'[50] 'பராபரன்'[51] 'மெய்த்தேவு' 'மெய்த்தேவன்'[52] 'ராஜாதி ராஜன்'[53] 'ஆதி அந்தம் இல்லான்'[54] 'அந்தம் அடி நடு இல்லாதவர்'[55] 'தேவத்துவ பரிசுத்தர்'[56] 'விமலன்'[57] ஆகியவை ஆகும்.

இவற்றுள் 'சருவேசன்' என்பது அக்காலத்தில் பெரிதும் கத்தோலிக்கச் சபையிலும், 'பராபரன்' என்பது பிற சபைகளிலும் வழக்கில் இருந்து வந்த தொடர்களாகும். 'அந்தம் ஆதி இல்லான்' என்றும் 'அந்தம் அடி நடு முடிவு இல்லாதவர்' என்றும் பல இடங்களில் இறைவனைக் குறிப்பிடும் சாஸ்திரியார் மற்றும் பல இடங்களில் அவரை 'அல்பா ஒமேகா' (Alpha and Omega) என்றும் குறிப்பிடுகின்றார்.[58] 'அந்தமும் ஆதியும் அகன்றோன் காண்க'[59] 'அடியொடு நடு ஈறானாய்'[60] போன்ற மாணிக்கவாசகரின் கருத்துக்கள் இங்கு ஒப்புநோக்கத் தகுந்தனவாகும்.

இறைவனின் பண்புகளைத் தொகுத்துச் சுட்டும்போது 'எண் குணமுடைய பேறான்'[61] 'ஆறிலக்கணச் சொரூபன்'[62] 'பத்தி லட்சணத்தான்'[63] 'குறியாறு நாலும் நெறியாறு

நாலும்'[64] உடையோன் என நம் நாட்டுச் சமயத்தொடர்களை ஆளுகின்றார். இவற்றுள் 'நெறியாறு நாலும்' என்னும் தொடர் பழைய ஏற்பாட்டில் இறைவன் இஸ்ரவேல் மக்களுக்கு அருளிய பத்துக் கட்டளைகளைக் குறிக்கின்றன.

இறைவனின் பண்புகளைத் திருவடையாளங்கள் கொண்டும் வேதநாயகர் குறிக்கின்றார். 'கண்ணறிவு ஒன்றும்', 'கழலது இரண்டும்', 'கதிப்பதம் நான்கும்' என்னும் தொடர்கள் குறிப்பிடத் தகுந்தவை ஆகும். அவற்றுள் 'கண்ணறிவு' ஞானக்கண்ணையும் 'கழலது இரண்டும்', திருவடிகளையும், 'கதிப்பதம் நான்கு' சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் ஆகியவற்றையும் சுட்டுகின்றன. இந்த வரிசையில் 'காயமதைந்தும்' என்று இயேசுவின் சிலுவைக் காயங்களையும் இறைவனின் அடையாளங்களாகச் சேர்க்கின்றார்.[65]

விவிலிய நூலில் இறைவன் ஆபிரகாம் போன்ற அடியார்களை அழைத்து ஆட்கொள்ளுவதையும், இஸ்ரவேல் மக்களோடு கொள்ளும் உடன்படிக்கைத் தொடர்புகளையும், இயேசுவின் திருச்செயல்களையும் 'திருவிளையாட்டு' என்ற தலைப்பின் கீழ் 'ஞானவுலா'வில் நாற்பத்தொன்பது வரிகளில் பாடிச்செல்கிறார்.[66] இயேசுவை அவர் 'ஆனந்தத் திருவிளையாட்டுக்கோனே' என்று ஒரு பாடலில் விளிக்கின்றார். அடியார்களோடு இறைவன் கொள்ளும் தொடர்புகளையும் அவர்களை ஆட்கொண்டு நடத்தும் மாண்புகளையும் குறிக்கச் சைவம் ஆளும் 'திருவிளையாடல்' என்னும் தொடர் அவரைப் பெரிதும் கவர்ந்துள்ளதை இதினின்றும் காணமுடிகின்றது. விவிலியத்தில் பழைய ஏற்பாட்டு நூலில் காணப்படும் மன்னுருவேற்பையும் (Theophany) புதிய ஏற்பாட்டில் பேசப்படும் ஊனுடலெடுப்பையும் (Incarnation) அவர் திருவிளையாட்டின் வகைகளாகக் கொள்கிறார். ஊனுடலெடுப்பை மட்டும் தனித்

துச் சுட்டும் போது 'திருவேடம்' என்ற தொடரால் அதனைக் குறிக்கின்றார்.[67]

இறையறிவுக்கு மறைநூல்கள் துணை நிற்கின்றன. இறைவன் மறைமுதல்வன் என்ற உண்மையினை 'மறையாரணன்', 'ஆரண காரணப் பெருமான்', 'வேதாந்தவேத முடிவு'[68] 'மா வேத ஞான மந்திர சூத்திரன்'[69] போன்ற தொடர்களால் சாஸ்திரியார் எடுத்துரைக்கின்றார். இறையியல் என்பது மறையியலே என்பதனை இங்ஙனம் வலியுறுத்துகின்றார். 'கடவுளின் வார்த்தை' (Word of God) என்று ஏற்கப்பெறும் விவிலியம் சப்த பிரமாணமாக அமைவதையும் இதன் மூலம் உணர்த்துகின்றார்.

இறைவனைப் படைப்பாளனாகப் போற்றிப்பாடும்போது விவிலியத்தில் காணப்படாத நம் நாட்டுக் கருத்து ஒன்றினைச் சாஸ்திரியார் கோடிட்டுக்காட்டுவது நம் கருத்துக்குரியதாகும். விவிலிய நூலின் முதல் ஆகமமான ஆதியாகமத்தில் படைப்புப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. அந்நூலின் மூன்றாம் அதிகாரத்தில் மனிதன் மண்ணினின்றும் உருவாக்கப்பட்டவன் என்ற கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.[70] நம் நாட்டுச் சமயக்கருத்தின்படி மனிதன் பஞ்ச பூதங்களின் கூட்டுச் சேர்க்கையாகிய உடலைக்கொண்டுள்ளவன்; அண்டத்தின் சிற்றுருவாகப் பிண்டம் அமைகிறது. இனி, ஞானத்தச்சனாகிய இறைவன் மனிதனைப் படைத்ததைப் பற்றிக்கூறும் போது சாஸ்திரியார்,

*'வீடு கட்டினானே ஞானத்தச்சன்*
*வீடு கட்டினானே......*
*அண்டத்திற் கண்டது பிண்டத்திற் காணவே....'*[71]

என்றும்,

*'வீடு கட்டினான் பூதியம் நான்கையும்*
*மெய்ப்புடன் சேர்த்தொருமிப்பது வாய்கொண்டு*
*நீடும் பிருதிவியைப் பிரதானமாய்*
*நேரிட்டோர் அங்கமாய்ச் சீரிட்டமைத்துமே...'*[72]

என்றும் பாடுகிறார்.

இறைவனின் படைப்புக்களுக்கு மகுடமாக விளங்கும் மனிதன் 'நடமாடக் கோவி'லாக—இறைவன் உறையும் ஆலயமாக[73] விளங்குவதைக் காட்ட,

*'உன்னத வீட்டுக்குச் சன்னதி வாசலோ*
*டொன்பது வாசலும் பின்புற வீதியும்*
*வன்ன மதிள்களுந் துன்னி நெருங்கத்தான்*
*மட்டுக்குள்ளே சாண் எட்டுக்குள்ளேதான்... வீடுகட்டினானே'*

என்றும் பாடுகிறார்.[74]

இறைவன் மீட்பருளுவோன்; அருளால் அதனை ஈந்திடுவோன்; காவில் (ஏதேன் தோட்டத்தில்) 'ஏவை பறித்த கனியால்' 'ஆதம் புரிந்த பாவத்தால்'[75] எழுந்த வினையை இயேசுவின் மூலம் தீர்ப்போன் என்ற விவிலியக் கருத்தை அவர் தம் நூல்களில் பலபடக் கூறிக்காட்டுகிறார்.

*'வாதை உமக்கெதினால் உண்டாயிற்று?*
*பாதகி பாவத்தினால்!*
*வேதம் நிறைவுற ஆதிப்பவம் அற*
*நீதிதரும் இயேசு நாத சுவாமியே'*[76]

என்பது அவருடைய பாடலொன்றின் அடியாகும்.

தீவினையாம் பாவத்தினை அவர் மூன்றாகப் பகுத்துக் காட்டுகிறார்.

*'........... தெரியா நாட்*
*பாவத்தையும் தெரிந்த பாவத்தையும் செனன*
*பாவத்தையுங் கொல்பவ நாசன்'*[77]

என்ற வரிகளில் அம்மூவகைப் பாவங்களைக் காணமுடிகிறது. 'தெரியா நாட் பாவம்' என்பது குழந்தைப் பருவத்துப் பாவச் செயல்களைக் குறிக்கலாம்; அல்லது 'பிதாக்களின் குற்றத்தைப் பிள்ளைகளிடம் விசாரிப்போர்'[78] என்ற பழைய ஏற்பாட்டுக் கருத்தைச் சார்ந்து அமைந்த தொடராகவும் இருக்கலாம். 'தெரிந்த பாவம்' மனிதன் இவ்வுலக வாழ்வில் இயற்றும் பாவங் களான ஆகாமியத்தைச் சுட்டுகிறது. 'செனன பாவம்' என்பது முதல் மனிதனின் பாவச்செயல் மனித இனம் முழுவதையும் பற்றி நிற்பதாகக் கூறப்படும் 'ஆதிப்பாவ'த்தைக் (Original Sin) குறிக்கின்றது.[79] சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் ஆகிய மூவகைப் பகுப்புக்கு இணையான பகுப்பு ஒன்று விவிலியத்தில் உள்ளது என்பதனையும், கருத்தளவில் விவிலியக் கொள்கை சஞ்சிதம், பிராரத்தம் ஆகியவற்றினின்றும் மாறுபடுகின்றது என்பதனையும் சாஸ்திரியார் மேற்காட்டிய வரிகளால் தெரி விக்கின்றார்.

அடுத்து, சாஸ்திரியார் தம் நூல்களில் இயேசு கிறிஸ்து வைத் தமிழ்ச் சமயப்பின்னணியுடன் கண்டு போற்றும் மாண்பு நம் சிந்தனைக்குரியதாகும்.

இயேசுவைக் 'கலிலேயன்' (கலிலேயா மாநிலத்தவர்) 'நாசரேத்தூரார்' என அவர் கால மக்கள் குறிப்பிட்டனர். அவரு டைய மரணம், உயிருற்றெழுல் ஆகியவற்றுக்குப் பின் அவ ரைக் 'கல்வாரி நாதர்' என அவர் அடியார்கள் குறிக்கும் வழக்

கம் ஏற்பட்டது. ஆயின், அவர் பிறந்த ஊரின் பெயரோடு அவரை இணைத்துப் பேசும் பான்மையைச் சாஸ்திரியாரிடமே காணமுடிகின்றது. அவரைப் 'பெத்தலைப்பதியான்' 'பெத்த லைக்கதிகாரன்' என்று அவர் போற்றுகின்றார். இயேசு அவ் வூரில் பிறந்தாலும் அவ்வூரோடு அவர்க்கு அதிகத் தொடர்பு இருந்திடவில்லை. அவருடைய முப்பத்து மூன்றாண்டுக்கால உலக வாழ்க்கையின் பெரும் பகுதி கலிலேயா மாநிலத்தின் நாசரேத்து, கப்பர்நகூம் போன்ற இடங்களிலும், யூதேயா மாநி லத்தின் எருசலேம், எரிகோ, பெத்தனி, போன்ற ஊர்களிலுந் தான் கழிந்தது. பெத்தலகேமுக்கு அவர் சென்றதாக்ச் சிறப்புக் குறிப்பு ஏதும் புதிய ஏற்பாட்டின் நற்செய்தி நூல்களில் இல்லை. எனினும் பிறந்த ஊரைக்கொண்டு அழைக்கும் தமிழ் மரபைத் தழுவிக் கவிஞர் அவரைப் 'பெத்தலேம் ஊரான்' என்று குறிப்பிடுகின்றார். வாதவூரர், ஆரூரர் போன்ற தொடர் கள் இங்கு ஒத்து நோக்கத் தகுந்தவை ஆகும்.

இயேசுவின் உடலெடுப்பைப் பலபட விளக்கும் சாஸ்திரி யார் சற்று மிகைப்படவும் புராண நிகழ்ச்சிகளின் போக்கினை ஒட்டித் தருவதிலும் இன்பம் காண்கிறார். இயேசுவின் உட லெடுப்பை — அவர் விண்ணகத்தினின்றும் மண்ணகத்திற்குத் தாழ்மைக்கோலம் பூண்டு வந்த மாண்பை — 'வானம் பூமியோ பராபரன் மானிடன் ஆனாரோ?'[80] என்ற இரு வினாக்களின் மூலம் வியந்து போற்றுகிறார். இந்த வினாக்களை எழுப்புவ தோடு நின்றுவிடாமல் அவர் எங்ஙனம் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்திருப்பார், எவை எவைகளைத் தாண்டி வந்திருப் பார், என்பதைப் புராணக் கற்பனை நோக்கோடு சிந்திக்க முற்படுகிறார் சாஸ்திரியார். ஒரு பாடலில்,

*உன்னதத்தின் கிருபாசனத்தை விடுத்து*
*உயர்ந்த வெளியைத் தாண்டி — அந்த*

*உம்பர்கள் சேனைக்குழாங்கள் உலவிய*
*ஒளிவின் விரிவுந் தாண்டிச் சுடர்*
*மின்னிய சேரக்கூடாத வெளிச்சத்தின்*
*வீதிவிலாசமும் தாண்டி அப்பால்*
*விந்தை நட்சத்திர மண்டலங்களுட*
*விம்பத்தையும் விட்டுத் தாண்டிச் சென்று*
*பின்னையுஞ் சூரிய மண்டலத் தினுட*
*பெருஞ்சக்கரமுங் கடந்து — அங்கே*
*பெருத்த கிரக மண்டலத்தை யெல்லாம்*
*பின்னிடத் தள்ளியே நடந்து — சுடர்*
*மின்னும் ஆகாய விரிவின் பெருவெளி*
*மட்டற்ற பாதையிற் றொடர்ந்து — இங்கே*
*மண்டிய தேவரும் அண்டரும் போற்றப்பூ*
*மண்டலத்தைக் கிட்டி......*
*வந்தானே பரன் மகன் வந்தானே*[81]

என்று அவர் பாடிச்செல்கின்றார். அரிதும் பெரிதும் நுட்பமான துமான விவிலியக் கருத்தாகிய இயேசுவின் உடலெடுப்பைப் பாமரரும் கண்முன் நிறுத்திப் பார்க்கக்கூடிய வகையில் கற்ப னையில் தோய்த்து வழங்குகிறார் கவிஞர்.

இனி, கம்பராமாயணத்தின் சுந்தரகாண்டத்தில் வரும் கடல்தாவுப் படலப்பாடல் ஒன்று சாஸ்திரியாரின் பாடலோடு சேர்த்தெண்ணத் தகுந்ததாகும். கடலைத்தாண்டி இலங் கையை அடைந்த வாயு புத்திரனான அனுமானின் வேகத்தைக் கூறவரும்போது கோள்களுக்கும் உடுக்களுக்கும் இடையே உள்ள இடைவெளி இல்லா தொழியும் வகையில் அது இருந் தது; அவ்வளவு வேகமாக அவைகளைக் கடந்து சென்றான் அனுமான் என்கிறார்.[82] கம்பர் அனுமானின் வாயு வேகத்தை வியக்கின்றார்; சாஸ்திரியார் இயேசு கடந்து வந்த தூரத்தை

நினைந்து பார்க்கின்றார். இருவரும் இருவகையான வியப்பு ணர்ச்சிகளில் நம்மை ஆழ்த்திவிடுகிறார்கள். அண்ட சாரசரங் களைக்கொண்ட மாபெரிய காட்சிகளை இருவரும் நம் மனக் கண்முன் நிறுத்துகிறார்கள். தமிழ்ச் சமயக் கவிஞர்களின் கற் பனை ஊற்று தம் உள்ளத்திலும் பீறிட்டெழுவதைக் காட்டு கிறார் சாஸ்திரியார்.

கிறிஸ்துவின் பன்மடிப்புடைய திருப்பணியில் இடம் பெறும் ஆசாரிய — அல்லது — 'குரு'ப் பணியினை நயம்பட விளக்குகின்றார் சாஸ்திரியார். 'குருவென வந்தவனைக் கும் பிடுகிறேன்'[83] என்று கரங்கூப்பிப் பரவசத்தோடு பாடுகிறார். இயேசுவைச் 'சற்குரு' 'அருமைக்குரு' 'சத்தியவேதாந்த சாஸ் திரியார்' 'வேத போதகர்'[84] என்று பலபடப் போற்றுகின்றார். தமக்கு அவர் தீட்சை அளித்துள்ளார்; ஞானத்திரவியமான திருமுழுக்கு என்னும் சாக்கிரமெந்தினை (Sacrament) ஈந்துள் ளார் என்பதைக் குறிக்க, 'தீட்சை தந்து சேர்த்தவனைக் கும்பிடுகிறேன் — ஞானத் திரவியம் ஈந்தவனைக் கும்பிடுகிறேன்'[85] என்று பாடுகிறார். திருமுழுக்கை எவரிடம் பெற்றிருந்தாலும் உண்மையில் அதனை அளித்தவர் தம்மு டைய அருமைக் குருவான இயேசுவே என்கிறார் சாஸ்திரியார். தம்மை வளர்த்துத் தமக்குத் திருமுழுக்குக் கொடுத்த அருள் திரு. சுவார்ட்ஸ் அவர்களை 'ஐயர்' என்றே அவர் எங்கும் குறிக்கிறார். 'குரு' என்னுஞ்சொல் அவர் எழுத்துக்களில் இயேசுவுக்கு மட்டுமே ஏற்றிச் சொல்லப்படுகிறது. இறைவன் தம் அடியார்களுக்கு உள்நின்று உணர்த்துதல் மட்டுமல்லா மல் குருவடிவிலும் வந்து உணர்த்துவான் என்று சாதகர் இயல்பை விளக்கும் சிவஞான போதத்தின் எட்டாம் சூத்திரக் கருத்தும்' 'திருவருட்பய'னில் ஐந்தாம் அதிகாரத்தில் கூறப் படும் விளக்கங்களும் இங்கு எண்ணத் தகுந்தவை ஆகும்.

தமிழ்ச் சமய மரபுகளை ஒதுக்காமல் அவற்றை ஏற்றுத் தம் கிறிஸ்தவ் நம்பிக்கையை அவற்றின் துணையோடு வெளிப் படுத்திக் காட்டுகிறவர் சாஸ்திரியார் என்பதனைச் சில அகச் சான்றுகள் வழியே கண்டோம். அவருடைய பாடற்பகுதி களைக் கொண்டு தமிழகத்தின் பக்திக்கவிஞர்கள் வழிவருப வர் அவர் என்று தெளியலாம். தமிழகத்துப் பக்தி இலக்கியச் சாயலை அவர் பாடல்களில் காண முடிகின்றது. அத்துடன், தமிழ்நாட்டுப் பக்தி இலக்கியத்தை வளப்படுத்தும் முறையில் ஒரு கிறிஸ்தவக் கவிஞராக அவர் வழங்கியுள்ள கருத்தும் உணர்ச்சியும் பின்னிப்படரும் பாடல்களையும் நாம் அவர் நூல்களில் காண முடிகின்றது. கற்றோரை மட்டும் கருத்தில் கொண்டு தம் பாடல்களைப் பாடாமல் மக்கள் அளவில் அவை எளிதாக ஏற்கப்படும் வகையில் பக்திச்சுவை சொட்டும் வண் ணம் அவைகளைப் பாடியளித்துள்ளார் கவிஞர்.

தமிழறிஞர் சேதுப்பிள்ளை அவர்கள் கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர்களைப் பற்றி எழுதியுள்ள நூலில் சாஸ்திரியாரைப் பற்றிச் சிறு கட்டுரை ஒன்று வரைந்துள்ளார்.[86] அதில் தம்மைக் கவர்ந்ததாக அவர் குறிப்பிடும் பாடல் சாஸ்திரியாரின் 'பரா பரன் மாலை'யில் காணப்படுகின்றது:

*'நீயிருக்க வேத நெறியிருக்க நெஞ்சமுற*
*வாயிருக்க நின்பதத்தில் வந்திருக்க என்மனமும்*
*போயிருக்க நின்புதல்வன் புண்ணியனார் அன்பிருக்கத்*
*தாயிருக்கச் சேய்க்குத் தவிப்பேன் பராபரனே!'*

சேதுப்பிள்ளையவர்கள், 'இப்பாட்டில் இரக்கமும் உருக்கமும் நிரம்பி நிற்கின்றன'[87] என்று கூறுவது இங்குக் குறிப்பிடத் தகுந்ததாகும்.

அங்ஙனமே சாஸ்திரியாரின் 'ஞான ஏற்றப்பாட்டி'லிருந்து அவ் அறிஞர் ஒரு பாடலை எடுத்துக்காட்டி, 'வேதநாயகம் போன்ற நல்லியற் கவிஞர்களைப் போற்றி அவர் தம் கவிதையைப் பாராட்டும் நாளே தமிழ்நாட்டுக்கு நன்னாளாகும்' என்று தம் கட்டுரையை முடிக்கிறார்.[88] அப்பாடலை இங்குக் குறிப்பிடுவது சாலப்பொருந்தும்.

*ஒரு பொருளே தெய்வம் — நீ*
*உகந்து தொழு நெஞ்சே!*
*உடைந்து மனம் கெஞ்சே — அந்த*
*ஒரு பரனுக் கஞ்சே!*

நூறு பாடல்களைக்கொண்ட 'ஞான ஏற்றப்பாட்டு' நூலுக்கு இதுவே முதற்பாட்டாக அமைந்துள்ளது.

சிலுவையில் தொங்கும் இயேசுவின் உடலில் இருப்பாணிகளும் ஈட்டியும் ஊடுருவிச் சென்றதால் ஏற்பட்ட காயங்கள் அகில உலகக் கிறிஸ்தவ பக்தர்கள் பலரின் தியானப் பொருளாகவும் பாடற்பொருளாகவும் அமைந்துள்ளன. தமிழ் மண்ணில் பிறந்த வேதநாயகரும் அந்தச் சிந்தனையில் ஈடுபட்டுத் தமது அனுபவங்களை நெஞ்சை உருக்கும் பாடல்களாக அமைத்துள்ளார். அவற்றுள் ஒன்றில்,

*எந்தை விலாவில்*
*இருகால் கரத்திலுற்ற*
*ஐந்து வடுவென்றன்*
*அகத்தில் தழும்பாமே![89]*

என்று தழும்பேற்ற நெஞ்சிலிருந்து குரலெழுப்புகிறார். தூய பிரான்சிஸ் அடிகள் இயேசுவின் சிலுவைக் காயங்களை

ஆழ்ந்து தியானித்தபோது தம் கரங்களில் அக்காயங்களைப் பெற்றதாக ஒரு குறிப்பு உண்டு. தஞ்சை வேதநாயகர் அக் காயங்களின் தழும்புகள் தம் நெஞ்சத்தில் ஏற்பட்டு விட்டதா கச் சொல்கிறார்.

*'உன் கண்ணில் நீர் வழிந்தால்*
*என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி'*

என்ற பாரதியின் உணர்ச்சித்துடிப்புள்ள பாடலடியையும் இக் கட்டத்தில் எண்ணிப்பார்க்காமலிருக்க முடியாது.

இயேசுவின் ஐந்து காயத்தழும்புகளை அகத்தில் ஏற்ப தோடு நின்றுவிட விரும்பாத கவிஞர் அவரை,

*'ஞாயமே தரு நடுவா — ஐங்*
*காயமே உரு கொடுவா!'*[90]

என்றும் அழைக்கிறார். முருகனை நம் நாட்டுப் பக்திக் கவிஞர் கள் வேலேந்திய கோலத்தோடும், மயில் மீதமர்ந்த மாண்போ டும் திருக்காட்சி வழங்கவேண்டும் என்று வேண்டுவதுபோல் சாஸ்திரியாரும் ஐந்து காயத்தழும்புகளாகிய அடையாளச் சின் னங்களோடு எழுந்தருளவேண்டும் என்று வேண்டுகிறார்.

வேதநாயகரின் இறையியல் கருத்துக்களையும் விவிலிய நூலை அவர் விளங்கிக்கொள்ளும் முறையையும் ஆராயும் கிறிஸ்தவ இறையியல் வல்லுநர்கள் அவரை ஒரு பழமை யோம்பியாக மதிப்பிடலாம். ஆயின், அவர் தம் கருத்துக் களைப் பரந்த மனத்தோடு தமிழ்ப் பண்பாட்டில் தோய்த் தெடுத்து வழங்கும் பெற்றியை எவரும் போற்றி வரவேற்பர் என்பதில் ஐயமில்லை.

டாக்டர் ஸ்டான்லி ஜோன்ஸ் அவர்களைப் பற்றிக் கட்டுரை எழுதிய ஒருவர், 'அவருக்குப் பழமை ஓம்பும் உள்ளமும் பரந்த நோக்குடைய மனமும் உள்ளன' (He has a conservative heart and a liberal mind) என்று குறிப்பிட்டுள்ளார். இது வேதநாயக சாஸ்திரியாருக்கும் முழுக்க முழுக்கப் பொருந்தும்.

தமக்குப் பின்வரும் தமிழ்க் கவிஞர்களுக்கும் கிறிஸ்தவக் கவிஞர்களுக்கும் தம் படைப்புக்கள் மூலம் சாஸ்திரியார் விடுக்கும் அறைகூவல், 'மக்களுக்காக மக்கள் இலக்கியம் படையுங்கள்' என்பதே ஆகும். இந்நூற்றாண்டின் இருபெரும் கவிஞர்களான பாரதியார், பாரதிதாசன் ஆகியோரின் படைப்புக்களிலும் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாடல்களிலும் சாஸ்திரியார் போன்ற பத்தொன்பதாம் நூற்றாண்டின் மக்கள் கவிஞர்களுடைய படைப்புக்களுக்கு இணையான இருபதாம் நூற்றாண்டின் மக்கள் இலக்கியத்தைக் காண முடிகின்றது. இந்த நூற்றாண்டின் கிறிஸ்தவக் கவிஞர்களுள் ஜி.எஸ். வேதநாயகம், எஸ். பரமானந்தம், ஞா. சாமுவேல் ஆகியோரை சாஸ்திரியாரின் வழித்தோன்றல்கள் என்று கூறலாம்.

* * *

# குறிப்பெண் விளக்கம்

## தமிழ் இலக்கிய நெறியில் தஞ்சை வேதநாயக சாஸ்திரியார்

1. ஜி.சே. வேதநாயகம் ஐயர், **அமலகுருசதகம்**, பாடல் 81.

2. மாயூரம் வேதநாயகர், **திருவருள் மாலை**, பாடல் 38.

3. வீ.ப.கா. சுந்தரம், '**அருட்புகழ்**' இருபத்து மூன்றாம் சங்கீதத்தின் திரண்ட கருத்துப்பாட்டு.

4. கவிஞர் சத்தியநாதன், இறைவணக்கப் பாடல், **கிறிஸ்தவக் கீர்த்தனைகள்**, பாட்டு 296.

5. ஞா.வீ. தேவநேசன், **தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார்**, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 1956, பக்கம் 8.

6. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **கிறிஸ்தவக் கீர்த்தனைகள்**, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்க வெளியீடு, 7-ஆம் பதிப்பு 1967, பாடல்கள் 188, 3.

7. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **கிறிஸ்தவக் கீர்த்தனைகள்**, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்க வெளியீடு, 7-ஆம் பதிப்பு 1967, பாடல் 9.

8. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **கிறிஸ்தவக் கீர்த்தனைகள்**, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்க வெளியீடு, 7-ஆம் பதிப்பு 1967, பாடல் 27.

9. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **கிறிஸ்தவக் கீர்த்தனைகள்**, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்க வெளியீடு, 7-ஆம் பதிப்பு 1967, பாடல் 80.

10. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **ஞானத்தச்சைட்டு**, கண்ணி 15.

---

* இப்போது இந்நூல் **கிறிஸ்தவக் கீர்த்தனைகளும் புத்தெழுச்சிப் பாடல்களும்** என்ற விரிவாக்கம் பெற்றுள்ளது.

11. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *ஞானத்தாலாட்டு*, கண்ணி 26.

12. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *ஞானத்தாலாட்டு*, கண்ணி 27.

13. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *பிரலாப ஒப்பாரி*, கண்ணி 21.

14. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *பிரலாப ஒப்பாரி*, கண்ணி 22.

15. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *ஞானத்தச்சன் நாடகம்*, 4:14. (இத்தகு பாடல்கள் பலவற்றின் தொகுப்பாகவே வேதநாயகரின் சாஸ்திரக் கும்மி என்னும் நூல் அமைந்துள்ளது. திருவள்ளுவர் ஞானம், அகத்தியர் ஞானம் முதலிய நூல்களைத் தழுவியதாக அவருடைய சுவிசேட ஞானம் அமைந்துள்ளது.)

16. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *ஞானத்தச்சன் நாடகம்*, 7:4.

17. திரிகூடராசப்பக் கவிராயர், *குற்றாலக்குறவஞ்சி*, கண்ணி, 17.

18. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *பெத்தலேங் குறவஞ்சி*, வெண்ணிலாத்தரு, 3.

19. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *பெத்தலேங் குறவஞ்சி*, பழைய ஆதாம் தரு, 1.

20. திரிகூடராசப்பக் கவிராயர், *குற்றாலக்குறவஞ்சி*, 50.

21. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *பெத்தலேங் குறவஞ்சி*, சிங்கி நடனச்சிந்து, 2.

22. திரிகூடராசப்பக் கவிராயர், *குற்றாலக்குறவஞ்சி*, 54.

23. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *பெத்தலேங் குறவஞ்சி*, மலைவளம், 1.

24. திரிகூடராசப்பக் கவிராயர், *குற்றாலக்குறவஞ்சி*, 120.

25. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **பெத்தலேங் குறவஞ்சி**, சிங்கன் துயரச்சிந்து, 4.

26. திரிகூடராசப்பக் கவிராயர், **குற்றாலக்குறவஞ்சி**, 125, 5, 6.

27. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **பெத்தலேங் குறவஞ்சி**, சிங்கன் சிங்கி சம்பாஷணை, 6.

28. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **ஆரணாதிந்தம்**, அறிமுக விருத்தம்.

29. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **ஆரணாதிந்தம்**, அறிமுக விருத்தம், 19:12, 14.

30. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **ஆரணாதிந்தம்**, அறிமுக விருத்தம், 19:20, 17.

31. பொன்னு. ஆ. சத்தியசாட்சி, **தஞ்சை வேதநாயகர் தமிழ் விருந்து**, கிறிஸ்தவக்கலை-தொடர்பு நிலையம், சென்னை, பக். 57, 58. (இந்நூலில் வேதநாயகரின் **ஞானநொண்டி நாடகம்**, **ஞானத்தச்சன் நாடகம்**, **ஞானக்கும்மி** போன்ற படைப்புக்களை நன்கு அறிமுகம் செய்துள்ளார் ஆசிரியர்.)

32. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **ஜெபமாலை**, 25, 23.

33. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **ஜெபமாலை**, அகப்பற்று, 1.

34. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **ஜெபமாலை**, 12, 5.

35. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **ஜெபமாலை**, 26, 8.

36. Dr. V.A. Devasenapathi, Of Human Bondage and Divine Grace, Annamalai University, pp. 71-72.

37. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **ஜெபமாலை**, பாவசங்கீர்த்தனை, 4.

38. ஞானப்பதக் கீர்த்தனைகளுள் பல பாடல்கள் C.L.S. வெளியீடான **தேவதோத்திரப் பாடல்கள்** என்னும் நூலில் அடங்கியுள்ளன. தமிழ்க் கிறிஸ்தவத் திருச்சபைகள் வழிபாட்டில் பயன்படுத்தப்பெறும் கிறிஸ்தவக் கீர்த்தனைகளில் சாஸ்திரியாரின் 74 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

39. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **தேவதோத்திரப் பாடல்கள்** சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்க வெளியீடு, பாடல் 237.

40. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், ***கிறிஸ்தவக் கீர்த்தனைகள்***, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், ஏழாம் பதிப்பு, 1967, பாடல் 81.

41. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், ***கிறிஸ்தவக் கீர்த்தனைகள்***, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், ஏழாம் பதிப்பு, 1967, பாடல் 9.

42. தா.வி. தேவநேசன், ***தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார்***, சென்னை கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 1956, பக்கம் 92, 93.
(இந்நூல் சாஸ்திரியாரின் வாழ்க்கை வரலாற்றையும் நூலாய்வுகளையும் கொண்டுள்ளது. இதன் முதற்பதிப்பு 1947-இல் வெளிவந்தது. சாஸ்திரியாரின் இருநூறாவது பிறந்த நாள் விழாவின்போது திருமதி த. மனாசே எழுதிய **வேதநாயகர் வேதசாஸ்திரி** என்ற நூலும், பொன்னு. ஆ. சத்திய சாட்சியின் **தஞ்சை வேதநாயகர் தமிழ்விருந்து** என்ற நூலும் கிறிஸ்தவ-கலை-தொடர்பு நிலையத்தாரால் 1975-இல் வெளியிடப் பெற்றன.)

43. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **தேவதோத்திரப் பாடல்கள்**, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்க வெளியீடு, 1957, பாடல் 62.

44. தா.வீ. தேவநேசன், ***தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார்***, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 1956, பக்கம் 90.

45. G.U. Pope, **The Tiruvasagam**, Oxford, 1900, P. xiii.
'There has been atleast one real native Christian poet Vedanayaga Sastriyar of Tanjore whose writings should be Collected and edited.'

46. Cited by S. Balasingam Sathya in his preface to D.W. Devanesan's **Tanjai Vedanayagam Sastriyar**, P. iii.

## தமிழ்ச் சமய நெறியில் தஞ்சை வேதநாயக சாஸ்திரியார்


1. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *கிறிஸ்தவக் கீர்த்தனைகள்* சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 7-ஆம் பதிப்பு, 1967, பாடல் 176.
2. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *கிறிஸ்தவக் கீர்த்தனைகள்* சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 7-ஆம் பதிப்பு, 1967, பாடல் 49.
3. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *கிறிஸ்தவக் கீர்த்தனைகள்* சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 7-ஆம் பதிப்பு, 1967, பாடல் 12.
4. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *செபமாலை*, 3-1.
5. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *செபமாலை*, 3-1.
6. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *செபமாலை*, 3-10.
7. யோவான் அடிகள், *நற்செய்தியாகமம்*, 1:1, 2.
8. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *செபமாலை*, பக்கம், 6.
9. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *பேரின்பக்காதல்*, 10, 84.
10. *திருவாசகம்*, திருத்தெள்ளேணம், 1.
11. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *ஆரணாதிந்தம்*, 11, 5.
12. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *செபமாலை*, 6, 3.
13. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *செபமாலை* 6, 3.
14. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *தேவதோத்திரப்பாடல்*, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 1957, பாடல் 150.
15. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *தேவதோத்திரப் பாடல்*, சென்னை கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 1957, பாடல் 256.
16. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *கிறிஸ்தவக் கீர்த்தனைகள்*, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 7-ஆம் பதிப்பு, 1967, பாடல் 176.

17. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *கிறிஸ்தவக் கீர்த்தனைகள்*, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 7-ஆம் பதிப்பு, 1967, பாடல் 93.

18. தஞ்சை வேதநாயக சாஸ்திரியூர், *கிறிஸ்தவக் கீர்த்தனைகள்*, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 7-ஆம் பதிப்பு, 1967, பாடல் 3.

19. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *கிறிஸ்தவக் கீர்த்தனைகள்*, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 7-ஆம் பதிப்பு, 1967, பாடல் 86.

20. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *செபமாலை*, 4-6.

21. *திருவிவிலியம்*, யோவான் 4:24.

22. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *கிறிஸ்தவக் கீர்த்தனைகள்*, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 7-ஆம் பதிப்பு, 1967, பாடல் 93.

23. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *ஞானவுலா*, 51.

24. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *கிறிஸ்தவக் கீர்த்தனைகள்*, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 7-ஆம் பதிப்பு, 1967, பாடல் 111.

25. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *கிறிஸ்தவக் கீர்த்தனைகள்*, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 7-ஆம் பதிப்பு, 1967, பாடல் 93.

26. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *ஞானவுலா*, கண்ணி, 51.

27. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *செபமாலை*, 13-10.

28. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *கிறிஸ்தவக் கீர்த்தனைகள்*, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 7-ஆம் பதிப்பு, 1967, பாடல் 3.

29. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *ஞானவுலா*, கண்ணி, 79.

30. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *செபமாலை*, 5, 3.

31. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், ***ஆரணாதிந்தம்***, 3, விருத்தம்.

32. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், ***செபமாலை***, 5:4.

33. ***திருவிவிலியம்***, ஆதியாகமம், 3:8.

34. ***திருவிவிலியம்***, சங்கீதநூல், 80:1.

35. ***திருவிவிலியம்***, ஏசாயா, 6:2

36. ***திருவிவிலியம்***, சங்கீதநூல், 18:10.

37. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், ***பெத்தலேங் குறவஞ்சி***, பவனிச் சிந்து, 1.

38. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், ***பேரின்பக்காதல்***, 4, 37.

39. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், ***ஞானவுலா***, கண்ணி, 81.

40. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், ***செபமாலை***, 22-21.

41. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், ***செபமாலை***, பக்கம் 6.

42. ***திருவாசகம்***, திருவெம்பாவை, 9.

43. ***திருவிவிலியம்***, ஆதியாகமம், 1:1.

44. ***திருவிவிலியம்***, திருவெளிப்பாடு, 21:5.

45. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், ***செபமாலை***, 1, 4.

46. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், ***செபமாலை***, பக்கம் 6.

47. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், ***கிறிஸ்தவக் கீர்த்தனைகள்***, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 7-ஆம் பதிப்பு, 1967 பாடல் 21.

48. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், ***கிறிஸ்தவக் கீர்த்தனைகள்***, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 7-ஆம் பதிப்பு, 1967 பாடல் 234.

49. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **ஞானவுலா**, கண்ணி, 172.

50. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **கிறிஸ்தவக் கீர்த்தனைகள்**, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 7-ஆம் பதிப்பு, 1967, பாடல் 350.

51. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **கிறிஸ்தவக் கீர்த்தனைகள்**, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 7-ஆம் பதிப்பு, 1967, பாடல் 27.

52. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **கிறிஸ்தவக் கீர்த்தனைகள்**, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 7-ஆம் பதிப்பு, 1967, பாடல் 186,27.

53. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **கிறிஸ்தவக் கீர்த்தனைகள்**, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 7-ஆம் பதிப்பு, 1967, பாடல் 20.

54. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **கிறிஸ்தவக் கீர்த்தனைகள்**, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 7-ஆம் பதிப்பு, 1967, பாடல் 89.

55. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **கிறிஸ்தவக் கீர்த்தனைகள்**, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 7-ஆம் பதிப்பு, 1967, பாடல் 12.

56. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **கிறிஸ்தவக் கீர்த்தனைகள்**, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 7-ஆம் பதிப்பு, 1967, பாடல் 92.

57. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **செபமாலை**, பக்கம் 6.

58. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **செபமாலை**, 1.1.

59. **திருவாசகம்**, 5.97.

60. **திருவாசகம்**, 4.212.

61. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், ஞானவுலா, 68. எண்குணங்கள்: ஆருகதரால் குறிக்கப்பெறும் வரம்பில் ஞானம், வரம்பில் காட்சி,

வரம்பில் இன்பம், வரம்பிலாற்றல், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, இடையூறின்மை ஆகியவற்றைச் சாஸ்திரியார் அடிக் குறிப்பு ஒன்றில் தருகின்றார். (செபமாலை, பக்கம், 196).

62. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *செபமாலை*, பக்கம் 6. ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம்.

63. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *பெத்தலேங் குறவஞ்சி*, மங். 4, பத்துலட்சணங்கள் : ஆதியந்தமிலாமை, மாறாமை, அனைத்தாற்றல், அனைத்தறிவு, வரம்பில் ஞானம், மீநிறைவு, வாய்மை, தூய்மை, நீதி, நன்மையும் கிருபையும், இப்பட்டியல் 'வேதசாஸ்திரம் ஏடு. 10-இல்' தரப்பெறுவதாகக் கூறுகிறார். *செபமாலை*, பக். 19.

64. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *செபமாலை*, 10-1.

65. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *செபமாலை*, 1-10.

66. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *ஞானவுலா*, 425-474.

67. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *கிறிஸ்தவக் கீர்த்தனைகள்*, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 7-ஆம் பதிப்பு, 1967, பாடல் 81.

68. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *கிறிஸ்தவக் கீர்த்தனைகள்*, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 7-ஆம் பதிப்பு, 1967, பாடல்கள் 21, 86, 176.

69. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *செபமாலை*, 5,10.

70. *திருவிவிலியம்*, ஆதியாகமம், 3:19.

71. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *ஞானத்தச்சன்*, வகுப்பு 1, வீடுகட்டினானே, 20.

72. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *ஞானத்தச்சன்*, வகுப்பு 1, வீடுகட்டினானே, 1.

73. *திருவிவிலியம்*, ஆதியாகமம், 3:16.

74. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், *ஞானத்தச்சன்*, வகுப்பு 1, வீடுகட்டினானே, 10.

75. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **கிறிஸ்தவக் கீர்த்தனைகள்**, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 7-ஆம் பதிப்பு, 1967, பாடல் 46.

76. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **கிறிஸ்தவக் கீர்த்தனைகள்**, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 7-ஆம் பதிப்பு, 1967, பாடல் 57.

77. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **ஞானவுலா**, 68, 69.

78. ***திருவிவிலியம்***, எண்ணாகமம் 14:18; யாத்திராகமம் 20:5.

79. ***திருவிவிலியம்***, ரோமர் 5:12-14.

80. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **கிறிஸ்தவக் கீர்த்தனைகள்**, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 7-ஆம் பதிப்பு, 1967, பாடல் 27.

81. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **தேவதோத்திரப்பாடல்கள்**, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 1957, பாடல் 222.

82. **கம்பராமாயணம்**, கடல்தாவுபடலம், 62.

83. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **செபமாலை**, 2, 3.

84. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **செபமாலை**, 1, 2, 6, வருகைப் பதிகம் 1, 4.

85. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **செபமாலை**, 2, 7.

86. ரா.பி. சேதுப்பிள்ளை, **கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர்**, வெளியீடு, ஆர்.எஸ். சுப்பிரமணியப்பிள்ளை, திருநெல்வேலி, 1946, பக்கங்கள் 67-75.

87. ரா.பி. சேதுப்பிள்ளை, **கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர்**, வெளியீடு, ஆர்.எஸ். சுப்பிரமணியப்பிள்ளை, திருநெல்வேலி, 1946, பக்கம் 71.

88. ரா.பி. சேதுப்பிள்ளை, **கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர்**, வெளியீடு, ஆர்.எஸ். சுப்பிரமணியப்பிள்ளை, திருநெல்வேலி, 1946, பக்கம் 75.

89. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **பேரின்பக்காதல்**, 22, 41.

90. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், **செபமாலை**, 31, 2.

# 2

# கிருஷ்ணபிள்ளை

## மீட்புக் கவிஞரின் பண்பாட்டுப் பற்று

### *ஜான் பன்யனும் கிருஷ்ணபிள்ளையும்*

தஞ்சை வேதநாயகர் சிற்றிலக்கிய வகைகளைப் பெரிதும் தழுவிச் சிறு சிறு நூல்களை எழுதியவர். அவரைத் தொடர்ந்து வந்த கிருஷ்ணபிள்ளை பெருங்காப்பியங்களிலே அதிகமாக ஈடுபட்டுக் காப்பியம் ஒன்றைப் படைக்கும் முயற்சியில் ஈடுபட்டவர். வேதநாயகர் தம் இசைக் குழுவினருடன் தமிழகத்தின் பல்வேறு இடங்களுக்குச் சென்று தம்முடைய பாடல்களால் கிறிஸ்தவர்களையும் பிறரையும் மகிழ்வித்தவர். கிருஷ்ணபிள்ளை நெல்லை மாவட்டத்திலேயே தமிழாசிரியராகத் தம் வாழ்நாளின் பெரும் பகுதியைக் கழித்தவர். கல்லூரி மாணவர்கட்குக் கம்பராமாயணம் போன்ற காப்பியங்களைப் பல ஆண்டுகளாகப் பயிற்றுவித்தவர். மாயூரம் வேதநாயகர், சுந்தரம் பிள்ளை போன்ற தமிழ் அறிஞர்களோடு தொடர்பு கொண்டிருந்தவர். எனவே, அவருடைய படைப்புக்கள் பண்பட்ட இலக்கியத் தெளிவுடையவைகளாக மலர்ந்தன.

'கிறிஸ்தவக் கம்பர்' என்றும் 'வீரமாமுனிவரின் வழித் தோன்றல்' என்றும் பாராட்டப்படும் அளவுக்கு அவர் காப்பியத் தமிழில் மூழ்கித் திளைத்திருந்தார். யாவருக்கும் விளங்கும் வகையில் எளிய நடையில் அவர் எழுதவில்லை என்று சிலர் குறைப்பட்டுக் கொண்டார்கள். அத்தகை யோர்க்கு அவர் பதிலிறுக்கத் தவறவில்லை. அவர் எழுதிய **'இரட்சணிய யாத்திரிகம்'** என்னும் காப்பிய நூல் 1894-ஆம் ஆண்டில் வெளிவந்தபோது, அந்நூலின் முகவுரையில் கவிஞர் இங்ஙனம் எழுதியிருந்தார்:

'.....இங்கிலீஷ் இலக்கியத்தில் தேறுவதற்குச் செல்லுங் காலத்திலும், படும் பிரயாசத்திலும், பத்திலொரு பாகமாவது தமிழ் இலக்கியத்திற்கு உபயோகப்படுத்தி, அதன்பேரில் குறை சொல்வார்களானால், அது ஒருவேளை நியாயமாயிருக் கும். அப்படிக்கின்றித் தமிழில் ஒரு நூலையாவது ஒரு வருஷ மாவது தீரத் தெளியச் செவ்வையாய்ப் படியாமல், எடுத்த செய்யுள் தனக்கு விளங்கவில்லை என்று குறைசொல்வது சரியல்ல....ஆதலால், தமிழ் இலக்கியத்தில் சற்றுப் பிரிய முள்ளவர்களுக்கு 'இரட்சணிய யாத்திரிகம்' என்னும் இந் நூல் வெகு சுலபமாய் விளங்கக் கூடியதேயன்றிக் கஷ்டமா யிருக்கிறதென்று கைவிடக்கூடிய நூல் அன்று....'[1]

காப்பியத் தமிழ் மட்டுமின்றிப் பக்திக் கவிஞர்களின் பாசுரத் தமிழும் கிருஷ்ணபிள்ளையைப் பெரிதும் கவர்ந் திருந்தது. சிறப்பாகத் தேவார, திருவாசக, திருவாய்மொழிப் பாடல்களில் அவர் பெரிதும் ஈடுபட்டவர் ஆவார். அப்பாடல் வகைகளைத் தழுவிப் பல பாசுரங்களை அவர் இயற்றி யுள்ளார். அவற்றுள் பல, இரட்சணிய யாத்திரிகத்தில் இடை யிடையே பொருத்தமான இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. தாயுமானாரின் பாடல்கள் சாஸ்திரியாரைக் கவர்ந்தது போலவே கிருஷ்ணபிள்ளையையும் கவர்ந்துள்ளன. தாயு மானாரைப் பின்பற்றியும் பல பக்திப் பாடல்களைக் கிருஷ்ண

பிள்ளை எழுதியுள்ளார். இங்ஙனம் பக்தி நெறி நின்று பாடியிருப்பதால் கிருஷ்ண பிள்ளை ஒரு 'அருட்கவிஞர்' என்றும் இன்று போற்றப்படுகிறார்.

தம் எழுத்துக்களில் கிறிஸ்துநெறி மீட்புக் கொள்கையைக் கவிஞர் சிறப்பிப்பதால் அவரை 'இரட்சணியக் கவிஞர்', 'மீட்புக் கவிஞர்' எனவும் தமிழ்க் கிறிஸ்தவர்கள் கொண்டாடுகின்றார்கள். கவிஞர் தம் நூல்களின் தலைப்புக்களில் 'இரட்சணிய' என்னும் அடைமொழியைச் சேர்த்துள்ளார். 'இரட்சணிய யாத்திரிகம்', 'இரட்சணிய சமய நிர்ணயம்', 'இரட்சணிய மனோகரம்', 'இரட்சணியக் குறள்' ஆகியவை அவருடைய சிறந்த சமய இலக்கியப் படைப்புகள் ஆகும். இவற்றுள் முதல் மூன்று நூல்களும் அச்சேறியுள்ளன. அவற்றுள் 'இரட்சணிய மனோகரம்' பக்திப் பாடல்களின் தொகுப்பாகும். 'இரட்சணிய சமய நிர்ணயம்' என்பது கிறிஸ்தவக் காப்புரை (Apologetics) நூலாகும். இந்நூலில் நம் நாட்டுச் சமயங்களைப் பரபக்க நிலையில் வைத்து ஆராய்கிறார் கிருஷ்ண பிள்ளை. அவருடைய சமய அறிவு எவ்வளவு பரந்து விரிந்தது என்பதையும் கிறிஸ்தவத்தில் அவர் கொண்ட ஆழ்ந்த பற்றுறுதி எவ்வளவு வலிமையுடையது என்பதையும் இந் நூலினின்று நாம் தெரிந்துகொள்ள முடிகின்றது.

'இரட்சணியம்' என்று கிருஷ்ணபிள்ளை குறிக்கும் 'உலக உய்வுநெறி'யில் அவர்க்கு இருந்த நாட்டத்தை நன்கு விளங்கிக் கொண்டு தமிழறிஞர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர் காப்பிய நூலைப் பற்றி இங்ஙனம் கூறுகிறார்:

'.....இவ்வுலகில் நிறைந்திருந்த தீமையை வில்லின் ஆற்றலால் வென்று ஒழித்தான் இராமன். கற்பின் வன்மையால் மதுரையம்பதியில் செறிந்திருந்த தீமையைச் சுட்டெரித்தாள் கண்ணகி. இரட்சணிய காவியத்தின் தலைவராகிய கிறிஸ்துநாதர் இம் மாநிலத்தில் நிறைந்திருந்த தீமையை மகத்

தான தியாகத்தின் ஆற்றலால் துடைத்தருளினார். ஆகவே, இரட்சணிய யாத்திரிகம் ஆத்ம தியாகத்தின் பெருமையை அறிவுறுத்தும் அருங்காவியமாகும்.'[2]

'இரட்சணியம்' அல்லது 'இரட்சிப்பு' என்று கிருஷ்ண பிள்ளை குறிக்கும் சொல் வாழ்க்கையில் இறையருளால் கிட்டும் மாறுதலைச் சுட்டுகிறது. 1977-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22-ஆம் நாளிலிருந்து மூன்று நாட்கள் கவிஞரின் 150வது பிறந்த நாள் விழா, சென்னையில் கொண்டாடப்பட்ட போது பேராயர் சாலமோன் துரைசாமி அவர்கள் இதனைத் தம் தலைமைப் பேருரையில் இங்ஙனம் குறிப்பிட்டுக் காட்டினார்கள். 'மகா வித்துவான் அவர்கள் இரட்சிப்பு என்பது ஒரு புதிய நிலை. அதாவது மரணத்தினின்று ஜீவனுக்கு வருவது — இருளிலிருந்து பேரொளிக்குள் புகுவது....ஆகிய புதியதோர் நிலை என்றுணர்ந்தார்.'[3]

இவ்வுண்மையைக் கவிஞர் தம் வாழ்க்கையில் கண்டறிந்து ஒரு பாடலில் வடித்தெடுத்துத் தருகின்றார்:

*ஆகாமியத்திலே செத்துக் கிடந்தஎனை*
*ஆவியில் உயிர்ப்பித்தனை*
*அஞ்ஞான இருளூடு கண்கெட் டலைந்த எற்கு*
*அவியாத ஒளி காட்டினை*

*மாகாதகப் பேயின் அடிமையாய்ப் போனஎனை*
*வலியப் பிடித்திழுத்துன்*
*மகிமைக் குயர்த்திக் கிறிஸ்துவுக்குள் எனையும்*
*மைந்தனாப் பாவித்தனை*

*தேகாதி பிரபஞ்சம் நச்சித் திரிந்துனைச்*
*சேவியாப் பாவி யேற்குத்*
*திருவளம் இரங்கிநீ செய்தவிந் நன்றியைச்*
*சிதையாத சிந்தை தருவாய்*

*பாகாயென் னுளமூடு மதுரிக்க நல்லருள்*
*பழுத்தொழுகு ஜீவ தருவே*
*பக்தஜன பரிபால நித்யமவ ரனுகூல*
*பரமார்த்த பரம நிதியே.*[4]

இந்த 'இரட்சிப்பு' என்பது நொடிப்பொழுதில் ஈட்டுவ தொன்று அன்று; அது வாழ்க்கை முழுவதிலும் படிப்படியே உணர்ந்து கொள்ளப்படுவதொன்றாகும் என்பதனைக் கிருஷ்ணபிள்ளை நன்கறிந்திருந்தார். 'நாம் பாவத்தால் நெருக்கப்படும் போதே இறையருளினால் காக்கப்படுகிறோம்' என்ற தெளிவு அவர்க்கு இருந்தது.

இந்தத் தெளிவினை விவிலிய நூலின் மூலமாக மட்டு மல்லாமல் அவர் இளைஞராக இருந்தபோது விரும்பிப் படித்த ஜான் பன்யன் எழுதிய (John Bunyan 1628-1688) Pilgrim's Progress என்னும் நூலின் தமிழ்ப் பதிப்பான 'பரதேசியின் மோட்சப் பிரயாணம்' என்ற நூலின் வழியாகவும் அவர் பெற்றி ருந்தார். இந்நூலை அவர் இருபத்தொன்பது வயது இளைஞ ராக இருந்தபோது முதன்முதலாகப் படித்தார். தொடர்ந்து பல முறை இந்நூலை அவர் ஊன்றிப் படித்திருக்க வேண்டும். ஏறத்தாழ ஐம்பத்துமூன்று வயதினராக இருந்தபோது இந்நூ லைக் காப்பிய வடிவில் எழுத ஆரம்பித்தார். தமிழ் மரபுகளைத் தழுவிக் களச்சூழல்கள் சிலவற்றை மாற்றி, இலக்கிய நயத்தை யும் சேர்த்து, அதனைப் பதினான்கு ஆண்டுக் காலமாக எழுதி வந்தார். நூலின் பகுதிகள் நெல்லை மறை மாவட்ட இதழான நற்போதகத்தில் மாதந்தோறும் வெளியிடப்பட்டன. கவிஞர் இயற்கை எய்துவதற்கு ஆறு ஆண்டுகட்குமுன்—1894-ஆம் ஆண்டில்—முழு நூலும் அருள்திரு. உவாக்கர் என்பாரின் அரிய முயற்சியால் சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தா ரால் வெளியிடப்பட்டது.

இறவாப் புகழ் பெற்ற ஆன்மீக இலக்கியங்களுள் ஒன்றான Pilgrim's Progress என்னும் நூல் இன்று நூற்றிருபதுக்கும் மேற்பட்ட மொழிகளில் பெயர்க்கப்பட்டிருந்தாலும் பாவடிவில் அதனை ஆங்கிலக் கவிஞர்கள் சிலரும் நம் கவிஞரும் மட்டுமே வழங்கியுள்ளனர். 1687-இலிருந்து 1926 வரை 23 ஆங்கிலக் கவிஞர்கள் இந்நூலைச் சிறு சிறு கவிதைகள் அல்லது பாடல்கள் வடிவில்தர முயன்றுள்ளார்கள்.[5] ஏறத்தாழ நான்காயிரம் பாடல்களைக் கொண்ட பெருங்காப்பியமாக இந்நூலை வழங்கியுள்ள ஒரே கவிஞர் கிருஷ்ணபிள்ளை ஆவார்.

இரட்சணிய யாத்திரிகத்தின் இரண்டாம் பதிப்பிற்கு முன்னுரை வழங்கியுள்ள அருள்திரு. எச்.ஏ. பாப்லி (H.A. Popley) என்பார், 'இந்நூல் ஆங்கிலத்தில் ஜான் பன்யன் எழுதிய நூலைத் தழுவி இயற்றப்பட்டிருப்பினும், இதில் ஆசிரியரின் கிறிஸ்தவ வாழ்க்கை வரலாறே முழுவதும் அமைந்துள்ளது எனலாம்' என்று குறிப்பிட்டுள்ளார். கிருஷ்ணபிள்ளை தம் வாழ்க்கை வரலாற்றைத் தாம் காலமாவதற்கு ஏழாண்டுகட்கு முன்பு 1893-ஆம் ஆண்டில் அருள்திரு. உவாக்கரின் வேண்டுகோளுக்கிணங்க எழுதியுள்ளார்.[6] இந்நூலைப் படிக்கும் போது எந்த அளவுக்குக் கிருஷ்ணபிள்ளை 'மோட்சப் பிரயாண' நூலின் கதைத் தலைவனாம் கிறிஸ்தியானைப் போலப் பெரும் போராட்டத்தினூடே தம் ஆன்மீகப் பயணத்தை நடத்தியுள்ளார் என்பதைத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

ஜான் பன்யன் தம் நூலின் முன்னுரையில் 'This book will make a traveller of thee' என்று கூறுகின்றார்.[7] இது நூற்றுக்கு நூறு உண்மை என்கிறது கிருஷ்ணபிள்ளையின் தன் வரலாறு. மோட்சப் பயணியான கிறிஸ்தியான் என்னும் பாத்திரத்தோடு கவிஞர் ஒன்றிவிடுகின்றார். தம் மனப்

போராட்டங்களை அவன் மூலம் தெரிவிப்பதாகவும் கவிஞர் அந்நூலில் கூறுகின்றார்.[8] ஜான் பன்யனும் தம் வாழ்க்கை வரலாற்றை ஒரு சிறு நூலாக எழுதியுள்ளார்.[9] இதுவே அவர் சிறைச்சாலையிலிருந்து எழுதிய முதல் நூல். தமக்கு ஏற்பட்ட சோதனைகளையும் பாவவுணர்ச்சிகளையும் விவிலிய ஒலியையும் இந்நூலில் எவ்வித ஒளிவு மறைவுமின்றி அவர் கூறிச் செல்கிறார். அவர் கனவில் மலர்ந்த இலக்கியமாகிய Pilgrim's Progress என்னும் நூலுக்கான நனவுத் தூண்டல்களை இந்நூலில் காணமுடிகின்றது. தன்னை மிகவும் தாழ்த்திப் பணிவோடு இந் நூலை எழுதுகின்றார். பாவியரிற் கொடிய பாவியாகிய தன்னிடம் இறையருள் பெருகியதை எண்ணி எண்ணி வியப்படைகின்றார்.

கிருஷ்ணபிள்ளையும் தம் காப்பியத்தின் அவையடக்கப் பாடலை மிகவும் பணிவுடன் அமைத்துள்ளார். மற்றும் பல பாடல்களிலும் கிறிஸ்தியானின் மூலமாகத் தம்முடைய பாவ அறிக்கைகளைப் பலபடச் செய்கின்றார். காப்பியத்தின் அவை யடக்கப் பாடலில்,

*'என்னனைய பாவியரிந் நிலவுலகில்*
*யாண்டுமில ரெனினும் நாயேன்*
*தன்னையொரு பொருளாகத் தடுத்தாண்ட*
*கிறிஸ்துயேசு சாமி செய்ய*
*பொன்னனைய திருவடிக்குச் செந்தமிழ்மா*
*லிகையொன்று புனைவா னெண்ணித்*
*துன்னுநவ ரட்சணிய யாத்திரிக*
*மலரெடுத்துத் தொடுக்க லுற்றேன்.'*[10]

என்று பணிவுடன் பேசுகிறார் கவிஞர். ஜான் பன்யன் தம் நூலின் முன்னுரையில், 'My dark and cloudy words they do

but hold the truth, as cabinets enclose the gold'[11] என்று கூறும் பணிவுடைச் சொற்கள் கவிஞரின் அவையடக்கப் பாடலோடு ஒத்துநோக்கத் தகுந்தவை ஆகும்.

சில இடங்களில் மூல நூலில் காணப்படாத அளவுக்குப் பணிவுடைய பாவ அறிக்கைகளைச் சேர்த்து வழங்குகிறார் கவிஞர். எடுத்துக்காட்டுக்கு ஒரு பகுதியைக் காண்போம்.

ஆன்மீக நெடும் பயணத்தில் ஈடுபடும் கிறிஸ்தியான் ஒரு கட்டத்தில் தவறான பாதையில் சென்று தவிக்கும்போது நற்செய்தித் தொண்டன் (Evangelist) அவனைச் சரியான வழியில் ஆற்றுப்படுத்துகின்றான். 'வானுறுங்கடைவாயில்' என்று குறிக்கப்படும் இடுக்கமான வாயிலுக்குச் சென்று கதவைத் தட்டுமாறு அவனிடம் கூறுகின்றான். அங்ஙனமே கிறிஸ்தியான் அவ்வாயிலுக்குச் சென்று கதவைத் தட்டுகின்றான், இதனை ஜான் பன்யன் மிகச் சுருக்கமாகச் சில வரிகளில் கூறிவிடுகின்றார்:

> 'So, in process of time *Christian* got up to the gate. Now, over the gate there was written, 'Knock; and it shall be opened to you.' (Matt vii: 7) He knocked therefore, more than once or twice saying—
>
> 'May I now enter here? Will he within
> Open to sorry me, though I have been
> An undeserving rebel? Then shall I
> Not fail to sing his lasting praise on high.'

கிருஷ்ணபிள்ளை இப்பகுதியை விளக்கக் 'கடைத் திறப்புப் படலம்' என்று ஒரு படலத்தையே அமைத்துவிடுகின்றார். கிறிஸ்தியான் வாயிற்கதவைத் தட்டி நிற்கும் காட்சியை அழகுறக் காட்டிப் பின் பத்துப்பாடல்களால் கபாடம் திறக்கும் படியாக அவன் விடுக்கும் வேண்டல்களையும், பாவ

அறிக்கை முறையீடுகளையும் நெஞ்சை உருக்கும் வகையில் வெளிப்படுத்துகிறார். 'கலிங்கத்துப்பரணி' இயற்றிய செயங் கொண்டார், போர்க்களத்திலிருந்து காலந்தாழ்த்தி இல்லம் திரும்பும் வீரர்கள் தங்கள் மனைவியரைக் கபாடம் திறந்திடும் படி, பலபட அவர்களைப் புகழ்ந்து வேண்டி நிற்பதாக அமைந் திருக்கும் பாடல்களின் அமைப்பைத் தழுவி இப்பாடல் களைக் கிருஷ்ணபிள்ளை வழங்குகின்றார். எடுத்துக் காட்டுக்கு இரண்டு பாடல்களைக் காணலாம்:[12]

*'கல்லேன் சுருதி நலம்புரியக்*
*கருதேன் பாவங் கசந்திடேன்*
*பொல்லேன் எனினும் வந்தடைந்தேன்*
*போகேன்! கபாடம் திறமினோ!'*

*'கொடிய ரிற்கொடிய புலையரிற்புலைய*
*னாயினுங் குமர நாயகன்*
*அடியருக் கடிய னாகவந்திவண்*
*அடைந்த னன்கதவு திறமினோ!'*[13]

இப்பாடலைப் படிக்கும்போது, 'இறைவா, உம் வாயிற் கதவைத் தட்டுவதற்கு மட்டுமே எனக்குப் பலம் இருக்கிறது' (I have no strength but to knock at thy door) என்று உருகிப் பாடும் இஸ்லாமிய சூஃபிக் கவிஞரை நினைந்திடாமல் இருக்க முடியாது.

மேலும், இவ்விரு அடிகளை இங்குச் சிறப்பாக எடுத்து வழங்குவதற்குக் காரணம் கிருஷ்ணபிள்ளை தம்முடைய 'தன் வரலாற்'று நூலின் முகவுரையில், '....நான் ஜென்மத்தி லும் பாவி; செய்கையிலும் மகா கொடிய பாவி'[14] என்று கூறி மூன்று பாடல்களை யாத்திரிகத்திலிருந்து எடுத்து வழங்கு கின்றார். அவற்றுள் அடங்கிய இரு பாடல்களே மேற்குறிப் பிட்டவை ஆகும்.

மூலக் கதைக்கு அழகான விரிவாக்கமும் காவிய நயமும் தரும் வகையில் கவிஞர் எழுதியுள்ள இரட்சணிய யாத்திரிகம் பற்றி 1894-ஆம் ஆண்டில் Madras Mail நாளிதழ் வெளியிட்ட கருத்து இங்குக் குறிப்பிடத்தகுந்ததாகும். 'புளூடார்ச்சின் வாழ்க்கை வரலாற்றுக்கொத்து என்ற நூற்செய்திகள் ஷேக்ஸ் பியரின் நாடகங்கட்கு எங்ஙனம் அடியெடுத்துத் தருகின்ற னவோ அங்ஙனமே 'பில்கிரிம்ஸ் புராக்ரஸ்' இரட்சணிய யாத்திரிகத்திற்கு அடியெடுத்துத் தருகின்றது' (Ratchanya Yathrigam is to Pilgrim's Progress what the plays of Shakespeare are to the Lives of Plutarch) என்று அந்த இதழ் எழுதியது.[15]

மூல நூலின் ஆசிரியரான ஜான் பன்யனைக் கிருஷ்ண பிள்ளை தம் காப்பியத்தின் ஆரம்பத்தில் அறிமுகப்படுத்து கிறார். முதல் நூல் எழுந்த சூழலைக் கூறி, பன்யனை அவர் அறிமுகப்படுத்தும் முறை சேக்கிழார் நாயன்மார்களை அறி முகப்படுத்தும் நெறியை ஒத்துள்ளது. வரலாற்றுப் படலத்தில் வரும் இரு பாடல்களைக் கீழே தருகின்றேன்:

*'ஆய வித்தகு சித்தையாத் திரைபெரி தாற்றி*
*நாயெகன் கிறிஸ் தியேசுவுக் கன்புசெய் நண்பன்*
*தூய ஜீவிய நடைகடைப் பிடித்தவேள் கதிர்தன்*
*மாயி ரும்புவி மயக்கனு மாண்புடை ஞானி'*

*'எம்பிரான் திருச் சித்தமே எனதுபாக் கியமென்*
*றும்பர் நாயகன் பணிபுரிந் தொழுகுமிவ் வரவோன்*
*இம்ப ரோர்சிறை யிருந்துழி யோக நித்திரையில்*
*தம்பி ரானருள் சமைத்தது தரிசன மொன்றை.'*[16]

ஆங்கிலக் கவிஞர் பைரன் (Byron) கனவின் ஆற்றலைப் பற்றிக் கூறும்போது, 'I had a dream which was not at all a dream' என்று கூறுவார். பன்யனின் கனவைப் பற்றிப் பேசும்போது, 'The similitude of dream is the clear vision of one who had probed life to its depths' என்று J.W. மாக்கேய்ல் (J.W. Mackail) என்பார் குறிப்பிடுகிறார். இக்கருத்துக்களைத் தொகுத்தடக்கும் வகையில் நம் நாட்டுச் சமயக் கருத்தாகிய அறிதுயில் அல்லது யோக நித்திரையைக் கொண்டு பன்யனின் கனவைத் தெறிப்பாக விளக்குகிறார் கிருஷ்ணபிள்ளை. கவிஞர் படைத்துள்ள காப்பியத்தில் ஐந்து பருவங்கள் உள்ளன. அவற்றுள் 47 படலங்கள் அடங்குகின்றன. இப்படலங்களில் 3622 பாடல்கள் உள்ளன. இடையிடையே 144 தேவாரப் பாசுரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. ஆக, சற்றேறக்குறைய 3800 பாடல்களைக் கொண்டுள்ளது *இரட்சணிய யாத்திரிகம்*.

இக்காப்பியத்திற்குக் கவிஞர் எழுதியுள்ள முன்னுரையில் இதனை ஒரு பெருங்காப்பியம் என்று குறிப்பிடுகின்றார். பெருங்காப்பியத்திற்குரிய சில உட்கூறுகள் இந்நூலில் இடம் பெறவில்லை என்றாலும், 'தன்னேரில்லாத் தலைவனை யுடைத்தாய், நாற்பொருட் பயக்கும் நடைநெறித்தாகி' என்ற இலக்கணம் தழுவியே நூல் இயற்றப்பட்டுள்ளது என்றும், 'கூறிய உறுப்பில் சில குறைந்தியலினும் வேறுபாடின்றெ விளம்பினர் புலவர்' என்ற விதியின்படி இது பெருங்காப்பியமாகவே கொள்ளத்தகுந்தது என்றும் கவிஞர் கூறுகின்றார். தம் நூலின் நடை பெரும்பாலும் 'கம்பராமாயணச் செய்யுள் நடையையும் அதன் போக்கையும் அனுசரித்தே இயன்ற மாத்திரம் அமைக்கப்பட்டது' என்றும் அவர் கூறுகிறார்.[17]

# தமிழ் இலக்கிய நெறியில் கிருஷ்ணபிள்ளை

காப்பியக் கவிஞர்களான கம்பரையும் சேக்கிழாரையும் பேரளவுக்குப் பின்பற்றி இலக்கிய நயம் ததும்பத் தம் காப்பியத் தைப் படைத்துள்ளார் கிருஷ்ணபிள்ளை. அக் கவிஞர்களின் கண்கொண்டு இயற்கைக் காட்சிகளை அவர் காணும் போக்கினைப் பல பாடல்களில் காணமுடிகின்றது.

சரயு நதியைக் கம்பரும் பொன்னியைச் சேக்கிழாரும் வரு ணித்து வழங்கும் பாடல்களில் தெய்வீக மணம் கமழும்படி செய்கிறார்கள். சரயு நதியின் சிறப்பைக் கூறவரும்போது கம்பர்:

*'கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்*
*எல்லையில் மறைகளாலும் இயம்பரும் பொருளீ தென்னத்*
*தொல்லையி லொன்றே யாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்*
*பல்பெருஞ் சமயஞ் சொல்லும் பொருளும் போற்பரந்ததன்றே.'*[1]

என்று பாடுகிறார்.

காவிரியாற்றை வருணிக்கும் சேக்கிழார் அதனை உமை யோடு ஒப்பிடுகிறார்:

*'வண்ணநீள் வரைதர வந்த மேன்மையால்*
*எண்ணில்பே ரறங்களும் வளர்க்கும் ஈகையால்*
*அண்ணல்பா கத்தையா ளுடைய நாயகி*
*உண்ணெகிழ் கருணையி னொழுக்கம் போன்றது'*[2]

என்பது அவர் பாடல்.

தெள்ளிய நீர் பெருக்கெடுத்தோடும் ஆற்றை இறை வனோடும் அவன் அருட்சக்தியோடும் ஒப்பிடும் இக்கவிஞர் களைத் தழுவிக் கிருஷ்ணபிள்ளையும் விண்ணகத்துப் பரம ஆற்றை இங்ஙனம் வருணிக்கின்றார்:

*'ஒருநெறித் தாகித் தூய்தாய் உள்ளூறத் தெளிந்து பாவத்*
*தருவனம் முறித்துச் சாடித் தருமச்செஞ் சாலி நீடப்*
*பெருவளம் படுத்து நித்ய பேரின்ப சலதி கூடும்*
*திருவுடைத் தாத லாலித் தீர்த்திகை சுருதி போலும்*[3]

தெய்வீக உவமைகளை ஆற்றுக்கு ஏற்றிச் சொல்லும் வரிசையில் பரம்பொருள், அருள் ஆகிய இரண்டினுக்கும் அடுத்த தாகத் திருமறையை இவர் சேர்ப்பது போற்றுதற்குரியதாகும்.

சரயு நதியின் வெள்ளம் பலவிடத்தும் பாய்ந்து செல்வதை நயம்பட ஒரு பாடலில் தெரிவிக்கின்றார் கம்பர்:

*'தாதுகு சோலை தோறும் சண்பகக் காடு தோறும்*
*போதவிழ் பொய்கை தோறும் புதுமணல் தடங்கள் தோறும்,*
*மாதவி வேலிப் பூக வனந்தொறும் வயல்கள் தோறும்*
*ஓதிய உடம்பு தோறும் உயிரென உலாய தன்றே'*[4]

கம்பரின் கருத்துப்போக்கைச் சார்ந்து பக்திச் சுவையையும் சேர்த்து கிருஷ்ணபிள்ளை பேரின்ப நதி பாய்ந்தடையும் இடத்தை இங்ஙனம் ஒரு பாடலில் படம் பிடித்துக் காட்டுகிறார்:

*'நிறைவளம் படுக்குந் தூய நித்திய ஜீவ கங்கை*
*துறைதொறும் பிரிந்து போந்து தொடுகுள மடுத் தடாகம்*
*குறைவற நிரப்பி யுண்மை குலவுநீண் மருத வைப்பின்*
*கறைதுடைத் திதய மென்னும் கழனிபுக் களைந்த தன்றே.'*[5]

கம்பரின் கருத்தோட்டத்தையும் கற்பனைப் போக்கையும் பின்பற்றுவதோடு நில்லாமல் அவருடைய சொற்களையும் தொடர்களையும் கூடக் கடன் வாங்கிச் சில பாடல்களில் வழங்கி மகிழ்கிறார் கிருஷ்ணபிள்ளை. எடுத்துக்காட்டுக்கு ஒரு பாடலைக் காண்போம்:

ஆதாமும் ஏவாளும் உயர் உரிமைப் பேற்றோடு ஏதேன் தோட்டத்தில் வாழ்ந்திட்ட வாழ்க்கையை எடுத்துரைக்க வரும் கிருஷ்ணபிள்ளை:

*'பூதலப் பொருள்க ளெல்லாம்*
*பொதுவன்றிச் சொந்த மில்லை*
*ஆதலிற் கொள்வா ரில்லர்*
*கொடுப்பவ ராரு மில்லர்.'*[6]

என்கிறார்.

இப்பாடலின் இறுதி வரிகள் கம்பரின்:

*'கள்வா ரிலாமைப் பொருட் காவலு மில்லை யாதும்*
*கொள்வா ரிலாமைக் கொடுப்பார்களு மில்லை மாதோ'*[7]

என்ற வரிகளை அப்படியே பிரதிபலிப்பதை எவரும் காணத் தவற முடியாது.

இயற்கைக் காட்சிகள் கிருஷ்ணபிள்ளைக்குப் பக்திச் சூழலையும் வழிபாட்டு நெறியையும் நினைவுபடுத்துகின்றவைகளாய் அமைகின்றன.

கிறிஸ்தியான் தன் நெடும்பயணத்தில் தடங்கற்கள் பலவற்றைத் தாண்டித் தெளிந்த நீர் நிறைந்த தடாகத்தைக் கொண்ட சோலை ஒன்றை அடைகின்றான். அச்சோலையில் மரங்கள் கிளைகளைப் பரப்பியவண்ணம் நெடிதோங்கி நிற்கின்றன. காற்றில் அக்கிளைகள் அசைந்தாடும் அழகில் கவிஞர் ஈடுபடுகின்றார். அங்கே பக்திப் பணிவு வெளிப்படும் வழிபாட்டுச் சூழல் இருப்பதை அவர் காண்கிறார். பாடல் வழியே அதனை நாமும் காணும்படி செய்கிறார்:

*'மண்ட லத்துற முடங்குதா ளூன்றிவாய் மலர்ந்து*
*விண்டு தூமலர்க் கண்துளி வடித்துமெய் யரும்பித்*
*தண்ட ளிர்க்கரம் விரித்துயர் சினைத்தலை தாழ்த்திக்*
*கொண்ட செவ்வியிற் பரவுதொண் டரைப் பொரூஉங்*
*கொழுங்கா'*[8]

காரிருள் படலம் கவிந்து வந்திட்டதொரு சூழலை வருணிக்க வரும்போதும் கவிஞர் அடுக்கடுக்காகச் சமயக் கருத்துக்களை உவமைக்கு அழைக்கின்றார். அப்பாடலைக் காண்போம்:

*'பாபத்தின் திரளோ அந்த காரத்தின் பரப்போ தேவ*
*சாபத்தின் செறிவோ மாய சாலத்தின் சமைவோ நித்ய*
*கோபத்தின் மலிவோ ஞான நாசத்தின் குவிவோ மோச*
*ஆபத்தின் குகையோ வந்தக் காரிருட் படல மம்மா'*[9]

கம்பன் வழிநின்று காப்பியம் படைத்துள்ள இக்கவிஞர், இராமன் தனக்குப் பட்டாபிஷேகம் இல்லை என்பதனை அறிந்து கொண்டு அயோத்தியை நீங்கும் காட்சியைக் கம்பர் தரும் முறையைத் தழுவி இயேசு சிலுவையைச் சுமந்து கொண்டு எருசலேம் நகரினின்றும் வெளியேறிக் கல்வாரி மலையை அடையும் காட்சியை நெஞ்சை உருக்கும் முறையில் கூறிச் செல்கிறார். இயேசு சிலுவை சுமந்து செல்லும் கொடுமையைக் கண்ட எருசலேம் நகர மாதர் அலறித் துடிக்கின்றார்கள்; கண்ணீர் வடித்துக் கதறுகின்றார்கள். கோபக் கனல் பறக்க வார்த்தைகளை அள்ளி வீசுகிறார்கள். இதனைக் கிருஷ்ணபிள்ளை,

*'ஆவாவி தென்னவ றவுமறி யாயமென்பார்*
*தாவாவ றமோத லைசாய்ந்தி றுவதென்பார்*
*மூவாமு தல்வன்மு னியாத தென்னென்பார்*
*ஓவாது ழலெம்மு யிர்க்கொழிவின் றோவென்பார்'*[10]

என்று கூறிக் காட்டுகிறார். அம்மாதர் புலம்பலை எடுத்து வழங்கும் பாடல்கள் கம்பரின் நகர் நீங்கு படலப் பாடல்கள் சிலவற்றோடு (அயோத்தியா காண்டம், நகர் நீங்கு படலம், 105-114) ஒப்பிடக் கூடியவை ஆகும்.

இயேசுவின் உடலெடுப்பையும் உலக வருகையையும் தமக்கே உரித்தான முறையில் அணி அலங்காரங்களால் விளக்குகிறார் கவிஞர்.

இந்நிலவுலகிற்குப் பூமுகம் என்னும் பெயர் உள்ளதற்குப் புதுக் காரணம் ஒன்றை அவர் கூறுகிறார்:

*'கோமகன் சேவடிப் பதுமங் கோத்தலிற்*
*பூமுக மெனப் பெயர் பொலிந்த தாமரோ'*[11]

என்பது அவர் தரும் காரணம்.

அங்ஙனமே இயேசு விண்ணகம் விடுத்து இந்நிலவுலகில் வந்து பிறந்த விந்தையை நினைத்திடும்போது இரண்டு அழகிய உவமைகளைச் சேர்த்தடக்கிய பாடலொன்றின்மூலம் அதை வெளிப்படுத்திக் காட்டுகிறார். இதோ அந்தப் பாடல்:

*'ஆழ்ந்த ஜீவநீர் நதிப்பெருக் கதோமுக மாகித்*
*தாழ்ந்த பூதலப் படுகரிற் பாய்ந்ததுந் தழைத்துக்*
*காழ்ந்த நித்திய ஜீவகற் பகச்சினை ககனம்*
*போழ்ந்து பாருறப் பணிந்ததும் எத்தனை புதுமை'*[12]

இயேசுவின் உடலை வருத்திய சிலுவையின் பாரம் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்குக் கொடுமை வாய்ந்தது என்று கூற வரும் கவிஞர்:

*'நோக்கில் அணுவொவ் வொன்றும் நூறாயிரங் கோடி*
*மாக்கயத்தின் சும்மை மலிந்த பாவம் திரட்டி*
*ஆக்குசிலுவை.....'*[13]

என்கிறார்.

இயேசு பாவத்தின் பெருஞ்சுமையையே சிலுவை வடிவில் சுமந்தார் என்ற கருத்தை இப்படிக் கவிஞர் வெளிப்படுத்திக் காட்டுகிறார்.

கம்பரைப்போன்றே கிருஷ்ணபிள்ளையும் சிறு சிறு பாடல்களின் மூலம் பல்வகை உணர்ச்சிகளை ஊட்டும் ஆற்றலைப் பெற்றவர் ஆவார். அவருடைய நான்கடி விருத்தப்பா ஒன்றில் அடுக்கடுக்காக மூன்று உணர்ச்சிகளை அவர் வெளிப்படுத்துகின்றார்.

இயேசுவைச் சிலுவையில் அறைவதற்கு முன்பு விசாரணைகள் நடத்தியவர்கள் அவரைப் பெரிதும் அவமதிக்கும் வகையில் கொடுமைப்படுத்துகிறார்கள். அவரை வாரால் அடிக்கிறார்கள். அவர்மீது உமிழ்கிறார்கள், ஆகடியம் பேசுகிறார்கள். அவரோ வாளாது அமைதி வடிவெடுத்தவராக நிற்கிறார். இந்தக் காட்சியைக் கண்முன் நிறுத்த விரும்பும் கவிஞர்,

*'ஓதரும் வேதனை யுழந்தும் ஒன்னலார்*
*நோதக ஒருமொழி நுவலு வாரலர்*
*ஏதில ரோபொறைக் கிரங்கு வாருமில்*
*பாதகம் பாதகம் பரம பாதகம்!'*[4]

என்று ஒரு பாடலை அமைக்கிறார்.

இப் பாடலின் முதல் இரண்டு வரிகளில் கழிவிரக்க உணர்ச்சியையும், மூன்றாவது அடியில் வெறுப்புணர்ச்சியையும் இறுதி அடியில் கோப உணர்ச்சியையும், கவிஞர் வெளிப்படுத்திக் காட்டும் சிறப்பு படித்துப் படித்து இன்புறத்தக்கதாகும்.

பன்யன் என்பார் தம்முடைய நூலில் Pope, Pagan என இரு அரக்கர்கள் பள்ளத்தாக்கு ஒன்றில் குடியிருந்து ஆன்மீகப்

பயணிகள் பலரைக் கொன்று தீர்த்ததாகக் கூறுகிறார்.[15] இதனைத் தமிழில் கூற வரும்போது கவிஞர் கிருஷ்ண் பிள்ளை பன்யனைப்போன்று பிற மதத்தவரையும் போப்பாண் டவரையும் துணிகரமாகத் தாக்க விரும்பவில்லை. பன்யன் தந்திருந்த பெயர்களை அவர் குறிப்பிட விரும்பவில்லை. பன் யனின் பாத்திரங்கள் பலருக்கு இணையான தமிழ்ப் பெயர் களைத் தம் காப்பியத்தில் தந்திருக்கும் கிருஷ்ணபிள்ளை இந்த இருவருக்குப் பெயர்களைத் தராமலேயே—மூல நூலில் அவர்கள் யாரைக் குறிப்பிடுகிறார்கள் என்பதைச் சிறிதும் காட் டாமலேயே—அவர்களை அறிமுகப்படுத்தியிருப்பது அவரு டைய பண்பட்ட தமிழ் நெஞ்சைக் காட்டுகிறது. அவர்களில் ஒருவனை 'பகற்குருடாய தீயன்' என்றும், மற்றொரு வனைக் 'கோவியல் அழித்த மற்றோர் கொடியவன்' என்றும் கிருஷ்ணபிள்ளை பொதுப்பட அறிமுகப்படுத்துகிறார்.[16]

தமிழிலுள்ள பக்தி இலக்கியங்களில் கவிஞர் பெரிதும் ஈடுபட்டவர் ஆதலின் அவருடைய பக்திப் பாடல்களில் தேவா ரம், திருவாய்மொழி, தாயுமானாரின் பாடல்கள் ஆகியவற்றின் சாயலை நன்கு காணமுடிகின்றது. இன்று தமிழ்க் கிறிஸ்த வர்கள் கவிஞரின் பாசுரங்களை வழிபாட்டில் பயன் படுத்துகிறார்கள். இரட்சணிய யாத்திரிகம் பற்றிக் கேள்விப் படாத கிறிஸ்தவர்களும், அதனைப் படிக்காத கிறிஸ்தவர் களும் இருக்கலாம். ஆயின், கிருஷ்ணபிள்ளையின் பாடல் களைப் பாடிடாத அல்லது பாடக் கேட்டிராத கிறிஸ்தவர்கள் இல்லை என்று துணிந்து கூறலாம்.

இரட்சணிய யாத்திரிகத்தை எழுதுவதற்கு முன்பே கவி ஞர் தேவார, திருவாய்மொழிப் பண்களில் பல பாடல்களை இயற்றியிருந்தார். அவர் முதன்முதலில் எழுதிய பாடல்கள் அவருடைய இல்லத்தில் அவர் மக்கள் பாடி இறைவேண்டல்

செய்வதற்காக எழுதப்பட்டவை ஆகும். அப்பாடல்களில் பணிவும் பாவ அறிக்கைப் பாங்கும் அழகுற வெளிப்படச் செய்துள்ளார் கவிஞர். ஒரு பாடலின் அடிகள் சிலவற்றைக் கீழே தருகிறேன்:

*பத்தியாய்ச் செபம் பண்ணவே*
*சுத்தமாய்த் தெரியாதய்யா*
*புத்தியோடுமைப் போற்றநற்*
*சித்தமீந்திடும் இயேசுவே*

*பஞ்சைநானொரு பாவியேன்*
*தஞ்சம் உன்னிரு தாளய்யா*
*அஞ்சலென்றருள் வாய்பரன்*
*மஞ்சனேமனு வேலனே*

*வேதம் வாழ்க மெய்வேதியர்*
*போதம் வாழ்கவிப் புன்சொலார்*
*கீதம் வாழ்க கிறிஸ்துவின்*
*பாதம் வாழ்க பல்லூழியே!*[17]

சிறுவர் மட்டுமல்லாமல் யாவரும் பாடும் வகையில் இப்பாடலின் நாற்பத்தைந்து அடிகளையும் அமைத்துள்ளார் கிருஷ்ணபிள்ளை. மேற்காட்டியுள்ள 'வேதம் வாழ்க' என்ற அடி இப்பாடலின் இறுதி அடியாகும். இதனை ஞானசம்பந்தரின், 'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்' என்ற அடியைத் தழுவி இயற்றியுள்ளார் கவிஞர்.

நாவுக்கரசரும் தொண்டரடிப் பொடியாழ்வாரும் இயற்றியுள்ள நூற்றுக்கணக்கான பாடல்களுள் இருவரும் ஒரே பண்ணில் ஒரே இறுதித் தொடரை வைத்து எழுதியுள்ள பாடல்கள் கிருஷ்ணபிள்ளையைப் பெரிதும் கவர்ந்துள்ளன. 'என் செய்

வான் தோன்றினேனே' என்று அச்சீரடியார்கள் சிரந்தாழ்த்திப் பணிவோடு பாடுகின்றதைப் போன்றே கிருஷ்ணபிள்ளையும் பாட விரும்பி அவர்கள் ஆளும் 'என் செய்வான் தோன்றி னேனே!' என்ற சொற்றொடரைப் பதின்மூன்று பாடல்களில் வைத்துப் பாடுகின்றார்:

*'வென்றிலேன் புலன்களைந்தும்*
*வென்றவர் வளாகந் தன்னுள்*
*சென்றிலே னாத லாலே*
*செந்நெறி யதற்குஞ் சேயேன்*
*நின்றுளே துளும்பு கின்றேன்*
*நீசனேன் ஈச னேயோ*
*இன்றுளேன் நாளை இல்லேன்*
*என்செய்வான் தோன்றி னேனே'* [18]

என்று நாவுக்கரசர் பாடுகிறார்.

*'போதெல்லாம் போதுகொண்டுன்*
*பொன்னடி புனைய மாட்டேன்*
*தீதிலா மொழிகள் கொண்டுன்*
*திருக்குணம் செப்ப மாட்டேன்*
*காதலால் நெஞ்சமன்பு*
*கலந்திலேன் அது தன்னாலே*
*ஏதிலேன் அரங்கர்க் கல்லேன்*
*என்செய்வான் தோன்றி னேனே'* [19]

என்பது தொண்டரடிப்பொடி ஆழ்வாரின் பாடல்.

இவ்விருவரையும் அடியொற்றி நின்று இரட்சணியக் கவிஞராம் கிருஷ்ணபிள்ளை பாடும் பாடல்:

*'நின்னடிக் கன்பு செய்யா நீசனேன் ஈசனே உன்*
*பொன்னடிக் கன்பு செய்யும் புண்ணியர் குழாத்துப் புக்கு*
*நன்னடை கற்றுமில்லேன் நன்றெலா மொருவி நின்ற*
*என்னடை இகந்து மில்லேன் என்செய்வான் தோன்றி*
*னேனே'*[20]

என்று அமைந்துள்ளது.

இப்பாடலில் 'நீசனேன்' 'ஈசனே', என்ற சொற்களை அப்பர் பாடலினின்றும் 'பொன்னடி' என்ற சொல்லை ஆழ்வார் பாடலினின்றும் எடுத்துத் தம் பாடலில் கவிஞர் ஆள்வதைக் காணும் போது எந்த அளவுக்கு அவர் அவர்கள் பாடலில் ஈடுபட்டிருக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

மாணிக்கவாசகர் அருளியுள்ள நான்கு திருஅகவல்களையும், இராமலிங்க அடிகளாரின் 'அருட்பெருஞ்சோதி அகவ' லையும் சார்ந்து கிருஷ்ணபிள்ளை ஒரு போற்றித் திருஅகவல் எழுதியுள்ளார். இவ்வகவலில் மொத்தம் 106 அடிகள் உள்ளன. இவை ஈரடி ஓரெதுகை அமைப்புக் கொண்டவை. இந்நூல் நெடுங்காலமாக ஏட்டுப் பிரதியாகவே இருந்துவந்தது. டாக்டர் வீ. ஞானசிகாமணி இந்நூலை உரையோடு பதிப்பித்துள்ளார். கவிஞர் இன்னும் விரிவாக இந்நூலை ஒருவேளை பாடி வைத்திருக்கலாம் அல்லது அங்ஙனம் பாடத் திட்டமிட்டிருக்கலாம் என்று ஞானசிகாமணி கருதுகின்றார்.[21]

இச் சிறுநூலைக் கவிஞர் 'உலகெலாம்' என்னும் தொடரோடு சேக்கிழாரைப் பின்பற்றித் தொடங்குகிறார்.

*'உலகெலாம் பரவ மொருதனி முதலாய்*
*அலகிடற் கரிதாய் அகிலா ரணமாய்....'*[22]

என்று அகவலின் முதலடி அமைகின்றது.

கவிஞர் தம்முடைய இரட்சணிய யாத்திரிகத்தின் முதற் பருவத்தின் முதற் பாடலைக் கடவுள் வாழ்த்துப் பாடலாக வழங்குகின்றார். அப்பாடல் 'உலகம் யாவும் தாமுள வாக்க லும்' என்ற கம்பரின் கடவுள் வாழ்த்துப் பாடலைத் தழுவி 'உலகம் யாவும் புரந்தரு ளுன்னதர்' என்று தொடங்குவது இங்குக் குறிப்பிடற்பாலதாகும்.

போற்றித் திருஅகவலின் முதல் முப்பத்தெட்டு அடிகளில் இறைவன் விண்ணகத்தில் வீற்றிருக்கும் மாண்பினை எடுத் துரைக்கின்றார் கவிஞர். அடுத்துவரும் அடிகளில் தமிழ்ச் சமயக் கவிஞர்களைப் போன்று இறைவனின் பெருமைகளைக் கூறி, இறுதியில் 'போற்றி' என்ற சொல்லை அமைக்கிறார். எடுத்துக் காட்டுக்குச் சில அடிகளை மட்டும் காண்போம் :

*ஒன்றுமூன் றாய ஒருவா போற்றி!*
*என்றென்றும் மாறா இறைவனே போற்றி![23]*
*அன்புரு வாய அப்பனே போற்றி!*
*மன்பதைக் கிரங்கிய வரதனே போற்றி![24]*
*இடர்க்கட லமிழ்ந்த ஏழையே முய்ய*
*அடைக்கலமாய அப்பனே போற்றி![25]*

கிருஷ்ணபிள்ளை தம்முடைய உரைநடை நூலான 'இரட் சணிய சமய நிர்ணயத்'தையும் தமிழ்ச் சமய மரபுகளை ஒட்டியே எழுதியுள்ளார். 'சிவஞான சித்தியார்', 'சங்கற்ப நிரா கரணம்' ஆகிய நூல்களில் அருணந்தி சிவாசாரியாரும் உமா பதி சிவாசாரியாரும் பிற சமய நியாயங்களை எடுத்தோதி அவற்றுக்கு மறுப்புத் தரும் முறையைத் தழுவி இந்நூலை எழுதியுள்ளார். இந்நூலுக்கு 'வஸ்து நிர்ணயப் பிரகரணம் வசன கிரந்தம்' என்ற துணைத் தலைப்புத் தரப்பட்டுள்ளது. இந்நூலை எழுதுவதற்குத் துணையாயிருந்ததாகக் கவிஞர் தரும் நூல் பட்டியலில், உபநிடதங்கள், பாகவதம், பாரதம்,

சிவதருமோத்தரம், விஷ்ணு புராணம், கந்த புராணம், தத்துவ நிஜானு போகசாரம், கைவல்ய நவநீதம், ஒழிவிலொடுக்கம், சிவஞான சித்தியார், அரங்கத்தந்தாதி, மேருமந்திர புராணம் போன்ற நூற் பெயர்கள் காணப்படுகின்றன. இந்நூலின் பன்னிரு சமயங்களின் கோட்பாடுகளை 126 பக்கங்களில் ஆசிரியர் எடுத்து விளக்குகிறார். 'சுபக்ஷ ஸ்தாபனம்', 'சந்தேக நிவிர்த்தி', 'முடிவுரை' ஆகிய இறுதி அத்தியாயங்களில் கிறிஸ்தவத்தை இரட்சணிய சமயம் என்று நிறுவ முயல்கிறார். ராபர்ட் டி. நொபிலிக்குப் பின் கிறிஸ்தவ இறையியலைத் தமிழ்ப் பின்னணி, தமிழ்ச் சார்பு ஆகியவற்றோடு விளக்க முனைந்தவர் கிருஷ்ணபிள்ளையே என்கிறார் பேராயர் அப்பாசாமி.[26] இந்நூலில் கிருஷ்ணபிள்ளை பிற சமயங்களைக் கடிந்திருப்பது உண்மையே ஆகும். சிறப்பாக உருவ வழிபாட்டை அவர் பெரிதும் சாடியுள்ளார். உருவ வழிபாட்டைக் கடியும் பட்டினத்தடிகள், சிவவாக்கியர் போன்றோரின் பாடல்களைத் துணைக்கழைக்கிறார். இதுபற்றி அப்பாசாமி பேசும்போது, 'Instead of expounding the Christian doctrine of worship from the Biblical authorities alone, he also used the insights of the Hindu thinkers. His conviction was that God had revealed himself also to them'[27] என்று விளக்கம் தருகிறார்.

இந்நூல் கடந்த நூற்றாண்டில் அறிஞர்கள் எழுதிய கருகலான நடையில் எழுதப்பட்டுள்ளது. வடமொழிச் சொற்களை கிருஷ்ணபிள்ளை பெரிதும் ஆண்டுள்ளார். கிறிஸ்தவத்தில் கிருஷ்ணபிள்ளைக்கு இருந்த பெரும்பற்றை இந்நூலில் காணமுடிகின்றது. இந்நூலின் முதற் பதிப்பு 1908லும், இரண்டாம் பதிப்பு 1956லும் வெளிவந்தன.[28] கிருஷ்ணபிள்ளையின் '*இரட்சணிய யாத்திரிகம்*', '*இரட்சணிய மனோகரம்*' போன்று இந்நூல் கிறிஸ்தவர்களிடையே இந்நூற்றாண்டில் சிறப்புப் பெறவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தகுந்ததாகும்.

# தமிழ்ச் சமயநெறியில் கிருஷ்ணபிள்ளை

கிறிஸ்தியானின் ஆன்மீக நெடும் பயணக் காட்சிகளைக் கவிஞர் தமிழகச் சமயப் பின்னணியோடு வழங்கிட முயல்கின் றார். கிறிஸ்தியானை ஒரு தமிழ் மகனாகவே படைத்துள்ளார் எனக் கூறலாம். பாவ உணர்வினைப் பெறும்போதும் பேரின் பப் பேற்றின் முன் சுவையாகச் சில பக்தியனுபவம் கிடைக்கும் போதும் அவனைத் தேவாரப் பாசுரங்கள் பாடவைக்கிறார் கிருஷ்ணபிள்ளை. தான் பெற்ற இன்பத்தைப் பிறர்க்கு எடுத் துரைக்கும் வகையில் 'நமரங்காள்', 'ஜெகத்தீரே' என மக் களை அழைத்துப் பாடவும் வைக்கிறார். அத்துடன் 'பன்யன்' என்பாரின் கிறிஸ்தியானுக்குக் கிடைக்காத செய்திகள் பலவற் றைத் தமிழ்க் கிறிஸ்தியான் பெற்றிடவும் செய்கிறார்.

பன்யன் என்பார் தம் நூலை எழுதிய சூழலில் விவிலியத் தில் வரும் படைப்பைப் பற்றியோ இஸ்ரவேலர் எகிப்தினின் றும் சிறை மீண்டு தாயகம் திரும்பியது பற்றியோ, இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு பற்றியோ, விவிலியத்தில் காணும் பரலோக வருணனைகள் பற்றியோ ஏதும் கூறவேண் டிய அவசியம் அவருக்கு ஏற்படவில்லை. அவருடைய வாசகர் களுள் மிகப் பெரும்பாலோர் கிறிஸ்தவர்கள் என்பது அவருக் குத் தெரிந்திருந்தது. ஆகவே அவைகளை எடுத்து விளக்க வேண்டிய அவசியம் அவருக்கு இல்லாதிருந்தது. ஆயின், கிருஷ்ணபிள்ளை அவைகளையெல்லாம் தம் காப்பியத்தில் தகுந்த இடங்களில் தக்க முறையில் நுழைத்துள்ளார். தமிழ் மக்களுக்கு விவிலியச் செய்திகளைப் பாவடிவில் வழங்க வேண்டும் என்ற ஆசை அவருக்கு இருந்துள்ளது. கம்பனைத் தழுவி அவர்தம் காப்பியத்தை அமைத்திருப்பதால், கம்பன் இடையிடையே துணைக் கதைகளைக் கூறிச் செல்லுதல் போன்று தாமும் விவிலியச் செய்திகளையும் வரலாறுகளை யும் கூறிட வேண்டும் என்று அவர் விரும்பியுள்ளார்.

கிறிஸ்தியான் முதன் முதலில் சந்திக்கும் நற்செய்திப் பணியாளன் அவனுக்குச் சுருக்கமாக அறிவுரை தந்து தோற் சுருள் ஒன்றை அவனுக்கு அளித்து அதனைப் படித்திடுமாறு கேட்டுக் கொள்கிறான். இது பன்யன் என்பாரின் மூல நூலில் காணப்படும் செய்தி. கிருஷ்ணபிள்ளை அந்த நற்செய்திப் பணியாளன் கிறிஸ்தியானுக்கு விவிலியச் செய்திகளையும் வரலாறுகளையும் விளக்கமாகச் சொல்லும் முறையில் எழுதிச் செல்கிறார்.

முத்தி இன்ப நகர்க்குச் செல்லும் நெறி யாது எனக் கிறிஸ்தியான் வினவிடும்போது நற்செய்திப் பணியாளன் விண்ணகத்தின் சிறப்புக்களைப் பற்றிக் கூற ஆரம்பிக்கின் றான். இப்பகுதியே ஆதிபருவத்தில், பரமராஜ்ஜிய படலம் என்னும் பெயருடையதாகத் தரப்படுகின்றது.

விண்ணகத்தை வருணிக்கும்போது நம் நாட்டுப் புராணங் களில் காணப்படும் தேவலோகக் காட்சிகள் கவிஞரின் கண் முன் வருகின்றன. அங்கு அருளெனும் மேகம் கிளர்ந் தெழும்பி அன்புக் கடலில் அமிர்தத்தை முகந்துகொண்டு இரட்சணிய மலையைப் போர்த்து நின்று, பின் கருணை மாரியைப் பொழிகின்றதாம். அதனால் பெருக்கெடுக்கும் புண்ணியமெனும் வெள்ளம் 'ஜீவ கங்கை'யாக அந்நாட்டில் ஓடிக்கொண்டிருக்கிறதாம்.

*அருண்முகில் கிளம்பி யன்பி னார்கலி யமுத மொண்டு*
*திருமலி தருர க்ஷணிய திவ்ய சிகரி போர்த்துப்*
*பொருவருங் கருணை மாரி பொழிந்தபுண்ணியமா நீத்தம்*
*ஒருமுக மாகி ஜீவகங்கையா யுலாய தன்றே,'*

விண்ணகத்தைப்பற்றிப் பேசும்போது கவிஞரால் கற்பகத் தருவை நினைத்திடாமல் இருக்கமுடியவில்லை. எனவே அதனைப் பற்றியும் பேசுகின்றார்.

விண்ணகத்துத் தூதர் கணமும் ஆங்கு வதியும் முக்தர்களும் கற்பக மரத்தின் நிழலில் தங்கிக் களிக்கின்றார்களாம். இறைத் தொண்டிலே காலத்தைக் கழிக்கின்றார்களாம்.

*கற்பக நிழலிற் றங்கிக் களிப்பவர்வான் கணங்களாவார்*
*தற்பரன் தொழும்பு செய்வர் தகைபெறு முத்தராவார்*[2]

தெய்வத் திருநகரின் அமைப்பைப்பற்றிக் கூற வரும் கவிஞர் அதனைத் தமிழகத்துத் திருக்கோவில்களின் தோற்றமுடையதாகக் காட்டிவிடுகின்றார்! தூயவராம் இறைவன் கொலுவீற்றிருக்கும் மண்டபம் அங்கு உள்ளது; அதனைத் தொடர்ந்து திருக்குமரனாம் கிறிஸ்துவின் ஆலயமும், பரிசுத்தாவி மன்றமும் உள்ளன என்கிறார். இத்திருநகர் 'உச்சித பட்டணம்', 'பொன்னகரம்' என்றெல்லாம் அவரால் போற்றப்படுகிறது. அதனைத் திரித்துவமாம் மூன்று சிகரங்கள் ஒளிர்கின்ற சீயோன் முதுகுன்றம் என்றும் அவர் கூறுகிறார். குன்றின்மேல் அமைந்த கோவில், ஆங்கிருக்கும் மன்றம், உள்ளே காணக் கிடக்கும் மூலத்தலம், ஆங்கெழும் முரசொலி யாவற்றையும் தொகுத்து ஒரு பாடலில் தருகிறார். இந் நகரத்தை 'சச்சிதானந்தபுரி' என்றும் அப்பாடலில் குறிக்கிறார்.

*உச்சிதபட் டணம்பதவி யூர்த்தகதி, பொன்னகரம்*
*உம்பர் நாடு*
*சச்சிதா னந்தபுரி தருமபுரி அடைக்கலப்பட்*
*டணஞ்சாம் ராச்சியம்*

*முச்சிகரி திகழ்சீயோன் முதுகுன்றம் மும்முரசம்*
*முழங்கு முன்றில்*
*அச்சுதவேந் தரசிருக்கை திருக்குமரா லயம் பரிசுத்*
*தாவி மன்றம்.*[3]

இப்பாடலைப் படிக்கும்போது சீறாப்புராணத்தை இயற்றி யிருக்கும் உமறுப் புலவர் தம் காப்புச் செய்யுளில், 'திருவுரு வாய் உணர் உருவாய் அறிவினொடு தெளிவிடத்துஞ் சிந்தி யாத அரு உருவாய் ...' என்று இறைவனின் சச்சிதானந்த நிலையை எடுத்துரைப்பதை எண்ணிப் பாராமல் இருக்க முடியாது.

அங்ஙனமே, 'கற்பகத் தரு', 'குமரன் கோவில்' போன்ற வற்றைப் படிக்கும்போது உமறுப் புலவர் முகம்மது நபியவர் களின் பெரிய தகப்பனாராகிய அபித்தாலிபு அவர்களைப் பற்றிப் பேசும் இடத்தில், 'இலகு செல்வியும் இவர்மனை முன்றில் வீற்றிருந்தாள்'[4] எனக் கூறுவதையும் இங்கே சேர்த் தெண்ணி மகிழாமல் இருக்க முடியாது.[5]

மு.மு. இஸ்மாயில் அவர்கள் உமறுப் புலவரைப்பற்றி எழுதியுள்ள கட்டுரையில் அக்கவிஞரின் தமிழ்த் தோய்வு நிலையை அவர் பாடல்களால் விளக்கும்போது, 'சீறாப் புராணத்தில் அரபு நாடு தமிழ் நாடாகிவிடுகிறது!' என்று கூறுகிறார்.[6] கிருஷ்ணபிள்ளையைப் பொறுத்தவரையில் இரட்சணிய யாத்திரிகத்தில் விண்ணகமே தமிழ் நாடாகி விடுகிறது!

தமிழ்ப் பண்பாட்டிற்கே உரித்தான சில மரபொழுக்கங் களைத் தம் காப்பியத்தில் வரும் விவிலிய மாந்தருக்குக் கவி ஞர் ஏற்றிவிடுகிறார். எடுத்துக்காட்டுக்கு ஆதாமும் ஏவாளும் ஏதேன்வனத்தில் நன்முறையில் இல்லறம் நடத்தி வந்தனர் எனக் கூறிவரும்போது, அவர்கள் கடினமாய் உழைத்தார்கள்;

கந்த மூலங்களை அருந்தி ஆற்றில் நீராடினார்கள் என்பதோடு நிறுத்தாமல், வானவர் நாட்டினின்றும் வந்திடும் விருந்தினர் களை எதிர்கொண்டழைத்து உபசரித்தனர் என்றும் கூறுவார் கிருஷ்ணபிள்ளை.

*வருந்திமெய் சலியார் வேலை வரன்முறை செய்து செய்து*
*திருந்துவர் சுனைகான் யாறு சிந்துநீர் வாவி யாடி*
*அருந்துவர் கந்த மூல பலங்களை அமரர் நாட்டின்*
*விருந்தெதிர் கொண்டு போற்றிப் பூசனை விருப்பிற் செய்வார்*[7]

ஆதாமை ஒரு முனிவராகவும் ஏவாளை ஒரு ரிஷி பத்தினியாக வும் அவர் காண்கிறார். அவர்கள் இருவரும் ஏதேன் வனத்தில் நாளும் தவம் புரிந்துகொண்டிருந்தனர் என்றும் கூறுகிறார்.

*ஒழுக்கமே கலன்க ளாக வுடைபரி சுத்த மாக*
*இழுக்கறு கரும மேனிக் கிடுநறுஞ் சாந்த மாகப்*
*பழுக்குமன் பத்தி யன்ன பானமாப் பகல்க ளெல்லாம்*
*வழுக்கறு மரபிற் போக்கி மாதவம் புரிவர் நாளும்*[8]

விவிலியக் கதைக் குறிப்புக்களில் அவர்கள் இங்ஙனம் அறிமுகப்படுத்தப்பட வில்லை. முதல் மனிதனாகவும் அவனுக் குத் துணையாக இறைவன் படைத்தளித்த பெண்ணாகவுமே அவர்கள் அறிமுகப் படுத்தப்படுகிறார்கள். திருக்குர்ஆனில் ஆதாம் ஒரு நபியாக மதித்துப் போற்றப்படுவதைப் போன்று கிருஷ்ணபிள்ளையும் ஆதாமையும் ஏவாளையும் பெருமதிப் புக்குரியவர்களாக அறிமுகப்படுத்துகின்றார்.

கம்பராமாயணத்தில் முனிவர்களும், அவர்தம் மனைவிய ரும், அவர்கள் வாழுமிடங்களும், அங்குள்ள பன்னசாலை களும் சிறப்பித்துச் சொல்லப்படும் மரபைத் தழுவிக் கிருஷ்ண

பிள்ளையும் யாத்திரிகத்தில் முனிவர்களையும், சித்தர்களை யும் படைக்கிறார். பன்னசாலைக் காட்சிகளைக் காட்டுகிறார்.

கிறிஸ்தியான் சிங்கார மாளிகை என்னும் இடத்தை வந்த டையும்போது அங்குள்ள பக்தி, விசுவாசம், அன்பு என்னும் கன்னியர்கள் அவனுக்கு நூல் அரங்கு, ஆயுதசாலை, ஆனந்த மலை என்னும் மூன்றிடங்களைக் காட்டுகின்றார்கள். ஆனந்த மலையை அவர்கள் காட்டிச் செல்வதை இராமன் சீதைக்குப் பல காட்சிகளை வனம் புகு படலத்திலும் (3-18) சித்திரகூடப் படலத்திலும் (2-36) காட்டும் வகையில் கவிஞர் தம் பாடல்களில் எடுத்துரைக்கின்றார். கம்பனின் பாடல் களைப் போன்றே 'பாராய்' 'காணாய்' என்று அப் பாடல்கள் அழகிய ஈற்றுச் சீரைக்கொண்டு முடிகின்றன.[9] ஆனந்த மலை யில் இறையாட்சி மலர்ந்துவிட்டதன் அறிகுறியாக அருட் காட்சிகள் தோன்றுகின்றன. 'மேசியா'வாகிய கிறிஸ்துவின் வருகை நிகழும்போது தோன்றிடப் போவதாக விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் கூறப்படும் சத்திய யுகத்தின் காட்சிகளை அவர் அடுக்கடுக்காகத் தருகின்றார். இப்பாடல் வரிசையில் வரும் ஒரு பாடலில் வானளாவ நிற்கும் கோவில்களையும், ஆசிரமங்களையும், அவற்றுள் காணப்படும் பர்ணசாலை களையும் (குடிசைகளையும்) கிறிஸ்தியானுக்குக் காட்டு கிறார்கள், சிங்காரமாளிகையின் கன்னியர்கள்.

*மன்னு நித்திய ஜீவனை விழைந்தநன் மதியோய்*
*சென்னி வான்தொடு மாதவப் பள்ளியுஞ்செறிந்த*
*அந்த வார்துற வாச்சிர மங்களும் அறவோர்*
*பன்ன சாலையு முறைமுறை திகழ்வ பாராய்!*[10]

மேசிய யுகத்தின் நற்பேறுகளைக்[11] கவிஞர் இந்தியச் சமய வாழ்வின் நற்பேறுகளான இல்லறம், துறவறம் ஆகிய இரண்

டின் வழியே விளக்கியிருப்பது பாராட்டற்குரியதேயாகும். மேசியச் சமய நெறியில் அவர் இந்தியச் சமய நெறியைக் காணவிழைகிறார்.

இதே வகையில் இறைமை பற்றிய கருத்துக்களையும் கூறிச் செல்கிறார் கவிஞர். இறைவனின் 'சச்சிதானந்த' நிலை வேதநாயக சாஸ்திரியாரைப் பெருமளவுக்குக் கவர்ந்துள்ளது. அவர் அத்தொடரைக் கிறிஸ்தவ இறைபெயர்த் தொடர்களோடு சேர்த்து ஆள்கிறார். கிருஷ்ணபிள்ளை சத்து-சித்து-ஆனந்தம் என்னும் இறைமை நிலையைக் கிறிஸ்தவத்தில் பேசப்படும் திரித்துவத்தோடு இணைக்கின்றார். அங்ஙனம் இணைக்கும்போது சத்து தந்தையாகிய இறைவனையும், சித்து மைந்தராகிய கிறிஸ்துவையும், ஆனந்தம் தூய ஆவியையும் குறிப்பதாக அவர் கூறவரவில்லை. இறைவன் தன்னில் தானே உள்ள நிலையை, இந்து சமயமும் கிறிஸ்தவமும் எடுத்தோதும் இருவகைக் கருத்துக்களும் ஆழ்நிலையில் ஒன்றுவதையே தம் பாடல் ஒன்றில் அழகுறச் சித்திரிக்கிறார். தேவார நடையில் அவர் எழுதியுள்ள அப்பாடலின் முதல் அடி இங்ஙனம் அமைந்துள்ளது:

*சத்தாய் நிஷ்களமாய் ஒருசாமிய முமிலதாய்*
*சித்தாய் ஆனந்தமாய்த் திகழ்கின்ற திரித்துவமே...*[12]

இதே கருத்தை இன்னொரு பாடலில் இங்ஙனம் கூறுவார்:

*சத்தாகிச் சித்து மாகித் தணப்பிலா னந்தமாகி*
*நித்தியந் திகழ்த்தி நிற்கு நிருமல திரியேகத்தின்...*[13]

இந்த மும்மை ஒருமை நிலையைக் கவிஞர் 'மூன்றாய கவடுடைய முதுமூலத் தனிப் பொருள்' என்றும் கூறிக் காட்டு கிறார்.[14] இறைவனைச் 'சச்சிதானந்த வேந்தன்'[15] என்றும் இறைவன் வீற்றிருக்கும் தலத்தைச் 'சச்சிதானந்தபுரி'[16] என் றும்கூட விளக்குகிறார். இனி இறைவனை (தந்தையாம் கட வுள்) 'சச்சிதானந்த வேந்தன்' என்று அவர் கூறுவதிலிருந்து அவனைச் 'சத்து' அளவில் மட்டும் நிறுத்தாமல் 'சித்து', 'ஆனந்தம்' ஆகிய இரண்டும்கூட அவனிடம் இருப்பு நிலை யில் உள்ளதைத் தெரிவிக்கிறார். இங்ஙனமே மைந்தனாம் கடவுளும் தூய ஆவியானவரும் 'சச்சிதானந்த மைந்தர்,' 'சச்சிதானந்த ஆவி' என்று விளங்கிக் கொள்ளப்படவேண்டும் என்பது அவர் கருத்து என்று தெளிய இடமுள்ளது.

இறைவன் அறிதற்கரியோன் என்ற உண்மையை நம் நாட்டுச் சமயப் பெரியோர்கள் பலபட எடுத்தியம்பியுள்ளார் கள்.

*'உரைக்கும் கடந்திங் குணர்வரியான்'*

என்பது அப்பர் வாக்கு.

*'தெரிவரி தாகிய தெளிவே', 'நினைப்பரிய தனிப்பெரியோன்'*

என்பன மாணிக்கவாசகரின் இறையியல் தொடர்கள்.

*'பாரார் விசும்புளார் பாதாளத்தார்*
*புறத்தார் ஆராலுங் காண்டற் கரியான்'*

என்றும் இறைவனின் அதிகடப்பு நிலையை அவர் குறிப்பார்.

இங்ஙனமே சுந்தரரும்,

*'அரிய நான்மறை அந்தணர் ஓவாது*
*அடிபணிந் தறிதற் கரியானை...'*

என்று பாடுகிறார்.

இக்கருத்துக்களை நெஞ்சில் நிறுத்தியுள்ள கிருஷ்ண பிள்ளை, 'விசும்புளா'ராம் தேவதூதர்கள் இறைவனை எவ்வளவுதான் போற்றிப் பாடினாலும் அவர்கள் பாடற் பொருளான இறைவனை அவர்கள் முழுதுமாக உணரமாட்டார்கள் என்று கூறி, 'பாரார்' எங்ஙனம் அறிதல்கூடும் என்னும் வினாவினைத் தம் பாடலொன்றில் எழுப்புகிறார்.

*நாட ருந்திரு நாட்டு வைபவம்*
*ஊட றிந்தறிந் தும்ப ரின்னிசை*
*பாடு வார்முழு துணரற் பாலரோ*
*வாடு மானிடம் வகுப்ப தெங்ஙனம்?*[17]

இறைவனின் தனிப்பெரும் பண்புகளைக் கிருஷ்ண பிள்ளை தம் பாடல் பலவற்றில் அழகுற எடுத்துரைக்கிறார். எத்தகு பாவியர்க்கும் இறைவன் மன்னிப்பருளுவோர் என்ற பண்பினையே அவர் பெரிதும் சிறப்பிக்கின்றார். கிறிஸ்தியான் ஒரு கட்டத்தில் தன் கொடிய பாவங்கட்கு மன்னிப்புக் கிடைக்குமோ என்று ஐயுற்றுக் கலங்கும்போது நற்செய்திப் பணியாளன் அவனுக்கு இறைவன் பாவிகள் மீது கோபப் படுபவரல்லர் என்ற உண்மையை இங்ஙனம் கூறிக் காட்டு கிறான் :

*பாபம் முற்றிய பாதகர் மெய்ம்மனத்*
*தாபம் முற்றித் தவிப்புறு வாரெனில்*

*சாப வெஞ்சிறை யிற்றளை வாரலர்*
*கோப முள்ளவ ரல்லர்கு ணக்கடல்*[18]

அத்துடன், அவர் நீதி மிகுந்தவர்; வாய்மையை நிலைநாட்டு கின்றவர்; பெருந்தயை கொண்டவர் என அடியார்கள் அனுப வத்தினின்று எடுத்தியம்புவதும் திருமறை வழிவரும் செய்தி யும் முக்காலும் உண்மையானவை என்பதையும் அந் நற் செய்தியாளன் கிறிஸ்தியானுக்கு நினைவுபடுத்துகின்றான் :

*நீதி யாதிபர் திண்ணயர் தம்மொழி*
*பேதி யார்நம்பி ரானெனப் பேசியும்*
*மாத யாபர வள்ளலெ னாமறை*
*ஓது சீர்த்தியும் உண்மையென் றோர்தியால்*[19]

இறைவன் தம்முடைய அருட்பேறுகளை மானிடரிடம் அண்டி வந்து வழங்குகின்றார்; அதனை இயேசுவின் மூலம் நிகழ்த்திக் காட்டியுள்ளார் என்ற தம் பற்றுறுதியைத் தமிழ்ச் சமயக் கருத்துக்களோடு தொடர்புடைய சொற்களாலும் தொடர்களாலும் விளக்கக் கவிஞர் பெரிதும் முயன்றுள்ளார். ஒரு பாடலை மட்டும் இங்கு எடுத்துக்காட்டுக்குக் காண்போம் :

*திருநோக்கால் திருவாக்கால் திருக்கரத்தால் திருவருளால்*
*தீண்டிக் கிட்டி*
*ஒருவரிய பிணிபிறவிக் குருடுசெவி டூமைமுடம்*
*உதிரப்பாடு*
*வெருவருபேய்க் கோரணிசித் தம்பிரமை திமிர்வாத*
*வியாதி யாதி*
*பருவரலுற் றோர்க்கருளி யிகபாநன் மையையளித்தார்*
*பரமன் மைந்தன்.*[20]

இப்பாடலின் முதல் வரியில் வரும் 'திருநோக்கு', 'திரு வாக்கு', 'திருக்கரங்கொண்டு தீண்டல்', 'திருவருள் பாலித் தல்' ஆகியவை சிவபெருமான் குருவாக எழுந்தருளும்போது நிகழ்வன என்பது சித்தாந்தக் கூற்றுக்கள் ஆகும். 'அருபரத் தொருவன் அவனியில் வந்து குருபரனாகி' அருளிடும் பெருமையைச் சித்தாந்தம் எடுத்துரைக்கும் தொடர்களைக் கிருஷ்ணபிள்ளை ஆர்வமிகுதியோடு இயேசுவுக்கு ஏற்றிச் சொல்கின்றார்.

இயேசுவின் உடலெடுப்பை நினைத்திடும்போதெல்லாம் வியப்புடன் கலந்த மகிழ்ச்சியைக் கவிஞர் வெளிப்படுத்துகின் றார். மாணிக்கவாசகரின் 'அச்சோப்பதிக' நடைப்போக்கைத் தழுவித் தம் பாடலொன்றில் அவ்வுணர்ச்சிகளை அவர் வெளிப்படுத்த முயன்றிருக்கிறார். அப்பாடலைக் காண்போம் :

*வானாடு தொழுதிறைஞ்சு மகிமையெலாம் புறநிறுவிக்*
*கானாடு மலர்க்குழலோர் கன்னிகருப் பாசயத்துற்*
*றூனாடு முடலெடுத்திங் குயிர்ப்பலிநேர்ந் துதவினைநீ*
*ஆநாடற் கெளிதோநின் னன்புநிலை யச்சோவே!*[21]

இன்னொரு பாடலில்,

*ஆனாநெறி யமைத்தாக்கிய அகிலாண்டவச் சுதனோர்*
*ஊன்நாடிய திருமேனிகொண் டுதித்தாருல குவப்ப*[22]

என்கிறார். 'ஊன் நாடும் உடல்', 'ஊன் நாடிய திருமேனி' எனக் கூறும்போது அவதாரக் கருத்தினையும் திருத்தோற்றக் கருத்தினையும் கொண்டு இயேசுவின் தெய்வ-மானிடத் தன்மைகளைக் கவிஞர் விளக்க முயன்றுள்ளார் எனத் தெளிய இடமுள்ளது. இயேசுவை 'நரசரீரம் கொண்ட வரராஜனே பரம

ஞானசம்பந்த குருவே' என்று பத்துப் பாடல்களில் விளக்குகிறார். இப்பகுதி இரட்சணிய மனோகரம், சந்நிதி முறையில் அமைந்துள்ளது.

மனிதன் இறைவனின் படைப்பின் மகுடமாக அமைந்துள் ளான்; பிற படைப்புக்கள் யாவும் அவனுக்கென்றே படைக்கப் பட்டுள்ளன என்ற விவிலிய கருத்தினை எடுத்துரைக்கும் வகையில்,

*'மலைகடல் ககன நாடு மதிகதிர் புனல்யா றோடை*
*நிலைமடு வாவி சோலை நிலவொளி மழைபல் பண்டம்*
*தொலைவிலாப் பயிர்வ ருக்கந் தொக்கபல் வளங்களெல்லாங்*
*கலைமதி மாந்தர்க் கென்றே கையளித் தனர்நங் கர்த்தன்'*[23]

என்று பாடுகிறார் கவிஞர்.

மனிதன் இறையுறவுடன் வாழத் தகுதியுடையோனாய் படைக்கப்பட்டவன் என்றாலும், இறைத் தொடர்பினைத் தானே சிதைத்துக்கொண்டுள்ள நிலையிலுள்ளான் என்னும் விவிலியக் கருத்தினை ஏற்போராய்க் கவிஞர் வீழ்ந்துபட்ட மானிடத்தின் பாவக்கறையையும் மாசு, வினை போன்றவை களையும் விளக்குகின்றார்.

சித்தாந்தத் தொடராகிய 'மும்மலம்' என்பதனைக் கவிஞர் சில இடங்களில் கிறிஸ்தவ இறையியல் பின்னணியில் பொருத்திப் பார்க்கிறார்.

உலக ஆசைகளில் சிக்கி உழலும் இலௌகீகன் என்பா னின் பொய்த் தோற்றம் எத்தகையது என்பதைக் கவிஞர் கூற வரும் போது,

*'மீயுற வேதியர் வேடந் தோன்றிடும்*
*வாயுற் மறைத்திரு வசனம் வந்திடும்*
*வீயுறா வறுவகை விகார மும்மலந்*
*தீயுறு மனத்திடைச் செறிந்து நிற்குமால்'*[24]

என்கிறார்.

இப்பாடலில் வரும் 'அறுவகை விகாரங்கள்' என்பன காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய வற்றையும், 'மும்மலம்' என்பது ஆணவம், கன்மம், மாயை என்பனவற்றையும் குறிப்பன என யாத்திரிக உரையாசிரியர் கூறுவார்.[25]

மற்றோரிடத்தில் 'மும்மலத்தளை' என்னும் தொடரைக் கவிஞர் ஆளுகின்றார். அத்தொடர் வரும் பாடல்,

*'அம்மலைச் சாரலை யடுத்தங் கோர்சிறை*
*மும்மலத் தளையொடு முடங்கிப் பாந்தள்போல்*
*அம்மகே டுணர்கிலா வசடர் மூவர்தாங்*
*கைம்மிகு துயில்கொளக் கருதி நோக்கினான்'*[26]

என்று அமைந்துள்ளது.

பாவத்தின் பிடிப்புப்பற்றிப் பேசும்போது கவிஞர் அதனை 'நரஜென்ம தோடம்' என்கிறார். அது இறையருளால் தீரவல் லது என்றும் கூறுகின்றார். ஜீவபுஷ்கரிணி என்ற தடாகத்தின் நீரை அருந்தியதும் தலைமைக் கதைமாந்தனாகிய கிறிஸ்தி யான்,

*'தாகந் தீர்ந்தது; தீர்ந்தது பசிப்பிணி; சமழ்த்த*
*சோகந் தீர்ந்தது; தீர்ந்தது நரஜென்ம தோடம்'*[27]

என்று மகிழ்ச்சியோடு தன் புதிய அனுபவத்தை எடுத்துரைக்கின்றான்.

அடுக்கிய விறகுச்சுமை எத்தனை பெரிதாக இருந்தாலும் அதனைச் சாம்பலாக்கிட ஒரு சிறு நெருப்பே போதும்; அங்ஙனமே இறைபெயர் ஒன்றினைக்கொண்டே கன்மபாவக் குவியலைப் பொசுக்கித் தீர்க்கலாம் என்று அப்பர் பெருமான் கூறுவார்.

அக்கூற்றின் வழிப்பட்ட அனுபவத்திற்கு இணையான தொரு அனுபவத்தைக் கிறிஸ்தியான் பெற்றிட்டதாகக் கவிஞர் எடுத்துரைக்கின்றார்.

மீட்புக் கவிஞர் என்று போற்றப்பெறுகின்ற கிருஷ்ண பிள்ளை ஒரு சிறந்த பக்திக் கவிஞரும் ஆவார். 'யாத்திரிக' நூலிலும் 'மனோகர'த்திலும் நூற்றுக்கணக்கில் அவர் பக்திப் பாசுரங்களைச் சேர்த்துள்ளார். அவற்றுள் பெரும்பாலானவை அறிக்கைப் பாடல்கள் ஆகும். தம்மைப் போன்ற கொடிய பாவி எவருமில்லை; தாம் வன்னெஞ்சன், வன்கணன், படிறன், பொய்யன், நாயையும் பேயையும் ஒத்தவன் என்பன போன்ற பணிவு மிகுந்த அறிக்கைத் தொடர்களும் அவற்றைத் தொடரும் முறையீடுகளும் அப் பாசுரங்களில் உள்ளன.

திருநாவுக்கரசரின் 'பத்தனாய்ப் பாடமாட்டேன்' என்ற பாடலைத் தழுவிக் கவிஞர் பாடியுள்ள ஒரு பாடலை இங்கு எடுத்துக்காட்டுக்குத் தருகின்றேன் :

*பத்தனாய்ப் பாடேன் சுத்தனா யொழுகேன்*
*பகலெலாம் பாவமே பழகி*
*எத்தனாய்க் கழித்தேன் இன்றுளேன் நாளை*
*இலனென எண்ணவும் படுவேன்*

*பித்தனேற் குனது பேரரு ளல்லால்*
*பிழைக்குமா றில்லையா தலினால்*
*அத்தனே யடியேன் நின்சர ணடைந்தேன்*
*அஞ்சலென் றடைக்கல மருளே!*[28]

பக்தி வழியே இறைவனோடு தமக்குள்ள உறவு நெருக்க நிலையைக் கிருஷ்ணபிள்ளை இறைவனை அன்னை தந்தை யாய், உற்ற நண்பனாய், ஆண்டையாய் விளித்துப் பாடும் பாடல்கள் பலவற்றில் எடுத்துக்காட்டுகிறார். சிறப்பாக, தலைவி பாவத்தில் நின்று தலைவனின் வருகைக்காக ஏங்கும் ஆன்மப் பிரலாபநிலையை இருபத்தொன்பது பாடல்களில் வடித்துத் தருகின்றார். ஆன்ம நாயகி கிறிஸ்துவின்மேல் கொண்டுள்ள காதலை அவற்றுள் ஒரு பாடலில் இங்ஙனம் கூறிக்காட்டுகிறார் :

*அருமை நாயகன் மூட்டிய ஆசைநோய் தணியா*
*தெரிமுகத் துற்ற மெழுகென விளகியுள் ளுடைவாள்*
*திருமுகச் செவ்வி காண்குறுஞ் செவ்வி நீளிதெனக்*
*கருமுகிற் றுளி காண்குறாப் பயிரெனக் கரிவாள்.*[29]

இறைவனைப் பற்றிக்கொள்ளும் ஆற்றல் தமக்கு இல்லை என்றும் அவரே தம்மை இறுகப் பற்றிக்கொண்டு அப்பிடியை என்றும் விடாமல் இருக்கவேண்டும் என்றும் ஒரு பாடலில் கவிஞர் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறார் :

*'பரசேன் பற்றுகிலேன் என்னைப் பற்றியப் பற்றுவிடாய்*
*அரசே உன்னையல்லால் எனக் கார்துணை யாருறவே!'*[30]

இவ்வடிகளைப் படிக்கும்போது தாய்க்குரங்கு தன் குட்டி யைக் கவ்விக்கொள்ளும் போக்கைச் சிறப்பிக்கும் தம்முடைய

வைணவப் பின்னணியை மனத்தில் கொண்டு கவிஞர் பாடு வதை நன்கு கண்டிட முடிகின்றது. குரங்குக்குட்டி தாய்க்குரங் கைப் பற்றிக் கொள்ளும் நியாயமும் அவர்க்கு உடன்பாடே என்பது வேறு சில பாடல்களின் வழியே வெளிப்படுகின்றது. இயேசுபிரானை இதயத்தால் அவர் சிக்கெனப் பிடித்து நிறுத் தும் பெற்றியை இங்ஙனம் ஒரு பாடலில் கூறிக் காட்டுகிறார்.

*'மூசு முண்முடி முடித்திட முனிவுறா முகசரோ ருகப்போதும்*
*நேச மோடுபே துருமனங் கசிந்தழ நோக்கிய*
*நெடுங்கண்ணும்*
*தேசு குன்றிவெங் குருதிநீர் பொழிதரு செய்யமே*
*னியுமெம்மான்*
*எசு நாயகன் சரணதா மரையுமென் னிதயம்விட் டகலவே.*[31]

அடியான் இறைவனை இறுகப் பற்றிக்கொள்வதும் அதே நேரத்தில் 'பால் நினைந்தூட்டும் தாய்' போன்ற இறைவனின் அணைப்பில் அவன் இருத்தலும் கிருஷ்ணபிள்ளையைக் கவர்ந்த விவிலியக் கருத்துமாகும் என்பது இங்குக் குறிப்பிடத் தகுந்ததாகும். பழைய ஏற்பாட்டுச் சங்கீத புத்தகத்தில் எபிரேய பக்திக் கவிஞர் ஒருவர், 'என் ஆன்மா உம்மைப் பற்றிக் கொண்டே இருக்கிறது; உமது வலது கரம் என்னைத் தாங்குகி றது' என்று கூறுவார்.[32]

நம் நாட்டுப் பக்திக் கவிஞர்கள் இறைவனின் திருக் கோலச் சிறப்பினை ஆலயங்களில் கண்டு மகிழ்ந்து தங்கள் உள்ளத்தின் உணர்ச்சிகளைப் பதிகங்களில் தந்திடுவதைப் போன்றே கிருஷ்ணபிள்ளையும் இயேசு சிலுவையில் தொங்கி டும் காட்சியை மனக்கண்ணால் கண்டு அத்திருக்கோலத்தின் சிறப்பைப் பலபட விளக்குகின்றார். பேயாழ்வார்,

*'திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்*
*அருக்கன் அணிநிறமும் கண்டேன்—செருக்கிளரும்*
*பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்*
*என்னாழி வண்ணன்பால் இன்று'*[33]

என்று திருக்கோவலூரில் தாம் கண்ட திருக்காட்சியனுப வத்தைப் பாடியிருப்பதையும், திருநாவுக்கரசர் திருவை யாற்றில் தமக்குக் கிட்டிய அருங்காட்சியை,

*'கண்டேனவர் திருப்பாதம்*
*கண்டறியாதன கண்டேன்'*[34]

என்று பாடி மகிழ்வதையும் தழுவிக் கிருஷ்ணபிள்ளை 'விசு வாசக்காட்சி' என்னும் பதிகத்தின் பத்துப் பாடல்களில் சிலு வைக் காட்சியைத் தாம் காணும் பெற்றியை விளக்குகின்றார். சிலுவை ஒரு முரண்பாட்டுச் சின்னம் என்பதனை உணர்ந்து கொண்டு அதில் இணைய முடியாதவை இணைகின்றன என் பதையும் அறிந்தவராய், ஏதுமற்ற நிலையில் யாவராலும் கைவிடப்பட்டு அவமானக் கோலத்தில் அதில் தொங்குபவர் உண்மையில் வெற்றி வீரர் என்பதை அவர் விளக்கத் துடிக் கிறார். ஒரு பாடலில்,

*படிசாய்த்த பெரும்பாவப் பரஞ்சுமந்து பரமர்திரு*
*மடிசாய்த்த திருமேனி வதைந்திழிசெங் குருதியுக*
*முடிசாய்த்த பெருமானை முதலகை தலைநசுக்கிக்*
*கொடிசாய்த்த கொற்றவனைக் குருசின்மிசை கண்டேனே*[35]

என்கிறார்.

இரத்தம் வடியச் சிலுவையில் முடிசாய்த்துக் கிடப்பவ ரையே பேயின் தலையை நசுக்கி அவன் கொடியைச் சாய்த்தோ

ராக அவர் காண்கிறார். இணைய முடியாதவைகளை இணைத்துக் காட்டுகிறார். சிறுமையும் பெருமையும் ஒன்றை ஒன்று தழுவி நிற்பவைகளாக மட்டுமல்ல, சிறுமைக்குள் பெருமை அடங்கி நிற்பதாக மட்டுமல்ல சிறுமையே பெருமை என்பதாக அமையும் முரண்பாட்டுண்மையை அவர் எடுத்துக் காட்டுகிறார். கண்டம் கறுத்தவனே அழகுடைய சொக்கனாகவும், கோரவடிவினனே பேரருளாளனாகவும் அமைவதைப் பக்தர்கள் கண்டு வியந்து பாடுவதைப் போன்றே கிருஷ்ண பிள்ளையும் பாடுகிறார்.

நம் நாட்டுப் பக்திக் கவிஞர்கள் இறைவனைக் குறிக்க ஆண்டிடும் இனிய உருவகச் சொற்களான பொன், மணி, முத்து, தூண்டா விளக்கு, அமுது, தீங்கனி போன்றவற்றைச் சிலுவையில் கொடுமைக்காளாகிய நிலையில் தொங்கிடும் இயேசுவுக்கு ஏற்றி மகிழ்கின்றார் கவிஞர் :

*'காயொளிற் கதிர்பரப்புங் களங்கமினி தியின்சுடரைப்*
*பாயொளிகொள் பசும்பொன்னைப் பணிக்கருஞ்*
*சிந்தாமணியைத்*
*தூயொளிகொள் நித்திலத்தைத் தூண்டாத சுடர்விளக்கைச்*
*சேயொளிகொள் செம்மணியைச் சிலுவைமிசைக்*
*கண்டேனே!'*[36]

என்றும்,

*'உள்ளமுவப் புறுதேனை யுயிர்க்குயிரை யுலவாத*
*தெள்ளமுதைத் தீங்கனியைச் சிலுவைமிசைக்*
*கண்டேனே*[37]

என்றும் அவர் பாடுகிறார்.

சைவ சமயக் குரவர்களின் நமச்சிவாயப் பதிகங்களைத் தழுவிக் கிருஷ்ணபிள்ளை 'திருநாமப்பதிகம்' என்னும் தலைப்பில் பதினொரு பாடல்களை இயற்றியுள்ளார் :

*'மன்னுயிர்த் தொகுதியீ டேற வானினும்*
*இந்நிலத் திலும்பிறி திலையென் றேமறை*
*பன்னியேத் தெடுப்பது பாவ ஜீவருக்*
*கின்னமு தாயது இயேசு நாமமே'*[38]

என்பது அப்பதிகத்தின் முதற்பாடல்.

இந்தப் பதிகத்தைக் கவிஞர் தம் வாழ்க்கையின் எந்தக் கட்டத்தில் இயற்றினார் என்பது நமக்குத் தெரியாது. ஆயின், அவர் வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் அவர் உயிர் பிரிவதற்குச் சிறிதே முன்னர் இப்பதிகத்தின் கருத்துக்கள் எந்த அளவுக்கு அவர் உயிரோடும் உணர்வோடும் ஒன்றியிருந்தன என்னும் உண்மை தெளிவாகியதாக ஒரு குறிப்பு உள்ளது.

கவிஞர் மரணப்படுக்கையில் இருந்தபோது ஏமி கார்மிக்கேல் அம்மையார் அவரைக் காண வந்தார். கவிஞருக்குச் சுயவுணர்வு இல்லை என்று அவருக்குச் சொல்லப்பட்டது. ஒரு அட்டையில் இயேசு என்ற பெயரை அம்மையார் எழுதி அதனைக் கிருஷ்ணபிள்ளைக்கு முன் காட்டினார். அதைக் கண்ணுற்ற அளவில் அவர் முகத்தில் ஒளி படர்ந்தது; புன்னகையும் புரிந்தார்; வலது கரத்தை உயர்த்த முயன்றார். அருகிலிருந்தவர்கள் உதவியோடு கரத்தை உயர்த்திக்கொண்டதும் அட்டையிலிருந்த இயேசு என்ற எழுத்துக்களின் மேல் தம் ஆள்காட்டி விரலை வைத்து அவற்றின் வடிவில் அதனை மெள்ள ஓட்டிச் சென்றார். இறுதியில் அவர் மூச்சுப் பிரியும் போது அவர் விரல் அந்த அட்டையின்மீதே இருந்தது.[39]

இந்தக் குறிப்பினைப் பின்னணியாக வைத்துக்கொண்டு அவருடைய திருநாமப் பதிகத்தை இன்று படிக்கும்போது அவர் பாடல்களில் உள்ள சொற்கள் எத்தனை உயிர்ப்புடையவை என்பதைத் தெரிந்துகொள்ள முடிகின்றது.

*'நன்னெறி புகுத்திடும் நவையகி னீக்கிடும்*
*இன்னலை யகற்றிடும் இகல்செ குத்திடும்*
*உன்னதத் துய்த்திடும் ஒருங்கு காத்திடும்*
*எந்நலத் தையுந்தரும் யேசு நாமமே'*[40]

என்பன போன்ற பாடல்கள் அப்பதிகத்தில் இடம் பெற்றுள்ளன.

# குறிப்பெண் விளக்கம்

## ஜான் பன்யனும் கிருஷ்ணபிள்ளையும்

1. எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 1894, பக்கம் XVI.

2. எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 1894, பக்கம் 62.

3. பேராயர் சாலமோன் துரைசாமி, கிருஷ்ணபிள்ளை 150-ஆவது பெருமங்கலத் திருவிழாத் தலைமைப் பேருரை, திருச்சி, நல்ல மெய்ப்பன் அச்சகம், ஏப்ரல் 1977, பக்கம் 5-6.

4. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய மனோகரம்**, 3, 4.

5. P. John Brown, **John Bunyan his Life, Times and Work,** The Huibert Publishing Company (Ltd), London, 1928, p. 481.

6. நெடுங்காலமாக ஏட்டுப் பிரதியாகவே இருந்து வந்த இந்நூலை அரும்பாடுபட்டுத் தேடிக் கண்டுபிடித்து, டாக்டர் வீ. ஞானசிகாமணி, பயனுள்ள அடிக் குறிப்புக்களோடு 1977-இல் வெளியிட்டுள்ளார். **பாளையங்கோட்டை, எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை கிறிஸ்தவனான வரலாறு**, வேதாகம மாணவர் பதிப்பகம், 7, அங்காடித் தெரு, அயன் புரம், சென்னை-600 023.

7. John Bunyan, **The Pilgrim's Progress**, Marshall Morgan and Scott Ltd, London, p. X.

8. Ibid, Page 10.

9. John Bunyan, **Grace Abounding to the Chief of Sinners** (Rewritten in Modern English) Moody Press, Chicago, 1959.

10. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, சிறப்புப்பாயிரம் 10.

11. John Bunyan, **Pilgrim's Progress**, p. viii.

12. **கலிங்கத்துப் பரணி**, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1965, பக்கங்கள் 9-31.

13. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, கடை திறப்புப் படலம் 12, 17.

14. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, கடை திறப்புப் படலப் பக்கம் 44-45.

15. Quoted by M.D. Devadoss in 'A Historical Sketch of Some Leading Converts to Christianity' Vide **'Fifty years Pilgrimage of a Convert'** A.S. Appasamy, C.L.S., Madras, 1924, p. 150.

16. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, ஆதிபருவம் வரலாற்றுப் படலம், செய். 8, 9.

17. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 1894, பக்கம் XII, XIII.

(இந்நூலைப் பின்னர் C.L.S. இரு பகுதிகளாக வெளியிட்டுள்ளது. முதல் பருவத்திற்கும் இரண்டாம் பருவத்தின் முதல் இரண்டுப் படலங்கட்கும் மட்டுமே உரை எழுதப்பெற்றுள்ளது. 1977 ஏப்ரல் திங்களில் கவிஞரின் 150-ஆம் ஆண்டு விழாக் கொண்டாடப்பட்ட போது **இரட்சணிய யாத்திரிகச் சுருக்கம்**, என்னும் நூலை C.L.S. வெளியிட்டது. இந்நூலில் 876 பாடல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அடிக்குறிப்புக்களுடன் வழங்கப்பட்டுள்ளன. நூலின் பதிப்பாசிரியர்: பொன்னு. ஆ. சத்தியசாட்சி).

## தமிழ் இலக்கிய நெறியில் கிருஷ்ணபிள்ளை

1. **கம்ப ராமாயணம்**, பாலகாண்டம், ஆற்றுப்படலம், பாடல் 19.
2. சேக்கிழார், **பெரிய புராணம்**, திருமலைச் சருக்கம், திருமலைச் சிறப்பு, பாடல் 56.
3. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, ஆதிபருவம், பரமராச்சி யப் படலம், பாடல் 5.
4. **கம்ப ராமாயணம்**, ஆற்றுப் படலம் 20.
5. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, ஆதிபருவம், பரமராச்சி யப் படலம், பாடல் 10.
6. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, ஆதிபருவம், சிருட்டிப் படலம், பாடல் 13.
7. **கம்ப ராமாயணம்**, பாலகாண்டம், நகரப் படலம், பாடல் 73.
8. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, ஆதி பருவம், ஜீவ புஷ்கரணிப் படலம், பாடல் 9.
9. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, நிதான பருவம், மரணச் சூழலிறுத்த படலம், பாடல் 16.
10. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, குமார பருவம், இரட் சணியசரிதப் படலம், பாடல் 320.
11. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, ஆதி பருவம், சுவிசேஷ மார்க்கப் படலம், பாடல் 23.
12. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, ஆதி பருவம், சுவிசேஷ மார்க்கப் படலம், பாடல் 15.
13. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, குமார பருவம், இரட் சணியசரிதப் படலம், பாடல் 308.
14. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, குமார பருவம், இரட் சணியசரிதப் படலம், பாடல் 271.
15. Pilgrim's Progress, p. 55.

   '... I espied a little before me a cave where two giants **Pope** and **Pagan** dwelt

in old time, by whose power and tyranny, the man whose bones, blood, ashes etc. lay there, were cruelly put to death.'

16. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, நிதான பருவம், மரணச் சூழலிறுத்த படலம், பாடல் 75.

17. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய மனோகரம்**, பால்ய பிரார்த்தனைப் பாடல்.

18. அப்பரடிகள், **தேவாரம்**, நாலாந்திருமுறை, 78,1.

19. தொண்டரடிப்பொடி ஆழ்வார், **திருமாலை**, 28.

20. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய மனோகரம்**, 19, 1.

21. வீ. ஞானசிகாமணி, பதிப்பாசிரியர், **போற்றித் திருஅகவல்**, வேதாகம மாணவர் பதிப்பகம், 7, அங்காடித் தெரு, சென்னை, 1977, பக்கம் 15.

22. கிருஷ்ணபிள்ளை, **போற்றித் திருஅகவல்**, வேதாகம மாணவர் பதிப்பகம், 1977, அடி 1.

23. கிருஷ்ணபிள்ளை, **போற்றித் திருஅகவல்**, வேதாகம மாணவர் பதிப்பகம், 1977, அடி 40.

24. கிருஷ்ணபிள்ளை, **போற்றித் திருஅகவல்**, வேதாகம மாணவர் பதிப்பகம், 1977, அடி 42.

25. கிருஷ்ணபிள்ளை, **போற்றித் திருஅகவல்**, வேதாகம மாணவர் பதிப்பகம், 1977, அடி 51.

26. A.J. Appasamy, **Tamil Christian Poet**, U.S.C.L. London, 1966, p. 69.

27. Ibid, p. 99.

28. **இரட்சணிய சமய நிர்ணயம்** என்ற நூலின் இரண்டாம் பதிப்பைக் கொணர்ந்தவர், க.சி.அ. வேதரத்தினம், சந்திரா பிரிண்டர்ஸ், சிவகாசி, 1956.

## தமிழ்ச் சமய நெறியில் கிருஷ்ணபிள்ளை

1. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, பரமராச்சியப் படலம், பாடல் 2.
2. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, பரமராச்சியப் படலம், பாடல் 30.
3. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, பரமராச்சியப் படலம், பாடல் 33.
4. உமறுப் புலவர், **சீறாப்புராணம்**, விலாதத்துக் காண்டம், புகையறா கண்ட படலம், பாடல் 2.
5. மு.மு. இஸ்மாயில், **செவிநுகர் கனிகள்**, வானதி பதிப்பகம், சென்னை, 1974, பக்கம் 76.
6. மு.மு. இஸ்மாயில், **செவிநுகர் கனிகள்**, வானதி பதிப்பகம், சென்னை, 1974, பக்கம் 73.
7. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, ஆதி பருவம், சிருட்டிப் படலம், பாடல் 17.
8. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, ஆதி பருவம், சிருட்டிப் படலம், பாடல் 8.
9. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, குமார பருவம், காட்சிப் படலம், பாடல் 49-71.
10. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, குமார பருவம், காட்சிப் படலம், பாடல் 62.
11. Bunyan, **Pilgrim's Progress**, p. 47.
    இந்நற்பேறுகளை பன்யன் மிகச் சுருக்கமாகச் சில வரிகளில் தருகிறார்: 'he saw a most pleasant mountainous country, beautiful with woods, vineyard, fruits of all sorts, flowers also; with springs and fountains, very delectable to behold. Then he asked the name of the country. They said that it was Immanuel's Land; and it is as common, said they, as this hill is, to and far all the pilgrims. And when thou comest there, from thence, said they,

thou mayest see to the gate of the celestial city, as the shepherds that live there will make appear.'

12. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய மனோகரம்**, 20, 1.

13. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, இரட்சணிய பருவம், சுவர்க்காரோகணப் படலம், பாடல் 2.

14. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, ஆதி பருவம், சுமை நீங்கு படலம், பாடல் 16.

15. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, ஆதி பருவம், சிருட்டிப் படலம், பாடல் 15.

16. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, பரமராச்சியப் படலம், பாடல் 33.

17. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, பரமராச்சியப் படலம், பாடல் 29.

18. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, லௌகீகப் படலம், பாடல் 80.

19. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, லௌகீகப் படலம், பாடல் 81.

20. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, சுவிசேஷ மார்க்கப் படலம், பாடல் 160.

21. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, சுமைநீங்கு படலம், பாடல் 15.

22. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, சுவிசேஷ மார்க்கப் படலம், பாடல் 19.

23. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, சிருட்டிப் படலம், பாடல் 3.

24. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய யாத்திரிகம்**, லௌகீகப் படலம், பாடல் 53.

25. கிருஷ்ணபிள்ளை, *இரட்சணிய யாத்திரிகம்*, உரைப்பகுதி, பக்கம் 499.

26. கிருஷ்ணபிள்ளை, *இரட்சணிய யாத்திரிகம்*, ஆதிபருவம், துயி லுணர்த்துப் படலம், பாடல் 3.

27. கிருஷ்ணபிள்ளை, *இரட்சணிய யாத்திரிகம்*, ஆதிபருவம், ஜீவபுஷ்க ரணிப் படலம், பாடல் 39.

28. கிருஷ்ணபிள்ளை, *இரட்சணிய மனோகரம்*, கையடைப்பதிகம், பாடல் 2.

29. கிருஷ்ணபிள்ளை, *ஆன்மப் பிரலாபம்* 5.

30. கிருஷ்ணபிள்ளை, *இரட்சணிய மனோகரம்*, 20, 7.

31. கிருஷ்ணபிள்ளை, *இரட்சணிய மனோகரம்*, பன்மணி, II 2.

32. *சங்கீதம்* 63:8.
'My soul clings to thee; thy right hand upholds me'.

33. பேயாழ்வார், *மூன்றாந் திருவந்தாதி*, செய்யுள் 1.

34. அப்பரடிகள், *தேவாரம்*, 27:1.

35. கிருஷ்ணபிள்ளை, *இரட்சணிய மனோகரம்*, விசுவாசக் காட்சி, பாடல் 2.

36. கிருஷ்ணபிள்ளை, *இரட்சணிய மனோகரம்*, விசுவாசக் காட்சி, பாடல் 10.

37. கிருஷ்ணபிள்ளை, *இரட்சணிய மனோகரம்*, விசுவாசக் காட்சி, பாடல் 1.

38. கிருஷ்ணபிள்ளை, *இரட்சணிய மனோகரம்*, திருநாமப்பதிகம், பாடல் 1.

39. Amy Carmichael, H.A. Krishnapillai, p. 6. Vide A.J. Appasamy, **Tamil Christian Poet**, p. 66.

40. கிருஷ்ணபிள்ளை, *இரட்சணிய மனோகரம்*, திருநாமப்பதிகம், பாடல் 6.

## கிறிஸ்தவக் கவியரசர் கிருஷ்ணபிள்ளை அவர்களின் படைப்புகள் பற்றி எங்களின் வெளியீடுகள்

1. இரட்சணிய யாத்திரிகம் (சுருக்கம்)
   — பொன்னு. ஆ. சத்தியசாட்சி
2. முக்தி வழிப் பாமாலை
   — எச். ஆ. கிருஷ்ணபிள்ளை
3. இரட்சணிய யாத்திரிகம் எனும் மீட்புநெறிப் பயணக்காவியம் நான்காவது பகுதியாகிய ஆரணிய பருவம்
   பதிப்பாசிரியர்கள் : டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ்
   டாக்டர் மோசஸ் மைக்கேல் பாரடே
4. இரட்சணிய யாத்திரிகம் எனும் மீட்புநெறிப் பயணகாவியம் ஐந்தாவது பகுதியாகிய இரட்சணிய பருவம்
   பதிப்பாசிரியர்கள் : டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ்
   டாக்டர் மோசஸ் மைக்கேல் பாரடே
5. இரட்சணிய சரிதப் படலம்
   பதிப்பாசிரியர்கள் : டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ்
   டாக்டர் மோசஸ் மைக்கேல் பாரடே
6. கிறிஸ்தவக் கவியரசர் ஹென்றி ஆல்பிரடு கிருஷ்ணபிள்ளை வாழ்க்கை சுருக்கம்
   — பசுமலைப் புலவர் வீ.ப. நடராசன்
7. போற்றித் திருஅகவல்
   — எச்.ஆ. கிருஷ்ணபிள்ளை
   — பதிப்பாசிரியர் : வீ. ஞானசிகாமணி
8. மீட்புக் கவிஞரின் இரட்சணிய தேவாரப் பாடல்கள்
   — டி.ஏ. தனபாண்டியன்
9. மீட்புக்கவிஞர் கிருஷ்ணபிள்ளையின் தன் வரலாறு
   — எச். ஆ. கிருஷ்ணபிள்ளை
   — பதிப்பாசிரியர் : வீ. ஞானசிகாமணி

ஆங்கிலம்

1. **H.A. Krishnapillai**
   — Amy Carmichael
2. **Vedanayagam Shastriar and Krishnapillai**
   — Dr. T. Dayanandan Francis

CLS

**CHRISTU NERIP PĀVALARGAL**

Dr. T. Dayanandan Francis

விலை ரூ. 25.00 (இந்தியாவில் மட்டும்)